# காற்றுவெளி

கலை இலக்கிய இதழ்



தை - 2024

**காற்றுவெளி**

கலை இலக்கிய இதழ்

தை - 2024

படைப்புக்கள் அனுப்ப :

neythal34@gmail.com

mahendran1954@hotmail.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு.

- ஆசிரியர் : சோபா
- அட்டை ஓவியம் : இணையம்
- வடிவமைப்பு : நெகிழன்
- ஆலோசனைக்கு/நூல் அனுப்ப :
  R.Mahendran,
  34,Redriffe Road, Plaistow, Londan E13 0JX, Uk
- சந்தா : 12 இதழ்களுக்கு 8.00 பவுண்ட்
- R.Mahendran,
  A/C No: 90759821
  Sort.Code: 20-67-88,
  SWIFTBIC BUKBGB22
  IBAN GB80 BUKB 2067 8890 7598 21
  BARCLAYS BANK (PLAISTOW BRANCH)


வணக்கம்,

நலமா?

புதிய ஆண்டில் சந்திக்கிறோம்.

மார்கழி இதழுக்குக் கிடைத்த வரவேற்புகள் நமது நம்பிக்கையினை மேலும் வலுப்படுத்துவதாக அமைந்துவிட்டது.ஒவ்வொரு புத்தாண்டு பிறப்பின் போதும் புதிய எண்ணங்களை ஈடேற்றிவிடவேண்டும் என நினைத்தாலும் காலம் ஒத்துழைப்பதாயில்லை.ஈழத்து மறைந்த படைப்பாளர்களைப் பற்றி பல அறிஞர்கள் எழுதிய கட்டுரைகளை இலக்கியப்பூக்கள் எனும் தலைப்பில் இரண்டு தொகுதிகளாக வெளியிட்டிருந்தோம். ஆண்டுகள் பல கடந்து போனபின் அதன் மூன்றாவது தொகுதியை கொண்டுவர இவ்வாண்டு கொண்டுவரவுள்ள தகவலையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்.

காற்றுவெளி தொடர்ந்தும் சிறப்பிதழ்களைக் கொண்டுவரவுள்ளது (கவிதை,சிறுகதை,மொழிபெயர்ப்பு,சிற்றிதழ்,நம்மவர் சிறப்பிதழ் என..)

படைப்பாளர்கள் தருகின்ற ஒத்துழைப்பையே நாம் எதிர்பார்க்கிறோம்.

மேலும், காற்றுவெளி பலரிடமும் சென்றடைந்திருக்கிறது.எனினும், கணினி,இணைய வசதிகள் கிடைக்கப்பெறாத படைப்பாளர்களிடமும் சென்றுசேரவேண்டும் என்றே விரும்புகிறோம்.

எதிர்காலத்தில் இலக்கிய வாசகர்கள் வட்டமூடாக அதற்கான முன்னெடுப்புக்களையும் எடுக்கவுள்ளோம். சிறுகதைப்போட்டிகளையும் நடத்தும் எண்ணமுண்டு.ஆரம்பத்திலிருந்து இது பற்றி பலரிடமும் இது பற்றிப் பேசினாலும் முழுமையாக்கப்படாததால் தாமதமாயிற்று.

உலகின் பல பாகங்களிலும் நோய்த்தொற்று பயங்களுடன்,யுத்தம்,இடப்பெயர்வுகளும் ஓய்ந்தபாடில்லை. பிராந்திய ஆதிக்க மனப்பான்மையுடன்,சர்வ வல்லமையுடைவர்களாக தங்களை தாங்களே நிர்ணயித்துகொண்டு மக்களை,போராடும் இனக்குழுமங்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியபடி...இந்த நிலை மாறவேண்டும். சுதந்திரத்திற்காகப் போராடும் இனங்கள் சுபீட்சத்துடன் வாழவும் வழிவகைகள் செய்யப்படல்வேண்டும்.


புத்தாண்டு புதிய திசைகள் நோக்கியும் பயணிக்க காலம் வழிவிடவேண்டும்.

நம்பிக்கையுடனும்,பிரார்த்தனையுடனும்,

சோபா

*01/01/2024*

மீரா (தமிழகம்)



# அன்னக்கரண்டி

கோப்பெருந்தேவி அந்த கரண்டியயே பார்த்துக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த குணசேகரன் கரண்டியில் என்ன உலக வரலாறு தெரிகிறதா உனக்கு என்று கேலி செய்தார்.

உலக வரலாறு தெரியல அது ரொம்ப நாளாச்சு மாத்திடலாமானு யோசிச்சிட்டு இருக்கேன்.

சட்டென்று குணசேகரன் அந்த நிலைப்பையே மறந்திடு.

ஏன் என்னாச்சு என்றாள் கோப்பெருந்தேவி...

ஐந்து தலைமுறை தாண்டி வந்து நிற்கும் அன்னக்கரண்டி அது.

பார்க்கப் போனால் நீ அதற்கு பெரும் மரியாதை தர வேண்டும்.

அப்படியா ஏன் அப்படி சொல்கிறீங்க.

உன்னை விட முப்பெய்தியது அந்த கரண்டி..

ஆயிரக்கணக்கான பேர் அந்த கரண்டியால் வயிறார சாப்பிட்டு சென்றிருக்கிறார்கள் தெரியுமா.

புரியுது புரியுது நீங்க சொல்றது இனிமே இந்த மாதிரி நினைப்பே இனிமேல் என்னிடம் வராது.

உபயோகப்படுத்தி விட்டு பின் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்,செராமிக்ஸ் கரண்டிகளுக்கு நடுவே

இது ஐந்தாம் தலைமுறைக்கு உணவளித்துக் கொண்டிருப்பதில் மிகப் பெருமை தான்.

இன்னும் பல தலைமுறையினரை இதனால் உணவளித்த பெருமையை கரண்டி அடைய வேண்டும் என்று நினைத்தவளுக்கு அந்த கரண்டியின் மேல் மிகப் பெரும் மரியாதையே ஏற்பட்டது.

ரஜிதா அரிச்சந்திரன், யாழ்ப்பாணம்



# வாழ்க்கை

மரணப்படுக்கையில் எமன் இன்றோ நாளையோ வருவான் என எதிர்பார்த்திருக்கும் கந்தையாவின் மனமானது பறந்து பறந்து அவரின் இ்ளைக்காலத்தை நோக்கிச் சென்றது. அது ஒரு அழகான மாலைப்பொழுது கந்தையா தெருவால நடந்து வந்து கொண்டிருந்தார். “திடீரென்று நாய் சாப்பிடாமல் இறந்து விட்டது. யாரோ வாயைக் கட்டி விட்டார்கள் ”எனக்கூறிக்கொண்டு வந்த சுப்பையாவை “என்ன? சுப்பையா நடந்தது” எனக்கேட்டதும். சுப்பையா “அண்ணே! உங்களுக்கு விசயம் தெரியாதோ அன்னக்கா வீட்டு நாய்க்கு யாரோ? வாயைகட்டி விட்டாங்களாம”; என்றதும் “ஏன்? நாயைப் போய் இப்படிச் செய்திட்டாங்களே! பாவியள், நீ முதலே சொல்லியிருக்கலாம்தானே! ” “அண்ணே எனக்கும் இண்டைக்குத்தான் தெரியும்.”, “சரி சுப்பையா நான் வாறன் ”எனக்கூறி நடந்தவருக்கு பலத்த யோசனை ஏன் நாய்களுக்கு இப்படிச் செய்யுறாங்கள் எனக்கு மனிசன கொல்லுற வித்தையே தெரியுமே ! மனிச குலத்துக்கு நல்லத தானே செய்யுறன். இதையார் செய்திருப்பார்கள் என நினைத்துக்கொண்டு வந்து வீட்டுப் படலையை திறந்துள்ளே வந்தார்.

மனைவி ஈஸ்வரி தண்ணீர் கொண்டு வந்து கொடுத்தார் தண்ணீரை வாங்கி கை, கால் கழுவி வாய் கொப்புளித்து சாய்வுக் கதிரையில் உட்கார்ந்தவரை மனைவி “சாப்பிட வாறீங்களா?” “இல்லை பசிக்கவில்லை கொஞ்சம் பொறு, பிள்ளைகள் சாப்பிட்டார்களா?” “ஆறு பேரும் சாப்பிட்டு படுத்திட்டாங்கள்” “ ஏன்

இண்டைக்கு சத்தம் போடாம படுத்திடடார்கள்.?'' '' நாளைக்கு பள்ளிக்குடம் வேளைக்கே போக வேணுமாம். '' ''சரி சாப்பாட்டை எடுத்து வை வாறேன்.'' எனக்கூறி அழகாக சப்பாணி கட்டி உட்கார்ந்தார். சாப்பாட்ட வாழை இலையிலபரிமாறினார் இவர் சாப்பிட்டு முடித்ததும் தானும் சாப்பிட்டு விட்டு தாம்பூலம் மடித்துக் கொடுத்து கதைத்துக்கொண்டிருக்கையில் யாரோ படலையை தட்டும் சத்தம் கேட்டு எழுந்து வந்தவர் படலையை திறந்ததும் ''ஜயா நாங்கள் கெனடி லேனில இருந்து வாறம் கமலம் அக்கா நடந்து போகையில் ஏதோ கடித்து விடடு;தாம் வாயால நுரைதள்ளுது. ஒருக்கா பாருங்கோ'' என கத்தினார்கள். ''சரி உள்ளே கொண்டு போங்கோ.'' எனக் கூறி வைத்தியத்திற்காக இருக்கும் குடிலில் உள்ள கட்டிலில் கிடத்தினார்கள். கடி வாயை வைத்து பாம்பு தான் கடித்திருக்கும் என்ற முடிவுக்கு வந்தார். இரவு முழுவதும் கமலத்தை நித்திரை கொள்ளவிடாமல் பார்த்தார்கள். கந்தையா ஈஸ்வரியிடம் ; ''குப்பைமேனி, எருக்கலை, ஊமத்தை, முருக்கை, எல்லாம் சேர்த்தரைத்து எடுத்துக்கொண்டு வா'' எனக் கூறிவிட்டு கடிவாயை உறந்து எடுத்து நூலால்கட்டி விசம் ஏறாது தடுக்க பார்வை பார்த்தார் அரைத்த இலைகளை கொண்டு கடிவாயில் வைத்துக்கட்டினார். குழந்தைப்பிள்ளையின் சிறுநீரை குடிக்க கொடுத்தார் இரவு முழுதும் விழித்திருந்த கமலா காலையில் கையெடுத்து கும்பிட்டு ''நீங்கள் எனக்கு மறுபிறவி கொடுத்த தெய்வம் ''எனக் கூறி கும்பிட்டாள் ''சரி விடம்மா இது என்ர கடமை வைத்தியத்தை கற்றதே உயிர் காக்கத்தான் சரி மூன்று நாளைக்கு பார்வை பார்க்கவேணும் வாங்கோ,'' ''காலையில வாறதா பின்னேரம் வாறதா பின்னேரம் வாங்கோ'' எனக்கூறி அனுப்பி வைத்தார்.


பூதவராஜர் வீதியில் வசித்து வந்த கந்தசாமியின் மகள் கந்தையாவின் மகளின் நண்பியும் கூட திடீரென்று அந்தப்பிள்ளை பாம்பு போல நெளிந்து ஆடுதாம் என ஊரெல்லாம் கதை பரவியது இதைக்கேட்ட கந்தையாவிற்கு கவலையாக போயிற்றுது. அவரே கந்த சாமியிடம் சென்று ''ஒன்றுக்கும் கவலைப்படாதேங்கோ நான் சுகமாக்கித் தாறன்.'' எனக்கூறியதும் கந்தசாமி இவரின்கைகளைப்பிடித்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதார் ''என்ர ஒரே ஒரு பிள்ளை யார்ர கண்பட்டதோ உங்க நம்புறன் நீங்கள்தான் சுகப்படுத்தி தரவேணும்.'' ''ஒன்றையும் யோசித்து மனதில பாரத்தை ஏற்றாமல் பின்னேரம் வீட்ட கூட்டீட்டு வாங்கோ'' எனக் சுறினார்.

பின்னேரம் கந்தசாமியும் அவரின்ட மகளும் கந்தையாவின் வீட்டுக்கு வந்தார்கள் ஒஞ்சிப்புடன் ஒதுங்கி வந்த கந்தசாமிக்கு கந்தையாவின் செயற்பாடு ஆச்சரியத்தை மூட்டியது. ''எல்லாரும் ஒதுக்க நீங்கள் மட்டும் உங்கட பிள்ளையையும் கூப்பிட்டு சேர விடுறீங்களே உங்களுக்கு என்ன நல்ல மனம் நீங்கள் மனிதனல்ல தெய்வம்'' எனக்கூறினார். ''கந்தசாமி நீங்கள் இப்படி எல்லாம் சொல்லிக் கொண்டிருக்காமல் வளவுக்குள்ள தேசிக்காயை ஆ;ஞ்சு கொண்டுவாங்கோ'', ''சரி ஆஞ்சு கொண்டு வாறன் '' எனக்கூறிச் சென்றார். கந்தையா '' சறோ பூமாவை கூட்டீட்டு வா'' என அழைத்துக்கொண்டு வந்து உட்கார வைத்தாள் கந்தையா முன்னால வந்து உட்கார்ந்தார். ஈஸ்வரி தண்ணீர், வீபூதி, வேப்பிலை, கத்தி, தேசிக்காய் எல்லாவற்றையும் அருகில கொணர்ந்து வைத்தார். கந்தையா வேப்பிலையால் அடித்து மந்திரம் சொல்லி தேசிக்காயை பாதியாய் அறுத்து தலைக்கு மேலால வீசி கந்த சாமி மகளை அழைத்துக்கொண்டு போங்கோ நாளைக்கும் இதே நேரம் வாங்கோ எனக் கூறி அனுப்பினார். தொடர்ந்து மூன்று நாட்கள் தேசிக்காய் வெட்டிப் பார்வை பார்த்ததும் பூமாக்கு சுகமாகி அவள் பழையபடி ஆகிவிட்டாள். இன்று அவள் கலியாணங்கட்டி லண்டன்ல இருக்கிறாள்.

அதேபோல காட்டேறி, பேய், பிசாசு பிடித்தவர்கள் அனைவருக்கும் சரியான தீர்வு வழங்குபவராக இருந்தார். இதே போல அச்சுவேலி முனுசாமிட மகனுக்கு பேய் பிடித்து ஆட்டியது அவர்கள் கந்தையாவை பற்றி தெரிந்து இங்கே அழைத்து வந்தார்கள் காட்டேறியை துரத்த அர்த்டத ஜாமத்தில் சுடலைக்கு அழைத்துச் சென்று சேவலை அறுத்து இரத்தப்பலி கொடுத்து குணமாக்கினார்.முனுசாமியும் அவன் குடும்பமும் இவரின் காலில் வீழ்ந்து வணங்கிச் சென்றனர்.

இப்படியாக தன்னுடலில் வலுவுள்ள வரை தினமும் குழந்தைகள், பெரியோர்கள் என எண்ணுக் கணக்கில்லாதவர்கள் இவரிடம் பார்வை பார்க்கவும் வைத்தியத்திற்கும் வருவார்கள். இதில ஊர்தாண்டியும் இவர்புகழ்பரவி அயலூர்களிலிருந்தும் பார்வை பார்க்க வருவார்கள். காசு எதும் எதிர்பார்க்காமல் வைத்தியத்தை செய்ததனால் இவர் வைத்'தியம் நன்றாக சித்தித்தது. சொத்துப்பத்துக்கள் இருந்தமையால் இவருக்கு வைத்தியத்தை காசுக்காக செய்யும் தேவையும் இருக்கவில்லை. ஆறு பொம்பிளை பிள்ளைகளுக்கு தகப்பனாய் இருந்த போதும் இவர் காசாசை கொள்ளாதிருந்தார். வைத்தியத்துறையில் மட்டுமின்றி பசி என்று வருவோர்களுக்கும் உதவி என்று வருவோர்க்கும் உதவி புரிந்து ஒரு தாராள வாழ்க்கையை வாழ்ந்தார். வயலால் நெல்லு வரும் சுருட்டு கைத்தொழிலால் இதர வருமானத்தையும் பெற்றார் அத்துடன் மாடுகளை வளர்த்துப் பால் எடுத்தார்கள் மனைவி ஒத்தசையால் தன் கொள்கையில் மாறுபடாது ஒரு அருமையான வாழ்வினை வாழ்ந்து வந்தாவர் இன்று மரணப்படுக்கையில சாவை நினைத்துப் பயப்படாமல் தன்சாதனைகளை நினைத்தும் தன்ர வாழ்வை பிறரைக்காப்பாற்ற பயன் படுத்தினதையும் நினைத்து பெருமையுடன் எமனை எதிர்பார்த்திருந்தார்.....

ந.சிவநேசன்



# வாதையின் காலம்

ஆனந்தனுக்கு உடல் நடுக்கமாக இருந்தது. நேற்றை விட இன்று பயம் அதிகரித்திருந்தது. சுதாகர் இன்னும் அலுவலகத்திலிருந்து வரவில்லை. சன்னல் வழியே எட்டிப் பார்த்தார். தெருவிளக்குகள் இப்போதுதான் ஒன்றிரண்டாய் எரியத் துவங்கியிருந்தன. வாழப்பாடியிலிருக்கும் மொத்த சனமும் அந்தத் தெரு வழியே புகுந்து வெளியேறுவது போல அத்தனை கூட்டம்.பணி முடிந்து வீட்டுக்குத் திரும்புவோர் இல்லத்தை நோக்கிச் சென்று கூட்டுக்குள் அடைந்து கொள்ளும் அவசரத்தோடு வாகனங்களில் விரைந்து கொண்டிருந்தார்கள். தனக்கான கூடு இதுதானே என யோசித்தவாறே ஆனந்தன் அறைக்குள் பார்வையை செலுத்தினார். இவர் ஒருவர் மட்டுமே படுத்துறங்கத் தேவையான கட்டில், படுக்கை விரிப்புகள் மூலையில் அரசு தந்த இலவசத் தொலைக்காட்சி, ஒரு சிறிய டேபிளில் இவருக்கான மருந்து மாத்திரைகள், சுவரோடு சேர்த்து பொருத்தப்பட்டிருந்த அலமாரியில் இவர் எப்போதும் விருப்பமுடன் படிக்கும் புதினங்கள், இதிகாசங்கள் என இவருக்கு மட்டுமே போதுமான குட்டியறை அது.

ஆனந்தனின் பார்வை மீண்டும் படுக்கையின் பக்கம் போனது. போர்வையை நனைத்திருந்த மலவீச்சம் இவர் ஒடுங்கியிருந்த சன்னலோரம் வரை கனமாக வீசியது.

நேற்றைய தினம் இதே நேரம் நடந்தது நினைவுக்கு வந்துப் போனது.

'அவசரமா வந்தா சொல்ல வேண்டியது தான? நானாவது கூட்டிட்டுப் போய் பாத்ரூம்ல விட்டிருப்பேன். எத்தன முறை சொன்னாலும் மண்டைல ஏறவே ஏறாது.. ச்சை..' எனச் சலித்தவாறே மருமகள் விமலா படுக்கையை சுத்தம் செய்ததும்

'கொஞ்சம் மெதுவா பேசு விமலா.. வயசான மனுசன்.. பாவம்பா அவரு..'

என மகன் சுதாகர் கெஞ்சிக் கொண்டிருந்ததும் வெளியே அமர்த்தி வைக்கப்பட்டிருந்த இவர் காதில் தெளிவாக விழுந்தது.

இயற்கை உபாதைகளை கழிக்கத்தான் நினைவு தப்பிப்போகிறதே தவிர இப்போதெல்லாம் அடிக்கடி லட்சுமி நினைவில் வந்துப்போகிறாள்.

அவர் ரிட்டையர்மெண்ட் வாங்கிய பிறகு ஐந்து, ஆறு வருடங்கள் வரை எந்தத் தொந்தரவுமின்றி நல்ல ஆரோக்கியத்துடன் தான் இருந்தார். பிறகு ஒரு முறை டைபாய்டு காய்ச்சல் வந்து படுக்கையில் வீழ்ந்தவருக்கு அதிலிருந்து மீண்டு வருவது பெரும் போராட்டமாக இருந்தது. இருபது நாட்கள் மெதின் நர்சிங்ஹோமில் வைத்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டதன் விளைவாக குணமாகி வீடு திரும்பினார். அதன் பிறகு தான் இந்தப் பிரச்சினை தலைதூக்கியது. எவ்வளவோ முயன்றும் மல,ஜலம் கழிப்பதை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை. லேசாக வயிறு அவஸ்தை காட்டத் தொடங்கியதுமே வெளியேறிவிடுவதை அவரால் உடனடியாக உணரமுடியாமல் போய்விட்டது. நாற்றம் வீச ஆரம்பித்தப்பிறகுதான் இருக்கும் இடத்திலேயே போய்விடுவது தெரிந்தது. முதன்முதலாக இப்படி நடந்தபோது நிறைய வருத்தப்பட்டார்.அதன்பிறகு தொடர்ச்சியாக இரண்டு மூன்று முறை இப்படி ஆனப்பிறகு வீட்டிலிருந்த எல்லோருமே அதிர்ச்சியானார்கள். எல்லோரும் உறங்கிவிட்ட இரவில் லட்சுமியைக் கட்டிக்கொண்டு குழந்தையைப் போல கேவிக் கேவி அழுதார்.

'என்னங்க இது.. நான் தான் க்ளீன் பண்ணிடுறேன்ல. அப்புறம் எதுக்கு இப்படி அழறீங்க?' என லட்சுமி கண்களைத் துடைத்துவிட்டாள்.

'இல்ல லட்சுமி..எனக்கு கை, கால் வராம போனாக் கூட பரவால்ல. உடம்ப இழுத்துக்கிட்டே போய்க்கூட பாத்ரூம்ல இருந்துடுவேன். எனக்கு வர்றதே தெரியமாட்டேங்குதுடி..' என விசும்பினார்.

'ஐயோ சாமி இது என்ன குழந்த மாதிரி.. வயசாகுதுல்ல இனிமே அப்படித்தான்.. நான் ஒருத்தி எதுக்கு இருக்கேன்? எல்லா வீட்டுலயும் இதெல்லாம் நடக்குறதுதாங்க..'' என லட்சுமி சொன்ன சமாதானங்களை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'இருந்தாலும் என்னால முடியலம்மா.. இப்பலாம் பேரப்புள்ளைங்க கூட கிட்ட வர்றதே இல்ல.. '

'இவ்வளவுதானே.. சரி காலைல கவினையும் விஜியையும் கூட்டிகிட்டு வந்து உங்க மடியில உட்கார வைக்கிறேன் மாமா.. நீங்க அழுவாதீங்க மாமா.. '

அன்பு அதிகமாகும் நேரங்களில் லட்சுமியிடமிருந்து அரிதினும் அரிதாக மாமா உதிரத் தொடங்கும்.

'இப்படியே நீங்க அழுதுட்டு இருந்தா எனக்கும் அழுகை வரும் ' என அவளும் விசும்பத் தொடங்கிய பிறகே இவர் அமைதியானார்.

மறுநாளே அவரை டாக்டரிடம் அழைத்துப் போனான் சுதாகர்.

பல்வேறு விதமான டெஸ்ட்டுகளை எடுத்துப் பார்த்துவிட்டு உடலுக்கு ஒன்றுமேயில்லை இது வயதானால் பொதுவாக ஏற்படும் குறைபாடுதான் என சில மருந்து மாத்திரைகளைத் தந்து அனுப்பி வைத்தார்கள்.

அதன்பிறகு வாரம் ஒருமுறை இருமுறை என இருந்த உபாதை தினசரி என்றாகத் தொடங்கியது.

ஒருமுறை லட்சுமியின் மாமாவழி உறவினரின் திருமணத்துக்குச் சென்றபோது மண்டபத்திலேயே வேட்டியெல்லாம் நனைந்து.....

அத்தனை கூட்டத்தினருக்கு மத்தியில் ஆனந்தன் அங்கேயே கூனிக்குறுகிப்போனார். அவசரமாய் கழிவறைக்கு அழைத்துச் சென்று மாற்று உடைகளை எங்கிருந்தோ வாங்கி வந்து உடுத்திவிட்டு லட்சுமியும் சுதாகரும் வீட்டுக்கு கூட்டி வந்தார்கள். அந்த சம்பவத்திலிருந்து அவருக்கு வெளியில் செல்லவே பயமாக இருந்தது. அதுவும் லட்சுமியின் மறைவுக்குப் பிறகு அறவே அறையோடு அறையாக முடங்கிப் போனார்.

லட்சுமி இறுதிப்படுக்கையில் இவர் கைகளைப் பிடித்துக் கொண்டு விசும்பினாள்.

‘எனக்கு உங்கள நினைச்சா தான் கவலையா இருக்கு. உங்களால முடியலனு சாப்பிடாம இருந்துடாதீங்க..’

‘சுதாகரு அப்பா சாப்பிடாம இருப்பாருப்பா.. அவரப் பாத்துக்கோடா. குழந்தைடா அவரு.. விட்டுடாதடா’ எனப் புலம்பியபடியே அவள் உயிரை விட்டப்பிறகு அவருக்கு எல்லாமே வெற்றிடமாகிப் போனது.

சுதாகர் அப்படியொன்றும் அவச்சொல் பேசுபவனில்லை. சிறுவயதிலிருந்தே அவனுக்கு அவரது சுத்தம் பற்றி நன்றாகத் தெரியும். அவன் கை கால் கழுவும் போதுகூட அவ்வளவு கவனமாக நின்று கவனிப்பார். சுத்தமா கழுவலனா சனி பிடிச்சுக்கும் என பயமுறுத்துவார். ஆறு மாதத்துக்கொரு முறை வீட்டிலிருக்கும் எல்லோரும் பேதி மருந்து உட்கொண்டாக வேண்டுமென வற்புறுத்துவார். பேருந்து நெரிசலில் வெளியூர் பயணம் போய்வந்தால் ஒருவரும் குளிக்காமல் வீட்டுக்குள் வரமுடியாது. அவ்வளவு சுத்தமாக இருந்தவரின் வாழ்வு தலைகீழாய் திரும்பிப்போகுமென சுதாகரும் எதிர்பார்க்கவில்லை.

நேரம் கிட்டத்தட்ட நள்ளிரவை நெருங்கிவிட்டிருந்தது. ஆனந்தன் படுக்கைக்குப் போகாமல் இன்னமும் வெளியிலேயே அமர்ந்திருந்தார். மார்கழியின் குளிர்காற்று சட்டையின் இடுக்குகளில் புகுந்து உடலைத் தழுவிக்கொண்டிருந்தது. சுதாகர் பேருக்கு கதவைத் திறந்து எட்டிப்பார்த்து ‘உள்ள வந்து படுக்கலாம்ல?’ எனச் சம்பிரதாயமாக சொல்லிவிட்டுப் படுக்கைக்குச் போய்விட்டான். அருகில் வந்து அமர்ந்து ஆறுதலாய் இரண்டு வார்த்தை பேசுவான் கைப்பிடித்து எழுப்பி உள்ளே அழைத்துச் செல்வான் என எதிர்பார்த்தார். ஆனால் அது நடக்கவில்லை.

உள்ளே சன்னமாக கேட்ட பேச்சுக்குரல் இன்னும் யாரும் தூங்கவில்லை என்பதை உணர்த்தியது. ஒட்டுக்கேட்டெல்லாம் பழக்கமில்லாத போதும் அச்சொற்கள் அவையாகவே வந்து செவிக்குள் உட்கார்ந்து கொள்கின்றன எனும்போது கவனிக்காமல் இருக்கவும் முடியவில்லை.

‘இன்னும் எவ்ளோ நாள் தான் இப்படி போராடிக்கிட்டே இருக்குறது?’

‘மெதுவா பேசுப்பா.. அவர் காதுல..’

‘காலைலயே அதெல்லாம் காதுல விழுற மாதிரி பேசியாச்சு.. நானும் மனுஷி தானே’

‘என்ன விமலா நீ.. கொஞ்சம் கூட யோசிக்க மாட்டியா? அவரு உன்னபத்தி என்ன நினைப்பாரு.. இன்னும் வெளியவே உக்காந்துருக்காரு பாவம்’

‘நினைச்சிக்கிட்டு போகட்டுங்க.. காலைல தான நீங்க க்ளீன் பண்ணிட்டு ஆபிஸ் போனீங்க.. போய் ஒரு மணி நேரம் கூட இருக்காது. மூக்க பொத்திக்கிட்டு சுத்தம் பண்ணி முடிக்கிறதுக்குள்ள.. ஐயோ சாமி. அது எப்படி அப்படி தெரியாம போகும்? நான் என்ன நினைக்கிறேன்னா அவரு வேனும்னே பண்றாரோ என்னவோ.. நம்மள தனியறைல ஒதுக்கிட்டாங்க.. யாரும் கவனிக்கலன்னு..’

‘ச்சோ..தயவு செஞ்சி அப்படி சொல்லாதப்பா.. ப்ளீஸ்’

ஆனந்தன் மேலே அண்ணாந்து பார்த்தார். தேய்பிறை நிலவின் ஒளி சுடர்விட்டுக் கொண்டிருந்தது. தன்னைப் போலவே அமிழப்போகும் ஒளி. தன்னைப் போலவே வெளிச்சமாய் இருந்த நாட்களை நினைத்து கண்ணீராய் கசியும் குறைவான ஒளி.

தெருவில் ஆள்நடமாட்டம் முற்றிலும் நின்று விட்டிருந்தது. நைட் ஷிப்ட் பணி முடித்து திரும்பும் ஓரிருவரும் போய்விட்டிருந்தனர். தெருநாய்கள் சில அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருந்தன. ஆனந்தனுக்கு அந்த யாருமற்றத் தனிமை பிடித்திருந்தது. இப்படியே எழுந்து கால் போன போக்கில் நடந்து எங்கேயாவது போய்விடலாம் போலிருந்தது. ஏதேனும் ஒரு மரத்தடியில் புத்தனைப் போல கண்மூடி அமர்ந்துகொள்ளத் தோன்றியது. கண்மூடி அமர்ந்து வயிற்றுக்குள் நிகழும் மாற்றங்களை ஆழ்ந்து கவனிக்க வேண்டும். பசி மெல்ல மெல்லப் பெருகி தன்னை முழுதுமாய் தின்பதை தியானத்தினூடே கவனிக்க வேண்டும். மென்மையாய் வெகு மென்மையாய் மரணத்தின் கைகளில் தன்னை ஒப்படைத்துவிட வேண்டும். மருமகளிடமும் தன் மகனிடமும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வரும் அன்பை மரணத்தின் வாயிலாகப் பெற்றுவிட வேண்டும். அவர்கள் தன் இழப்பை தாங்காது அழுவதை ஒரு கணம் நின்றுப் பார்த்துவிட்டு காற்றோடு கரைந்துவிட வேண்டும். ச்சே.. என்ன இது.. குழந்தையைப் போல மனம் ஏங்குகிறது? ஏங்கினால் தான் என்ன.. தன்னால் இப்போது அவர்களுக்குத் தரமுடிந்த அதிகபட்ச விடுதலை இதுவாகத் தான் இருக்கும்.. அவர்களுக்கு என்னிடமிருந்து.. எனக்கு இந்த துயர்மிகுந்த வாதையிடமிருந்து ஆனந்தன் மெல்ல எழுந்தார். உள்ளே

பேச்சுக்குரல் அடங்கிவிட்டது. கால்கள் முன்னோக்கி நகர எத்தனிக்கும் போதெல்லாம் மனம் இன்னும் கொஞ்ச நேரம் இருந்துவிட்டுப் போகலாமே என பின்னோக்கி இழுக்கிறது. தன் வீட்டை அங்குலம் அங்குலமாக இரசித்தார். மெல்ல அவ்விடத்திலிருந்து நகர்ந்து தெருவில் இறங்கினார்.

எவ்வளவு நேரம் நடந்தார் எனத் தெரியவில்லை. பால்யத்திலிருந்து வாழ்வின் ஒவ்வொரு கணமும் நினைவில் நிழலாடிக் கொண்டிருக்க கண்கள் நடந்தக் களைப்பில் லேசாக சொருகத் தொடங்கின. அதற்குள் தெரிந்த ஏரியாவிலிருந்து வெகுதூரம் கடந்துவிட்டிருந்தார்.

சாலையோரத் திட்டில் அமரப்போய் தடுமாறி விழுந்தவருக்கு வேட்டி ஈரமாவது நன்றாகத் தெரிந்தது. உடல் இப்போது நடுங்கத் தொடங்க அப்படியே சுவரோரம் தலையைச் சாய்த்துப் படுத்தார்.

ஆனந்தனுக்கு விழிப்பு வந்தபோது தானொரு பெட்டில் படுக்கவைக்கப்பட்டிருப்பதை உணர்ந்தார். பொழுது நன்றாக விடிந்து விட்டதையும் தான் வேறு வீட்டில் இருப்பதையும் உணர்ந்தார்.

கதவு திறக்க ஒரு மெரூன் நிற டிசர்ட் அணிந்த இளைஞன் அவரிடம் தேநீர் கோப்பையை நீட்டி சிநேகமாய் சிரித்தான்.

‘என்னங்கையா.. வீட்டுல இருந்து கோவிச்சிக்கிட்டு வந்துட்டீங்களா?’

என்ற கேள்வியை எதிர்கொள்ள முடியாது தலையைக் குனிந்து கொண்டபோது தான் தனது உடைகள் மாற்றப்பட்டு வேறு உடை அணிவிக்கப்பட்டிருப்பதைக் கவனித்தார்.

மிகுந்த பதட்டத்தோடு “தம்பி நான் உங்களுக்கு ரொம்ப சிரமத்தக் குடுத்துட்டேன் போலருக்கு.. “ என்றபடியே எழ முயன்றவரை கைகளால் தடவிக்கொடுத்து ஆசுவாசப்படுத்தினான்.

“அதெல்லாம் ஒன்னுமில்லீங்க ஐயா.. என்னோட வேலையே இதுதான்.. ரோட்டோரமா ஆதரவில்லாம இருக்குறவங்களுக்கு முடிவெட்டி சுத்தம் செஞ்சி குளிப்பாட்டி புது உடை, உணவுலாம் தர்றத ப்ரண்ட்ஸோட சேர்ந்து ஒரு சேவையா செய்யறேன். நைட்டும் அப்படித்தான் வேலைய முடிச்சிட்டு வர்றப்ப நீங்க விழுந்துக் கிடந்ததப் பாத்தேன். தோற்றத்த பாத்ததுமே ஏதோ வீட்டுல இருந்து கோச்சுக்கிட்டு வந்துட்டீங்கனு நினைச்சி அப்புறம் இங்க கொண்டு வந்துட்டோம்”என்றான்.

ஆனந்தனுக்கு ரொம்பவும் கூச்சமாக இருந்தது. அவர் சங்கடப்படுவதை உணர்ந்த அந்த மெரூன் இளைஞன்

“வயசாகிட்டாலே குழந்தை தானங்க.. சின்னக் குழந்தைங்க எப்படி அடிக்கடி போவாங்களோ அப்படித்தான் பெரியவங்களும்.. அவங்கள சின்ன குழந்தையா ட்ரீட் பண்ற பக்குவம் சிலருக்கு இருக்கு.. சிலருக்கு இல்ல அவ்ளோ தான்..” என அவர் மனதிலிருப்பதை படித்த மாதிரிப் பேசினான்.

“நீங்க வீட்டுக்கு போறதா இருந்தாலும் சரி.. இல்லன்னா ஏதாவது ஹோம்கேர் சேர்த்து விடுறதுனாலும் விடுறேன்.. “

என்றவனைக் குறுக்கிட்டு மறுத்தார்.

“இல்ல தம்பி நீ எனக்கு ஆதரவாக பேசுனதே மனசுக்கு ரொம்ப தெம்பா இருக்குப்பா.. நான் என் வீட்டுக்கே போறேன். ஆனா அடிக்கடி நீ என்ன வந்துப் பாக்கணும் சரியா? “ எனக் கெஞ்சுவது போலக் கேட்டவரைப் பார்த்துச் சிரித்தான்.

“கவலையேபடாதீங்க ஐயா.. வந்துப் பாக்குறது மட்டுமில்ல அப்பப்போ வெளியிலயும் கூட்டிக்கிட்டுப் போறேன்” என்றவனின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டார்.

சிற்றுண்டி முடித்து பைக்கில் அமரவைத்துக் கொண்டுப் போனவனிடம் இத்தனை நாள் தனிமையையும் மொத்தமாகக் கொட்டித் தீர்த்தவாறே வந்தார்.

தன் பால்ய நாட்கள், கல்லூரிக் காதல், லட்சுமியுடனான அந்நியோன்ய வாழ்வு, சுதாகர் வார இறுதியில் வாங்கி வரும் சமோசா, விமலா படித்துக் காட்டும் ஜெயகாந்தன் கதைகள், பேரப்பிள்ளைகளின் சுட்டித்தனம் என ஒன்றுவிடாமல் கூறிச் சிரித்துக்கொண்டே வந்தவரின் கண்களில் நீர் வழிந்ததைக் கண்டு வண்டியை நிறுத்தினான். ஆழ்ந்த அமைதி அங்குப் பரவியது. இருவருக்கும் அந்த மௌனம் தேவையாய் இருந்தது.

தெருமுக்கிலேயே வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கிக் கொண்டவர் அங்கிருந்தே வீட்டை அடையாளம் காட்டினார்.

“எனக்கு நடக்கணும் போலருக்கு. இந்த சந்தோசத்த அனுபவிச்சிக்கிட்டே நான் காலாற நடந்துப் போறேன்ப்பா.. நீ பத்திரமா போ”

“நீங்க நேரா வீட்டுக்குப் போவீங்கன்னு நம்புறேங்கய்யா..” எனச் சிரித்தவனிடம்

“உன் பேர நீ சொல்லவேயில்லையே தம்பி..” என்றார்.

“லட்சுமிபதி”

என்று தலையசைத்தவாறே கிளம்பிப் போனான். மனதுக்கு இப்போது இன்னும் ஆறுதலாய் இருந்தது.

முஷ்தாக் அஹ்மத், அக்குறணை

# பசி

காடு நிறை பசியோடு
வனாந்தரத்தின் மேல்
பறக்கின்ற பெருங்கழுகு நான்
குறிதப்பாமல் எறிகின்ற பார்வை
எனது
வழிபிழைக்காமல் துளியளவும்
சளைக்காத மனம் எனக்குண்டு
மறுவார்த்தைக்கு இடமின்றி
சரிசெய்துகொள்ள திராணியில்லை
ஒருமித்த கனத்தோடு கடக்கின்ற
பெருமிதத்தில் வட்டமிடுகிறேன் வனாந்தரத்தை

சிறிதும் மனம் பிசகாமல்
பசிபோக்க பயணப்பட்டுவிட்டேன்
பசிதீர்ந்தே ஆகவேண்டும்
பசிக்கு பாசம் ஈடல்லவே
ருசியான விருந்தொன்றுக்கு
காடே காத்திருக்கிறது
காடுதான் விருந்தாகுமென்று
எப்படி அறியும் காடு?
கழுகிற்கே பசி,
காட்டுக்கு தான் காலக்கெடு.

பொறுமைக்கு இரையாகும் நியாயத்தில்
நிம்மதியில்லை
நியாயமான பொறுமை என்பதே
கழுகின் காட்டுக்கான காத்திருப்பு
எதை புசிப்பது? எப்படி ருசிப்பது? என
பசித்துப்பொறுப்பது.
பசி அடங்காது, காடும் போதாது.
காட்டை விடவும்
கழுகுக்கு வேறொன்று கிடைத்தால்?

குமரி உத்ரா

# மனமே..நலமா..??

சிந்தனைகளை கழற்றி வைத்து விட்டு..
காற்றில் பறந்தேன்
சிறகுகள் விரிந்தது....

கழற்றி விட்ட பாம்பின்
சட்டையை போல்
ஒதுக்க நினைத்த
சில நினைவுகள் ஓரமாய்
கசங்கி கிடந்தன...

ஒற்றை யானையின்
தந்தம் போல்
உணர்வுகள்..
பலங் கொண்டு
விழித்துக் கொண்டன...

ஆடும் மயிலைப் போல்
ஆனந்தம் கொண்டு
அந்த கால அனுபவங்கள்
தோகையை விரித்தன...

நிமிர்ந்து நிற்கும்
ஆல மரத்தின்
விழுதுகளைப் போல்
வேதனைகள்
தொங்கிக் கிடந்தன...

துளைத்த மூங்கில்கள்
போல்
காயப்பட்டு
ரணத்தை மறைக்க
பிரயத்தனப் பட்டு
தோற்றுப் போயின....

சில நேரங்களில்
கூடு விட்டு கூடு பாய்ந்த..
யோகிபோல் மனம்
மௌனமாய் சம்மணமிட்டு
சத்தமில்லாமல்
யுத்தம் செய்தது....!!

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்,
இலங்கை

# பொய்மை எனும் சூது

உண்மைக்குள்
புகுந்து கொண்ட பொய்யானது உற்று உற்றுப் பார்த்தது
வெளியேறத் துளை தேடிப் பரபரத்தது
துயரம் நிறைந்த உண்மைக்குள்
வாழ்வு சமாதியாகி விடுமோவென எண்ணி அச்சமடைந்தது.
சாதிப்பதற்கு இன்னும்
எவ்வளவு இருக்கிறது என்பதை எண்ணிக் கண்ணீர் விட்டழுதது.
முலாம் பூசி
முறுக்கேறிய போலியின்
தோலணிந்து துக்கித்த அது
விடுதலை கிடைக்காதா என
மனதுள் கறுவிக் கிடந்தது..
அருவருக்கத்தக்க அது
கருவறுக்கவே காத்துக் கிடந்தது
பூக்களைக் கசக்குவதும்
முட்களுக்குள் முகாரி பாடுவதும்
வேரினை வேவு பார்ப்பதுமே
அதன் வேலையென நினைத்தது
உண்மையாக நாடகமாடிக்
கவிழ்ப்பதை நல்ல பழக்கமாகக்
கொண்டிருந்தது
மெய்சிலிர்க்கும் நடிப்பில் மேதாவித்தனம் பண்ணியது
சுயநலம் மட்டுமே அறிந்திருந்த அது
பொதுநலத்திற்குள் எப்படிப் புரியோடியது?
மதிமயக்கும் வித்தையை
விதி மீறிக்கற்றிருந்தது அது...
துயரத்தின் சூது கவ்வி
இரத்தவாடையை சுகித்திருந்தது
எதிர்மறை வசனம் பேசி
உரக்கவே கத்தியது
ஆயினும்
உண்மை புலப்படும் வேளைதனில் தன்னுயிர் பிரிந்து விடும் என்பதை அது அறிந்தே இருந்தது!

மஞ்சுளா

# நிலமில்லாதவள்

புலரும் அந்தக் காலைப் பொழுதில்
பூக்கோலம் இட்டுவிட்டு திரும்புகிறேன்
வாசல் முழுவதும் நிறைந்து விட்ட
என் கையழகுக் கவிதைகளை இணைக்கின்றன
புள்ளிகளும் கோடுகளும்

பார்த்துச் சிரிக்கிறார்கள் குழந்தைகள்

புதிதாக என்ன செய்வது?
தெரியாமல் அம்மா வரைந்த
அடுப்புக் கோலத்தையே நானும் வரைந்தேன்
கமகமத்த தாளித்தலோடு
சேர்ந்து கொண்டன
என் கண்ணீர்ப் புள்ளிகள்

திறந்த வெளியில் சற்றே அமர்ந்த போது
என்னோடு ஓய்வு கொண்டன
நான் எழுத வந்த கவிதைகள்

இப்போது
குழந்தை தூங்கியது
நிலவோ சிரித்தது

ஆடுகளத்தை மாற்றி
பாடப் புறப்பட்டுக் கொண்டிருந்தது
நிலவு காயும் பூமியிலிருந்து
நிலமே இல்லாதவளின்
ஒரு கவிதை

மக்கொனையூராள், இலங்கை

# தன்முனையியையபுக் கவிதைகள்

இன்றியமையாத நேசமொன்று
சுவாசத்தின் சேர்க்கை.
அன்பொன்றின் பிடிமானம்
அழகாகும் வாழ்க்கை.

◎

அவரவர்க்குத் தம்
சுயம் சார்ந்த நோக்கம்
இங்கெவர்க்குப் புரியும்
பிறர் கண்ணீரின் ஏக்கம்.

◎

உடைமையாய் அன்பானால்
ஊரெல்லாம் கொண்டாட்டம்.
உறவுக்குள் பகையானால்
வாழ்க்கையே திண்டாட்டம்.

◎

இயந்திர உலகில்
இழந்தவை அநேகம்
வளம் பெற மக்கள்
வளர்ப்போமே சிநேகம்

◎

அலைபாயா மனமிருந்தால்
அரசோச்சும் நிம்மதி.
அழகான வாழ்வுக்கு
அதுதானே வெகுமதி.

◎

காலத்திற்கும் மறக்காது
கல்லூரி வாழ்க்கை.
நினைவுகளில் ஊஞ்சலாடும்
நேசங்களின் இறக்கை.

◎

மனதுக்குள் நீயே
மகிழ்ச்சி தந்தாயே.
மெய்யன்பின் வாசம்
வீசிச் சென்றாயே.

◎

வண்ணப் பூக்களாய்
குடும்பத்தை அலங்கரிப்போம்.
நாளைய தலைமுறையை
சீராக வளர்த்தெடுப்போம்.

◎

பணம் மட்டுமே
வாழ்க்கை இல்லை
குணம் பேணிட
பூக்குமே முல்லை

◎

இசையினும் இனிதாய்
ஓசை செய்கிறாய்
அன்பெனும் நூல் கொண்டு
என்னை நெய்கிறாய்.

# நேதா மோகன் கவிதைகள்

## விவாகரத்துக்கான முதல் சொல்

விவாகரத்துக்கான
முதல் சொல்லை தொடக்கி வைத்திருக்கிறாய்!
நமக்கு இடையில் வெறுப்பின் அகழியை
வெட்டத்தொடங்கி இருக்கிறாய் நீ,

எதற்கும் என் மௌனத்தை படித்துக்கொள்
அதை சம்மதமென்று
முட்டாள்போல் நம்பிவிடாதே

அன்பு
மெழுகுவர்த்தி போல கரைந்து கொண்டிருக்கிறது.
உன் மனதில்
வாழ்க்கை என்பது
நீண்ட இரவென்பதை மறந்துவிட்டாய் போல,

மிருதுவான பறவை ஒன்றின் சிறகு போல
அக்காலங்களில்
உன் கைகள் உனக்குள்
அணைத்துக்கொள்ளும் என்னை,

இன்று உன் விரல்களுகிடையில்
கசப்பெனும் முட்கள் முளைத்திருக்கிறது.

அன்பை உனது
உள்ளுணர்வின் பாதைகளில் மட்டுமே
பயணிக்க விடு,
உன் குரோதங்களின் வழிகளை காட்டி
அதற்கு பழக்கிக்கொண்டிருக்கிறாய்!

நீ விட்டுச் செல்வதென்றால்
விட்டுச்செல்
என் நேசப்பொழுதுகள் எல்லாம்
உன் மனதைவிட்டு முற்றாக
அழிந்து விட்டதென்றால்
நீ விட்டுச் செல்வதில்
வருத்தங்கள் இல்லை எனக்கு.

## பௌத்த மரம்

பிடிவாதமாய்
பிடுங்கி எறியவேண்டியதாய் இருக்கிறது
அரசமர விருட்சங்களை

என் தோட்டத்தில்
விரிந்து,
தளைத்து,
பரந்த நிழல் பரப்பி,
நிறைந்த சருகுதிர்த்து
நிற்கிறது அரச மரம்.

என் முப்பாட்டன்
நட்ட மரத்தின் வேர்களில்
இன்றும் ஈரமாய் இருக்கிறது
அவன் ஊற்றிய நீர்

வாடையும், சோளகமும்,
மதம் பிடித்து வரும் மாரிப்புயலுக்கும்,
கொதித்தெறிக்கும் கோடை வெய்யிலுக்கும்,
எனது ஏழு தலைமுறைக்கும்,
நிழல் விரித்தது இம் மரம்.


தீடிரென மரத்தின் சருகுக்குவியலில் இருந்து
எழுகிறது துப்பாக்கிகள்,
என்னைச் சுற்றிலும் எதிரிகள்,
விருட்சத்தை சுற்றிலும்
முட்கம்பி அரண்கள்.

என் தலைமுறை ஊற்றிய நீரில்
பருத்து, படர்ந்திருந்த வேரில்
தியான சொரூபத்தில்
புத்தன் அமர்ந்திருந்தான்

பௌத்த சாட்சியங்களை நிறுவி
நான் உண்டான நிலத்தில் இருந்து
என்னை பிடுங்கி எறிந்தார்கள்
புத்தனின் குழந்தைகள்.

அம்மரத்தின் காற்று
என் நெஞ்சுக்குள் ஓய்வின்றி
வீசிக்கொண்டே இருக்கின்றது இன்றும்.

# என்ரை மகள் கெட்டிக்காரி



எங்கு திரும்பினாலும் வானத்தை முட்டும் மலைகள்.இந்த உலகத் தையே அந்த மலைகள்தான் தாங்கிக் கொண்டிருப்பதாக நினைக்கத் தோன்றியது. நான் எனது வீட்டு பல்கணியில் ஒரு கோப்பை கோப்பி யுடன் உட்கார்ந்து வெளியே பார்த்தபடி உட்கார்ந்தேன். இன்று லீவு நாள்.வேலையில்லை.பூம்பனியின் அகோரப் பசிக்கு தத்தம் இலைக் குழந்தைகளை உணவாய் கொடுத்துவிட்டு பற்பல கனவுகளுடன் மீண்டும் ஒருமுறை இலைக் குழந்தைகளை குருத்தாய் மெதுவாகப் பிரசவிக்கும் மரங்கள்.இயற்கை எத்தனைமுறை தங்களை மொட்டை யாக்கினாலும் மீண்டும் மீண்டும் இலைக்குழந்தைகளைப் பிரசவிக்கும் மரங்கள்.தாய்மை மரங்களையும் விட்டு வைக்கவில்லை. மெல்லிய தளிர்களையும்,விரிந்த வண்ண வண்ண மலர்களையும் வாஞ்சையாக வருடிக் கடந்த மெல்லிய காற்று என்னையும் தொட்டு சிலிர்க்க வைத்தது.அந்த அழகான காலைப்பொழுதில் இனிமையான நினைவு களைவிட கசப்பான நினைவுகள் நெல்லிக்காய் மூட்டையிலிருந்து நெல்லிக்காய்கள் உருண்டோடுவது போல் மனம் என்ற மேடையிலி ருந்து உருண்டு வந்து கொண்டிருந்தன. காலம் எவ்வளவு விரைவாக முன்னேறிக் கொண்டு போகிறது.அது யாருக்காகவும்,எதற்காகவும் தங்கி நிற்கப் போவதில்லை.குழந்தையாய் காலில் சத்தம் போடும் சலங்கை கட்டி ஓடித்திரிந்தது மங்கலாக நினைவில் வந்து வந்து போகிறது.குழந்தையாய் ஓடும்போது விழுந்த நேரங்களில் எல்லாம் அப்பா ஓடி வந்து தூக்க மாட்டார்.அம்மா தூக்க வந்தாலும்‘விடும் என்ரை மகள் கெட்டிக்காரி.இந்தா துள்ளி எழும்பி ஓடி வருவாள்’என்று உற்சாகப்படுத்துவார்.ஓட்டப் பந்தயத்தில் கலந்து வெற்றி பெறாவிட்டா லும் அப்பா சொல்லும் வார்த்தை மட்டும் மாறாது.இந்தமுறை தவற விட்டிட்டாள்.பாருங்கோ.அடுத்தமுறை என்ரை மகள் வென்றிடுவாள். அவள் நல்ல கெட்டிக்காரி.’ ஒரு முறை கூட தோல்வி எனக்குத் தோல்வியாகத் தெரியவில்லை. நான் கெட்டிக்காரி.அடுத்தமுறை வென்று காட்டுவன்’இந்த நினைவே என் ஆழ்மனத்தில் பதிந்துவிட்டது. பந்தய ங்களில் ஓடும் போதோ அல்லது பரீட்சைகளில் எழுதும்போதோ ‘என்ரை மகள் கெட்டிக்காரி’இந்த வார்த்தைகள் என் காதோரம் வந்து கிசுகிசுக்கும்.

நான் கெட்டிக்காரி என்று நானே என்னை நம்பத் தொடங்கினேன். என்னால் எல்லாமே சாதிக்க முடியும்.என்னால் முடியாதது எதுவுமே இல்லை என்ற நம்பிக்கை செடி போல் என் மனத்தில் வளரத் தொடங்கியது.வெட்டிப் போட்டாலும் பட்டுப் போக மாட்டேன் என்று பிடிவாதத்துடன் எழும்பி நிற்கும் செடி போல எழும்பி நிற்பேன் எப்போதும்.அப்பாவின் அன்புத்தூறலில் எப்போதுமே நனைந்தபடி ஆகா எவ்வளவு ஆனந்தமான நாட்கள் அவை.சிறுவயதில் எனக்காக அப்பா அடிக்கடி பாடும் ஒரு பாடல் மனதை வருடியபடியே இருக்கும். ´´இதோ எந்தன் தெய்வம் முன்னாலே நான் ஒரேயொரு புன்னகையில் கண்டேனே, பலநூல் படித்து நீ அறியும் கல்வி பொதுநலம் நினைத்து நீ வழங்கும் செல்வம் பிறர் உயர்வினிலே உனக்கிருக்கும் இன்பம்´´ என் அப்பாவின் மனதில் நான் ஒரு தேவதை.தனக்காகவே வானத்தி லிருந்து இறங்கித் தன் வீட்டுக்கு வந்த குட்டித் தேவதை.நானும் நான் ஒரு தேவதை என்று நம்பத் தொடங்கினேன்.அவர் அடிக்கடி கூறும் பொதுநலம் எனது இரத்தத்தோடு ஊறிக்கலந்து மனம் முழுவதும் வியாபித்து இருந்ததாலேயே யு.என்.ஓவில் வேலை தேடி மக்களுக்கு தொண்டாற்ற முடிந்தது.எனது நாட்டு மக்களுக்கு மட்டும் அன்றி உலக மக்கள் என்று பரந்த விரிந்த உலகம் என் கண்ணுக்கு தெரிந்தது. வெறும் விளக்காய் இருந்த எனக்கு அன்பென்ற நெய்யூற்றி இன்று பிரகாசமாக எரிய அத்திவாரமிட்டது என் அப்பாதான்.அவரது மகள் கெட்டிக்காரி.சாதிக்க தெரிந்தவள்.எத்தனை தடைகள் ஏற்பட்ட போதும் எனது இலட்சியத்தில் வெற்றிபெற என்ரை மகள் கெட்டிக்காரி என்ற மந்திரச் சொல்தான் காரணம் என்பதை நினைக்கும்போது பெருமையாக இருக்கிறது.

போர் அரக்கன் தான் கால் பதித்த நாடுகளிலெல்லாம் தன் கோர முகத்தைக் காட்டி உயிரினங்களை வதைத்து அழித்து அன்பு என்ற சொல்லையே தன் அகராதியில் இல்லாமல் செய்து விடுகிறான்.இதில் எமது நாடும் விதிவிலக்கல்ல.அந்த நாட்களில் காதுகளைச் செவிடா க்கும் போர் விமானங்களின் மத்தியில் கூட என்னால் படிக்கமுடிந்தது. வெடிமருந்துகளின் நாற்றம் பிடித்த புகையின் நடுவேயும் என்கூட படிப்பு நடைபயின்றுதான் வந்திருக்கிறது.இடம் பெயர்ந்து போகும் இடங்களெல்லாம் நான் தூக்கிச் சென்றது என் புத்தகங்களைத்தான். சுவாசத்தை நிறுத்தியவர்கள் மத்தியிலும்,காயங்களுடன் துடித்தவர்கள் மத்தியிலும் என்னால் படிக்க முடிந்தது என்றால் நான் கெட்டிக்காரி, எல்லாவற்றையும் சமாளிக்குந்திறன் என்னிடம் இருக்கிறது என்ற நம்பிக்கைதான்.¨மாதங்களுக்குக் கூட கறுப்பு வர்ணம் பூசி கறுப்புதை, கறுப்பு மே,கறுப்பு யூலை என்று கறுப்பு பக்கங்களே நிரம்பியிருக்கும் மரணபூமியில் வாழும் நாம் யாரும் எதையும்; எமக்கு செய்து தருவார் கள் என்று எதையும் எதிர்பார்க்காமல் உன் காலில் நின்று சாதித்துக் காட்ட வேண்டும்.உன் வாழ்வை மேம்படுத்தும் கருவி உன்னிடம் மட்டுமே இருக்கிறது.உன் திறமைக்கு ஏற்றபடி விருப்பமான துறையை தேர்ந்தெடுத்து எத்தனை தடைகள் வந்தாலும் முன்னேறு.என்ரை மகள் கெட்டிக்காரி சாதித்துக் காட்டுவாள்.' சோர்ந்து போகும் நேரங்களில் எல்லாம் இந்த வார்த்தைகள் காதோரம் கிசுகிசுத்து உற்சாகமூட்டும்.

எம் தாயகத்தில் தொண்ணூறுகளில் பிறந்து இரண்டாயிரங்களின் முற்பகுதியில் படித்துக் கொண்டிருந்த என் போன்றவர்கள்தான் மிகப் பெரிய துர்ப்பாக்கியசாலிகள்.போர்மேகங்கள் சூழ்ந்து முதியவர்கள், குழந்தைகள் என்ற பேதமின்றி கொன்றழிக்கப்பட்ட கால கட்டம். நச்சுக்குண்டுகளும்,nஷல் தாக்குதல்களும் மும்மரமாக இருந்த கால மது.பங்கர்களுக்குள் பதுங்கி உயிரைக் காப்பாற்ற வேண்டிய பாதுகா ப்பற்ற காலம். உயிர்களின் மதிப்பு மலினப்பட்டு பகைவர்களால் சுற்றி வளைக்கப்பட்ட காலம்.நண்பர் யார் பகைவர் யார் என்று அறிந்து கொள்ள முடியாத தமிழரின் இருள் சூழ்ந்த காலம்.எந்த இடத்துக்கு என்றாலும் இடம் பெயர்ந்து தப்பிப் பிழைத்து உயிரோடிருக்க வேண்டும் என்ற ஒரே நம்பிக்கையுடன் ஓடித்திரிந்த காலம்.அந்தக் கொடுPர காலத்தில் அகப்பட்டு தப்பிப் பிழைத்தவர்கள் நாம்.தப்பிப் பிழைத்ததும் அல்லாமல் சாதித்தும் இருக்கிறோம்.இறைவன் இருக்கு மிடம் என்று நம்பிய கோயில்களும்,தேவா லயங்களும்;,அறிவு ஊட்டப் படும் பாடசாலைகளும் பாதுகாப்பானவை என்ற நினைவுகள் பொய்யா க்கப்பட மேசைகளும்கதிரைகளும் மாணவர்களுக்கானவை என்பது மறக்கடிக்கப்பட்டு ஏராளமான பாடசாலைகள் தமிழ் மக்களின் தங்கு மிட முகாம்களாக்கப்பட்டன.தமிழர்கள் தங்கள் சொந்த இடத்திலேயே அகதிகளாக்கப்பட்டு பாடசாலைகளில் தஞ்சம் புகுந்து உயிர்ப் பாதுகா ப்பில்லாமல் இருந்த போது கூட நான் மகிழினி கெட்டிக்காரி எல்லாவ ற்றையும் தாங்கி பீனிக்ஸ் பறவைபோல் சாம்பலில் பூத்து எழும்பியிரு க்கிறேன். அப்பாவின் மகள் நான் கெட்டிக்காரிதான்.

நினைத்தால் நெஞ்சு வெடிக்கக்கூடிய நிகழ்வையும் நான் தாண்டித் தான் வந்திருக்கிறேன்.வன்னிக்கு இடம் பெயர்ந்திருக்கும்போது பட்ட கஷ்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல.ஆனால் அப்போது உடன் பிறக்காத அண்ணாமாரும்,அக்காமாரும் செய்த உதவிகள் இப்போது நினைத் தாலும் நெஞ்சை உருகச் செய்யும்.எம்மைப் பாதுகாப்பது தங்கள் கடமையென எல்லாவற்றையும் தங்கள் தோள்மேல் சுமந்து ஓடிக் கொண்டிருந்தார்கள்.சிலர் தங்களால்தான் இப்படி ஒரு நிலை வந்த தென்ற குற்ற உணர்ச்சியில் தவித்தார்கள்.ஆனால் மக்கள் யாரும் அவர்கள் மேல் குற்றம் சுமத்தவில்லை.பலநாடுகளின் உதவியுடன் வான் தாக்குதல் செய்தால் எப்படி சமாளிக்க முடியும் என்பதைப் புரிந்து கொண்டார்கள்.முள்ளிவாய்க்கால்

பேரழிவு என்பது ஒரு திட்டமிட்ட இனப்படுகொலை என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொண்டார்கள். ஒரு இனத்தை இல்லாமல் செய்ய இன்னொரு இனம் கங்கணம் கட்டிக்கொண்டு வேலை செய்தது.

அந்தக் கொடிய காலத்துள்ளும் மனக்காயங்களுடன் கல்வியைத் தொடர என்னால் முடிந்ததென்றால் நான் மகிழினி கெட்டிக்காரி என்பது மட்டுமேயாம். பாடசாலைமீது குண்டு வீசி அழித்தபோது என் உற்ற தோழிகளை இழந்திருக்கிறேன்.கற்பித்த ஆசிரியர்களை இழந் திருக்கிறேன்.உறவினர்களைத் தொலைத்திருக்கிறேன்.தாங்கமுடியாத மனவலி என்னை பிடித்து ஆட்டியபோதும் கல்லாய் இறுகி என்னுள்ளே எல்லா சோகத்தையும் அடக்கி இன்று வெற்றியடைந்திருக்கிறேன். கல்வி என்பது என்னுள் கனன்று தீப்பிழம்பாய் ஒளிர்ந்து கொண்டிரு ந்தது. இன்று கல்வியில் உச்சத்தைத் தொட்டு சாதித்துக் காட்டியிருக் கிறாள் அந்த அப்பாவின் கெட்டிக்கார மகள்.

கொழும்பில் கல்வி கற்றபோது வேற்றின விரிவுரையாளர்கள்,வேற்றின சக மாணவர்களுடன் பழகும்போது அரசியல்வாதிகள் திட்டமிட்டு இனப்பகையை உருவாக்குவது புரிந்தது.அவர்கள் அன்போடும்,மதிப் போடும் பழகியதில் பல விடயங்கள் எனக்குப் புரிந்தது.மதவாதிகளும் அரசியல்வாதிகளுந்தான் இரு இனத்தவரிடையே வேற்றுமையை வளர்த்து தாம் குளிர் காய்ந்தபடி இருக்கின்றார்கள்.கல்வியறிவு குறைந்தவர்களிடம் அவர்களது பேச்சு எடுபட்டு அறியாமையால் பகையை வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பது எனக்குப் புரிந்தது.ஆனால் என் ஒருத்தியால் என்னதான் செய்ய முடியும். சாத்தியப்படாத வேலையில் என் கவனத்தைச் செலுத்தாது கல்வியில் கவனம் செலுத்தினேன்.

கல்வியில் உச்சந் தொட்ட என்னால் திருமண வாழ்க்கையில் வெற்றி பெற முடியவில்லை.என்னுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் படித்த தோழன் என்னுடன் திருமண பந்தத்தில் நுழைந்தபோது என்னைவிட அதிஷ்டசாலி இந்த உலகில் யாருமில்லையென்று பெருமிதப்பட்டிருக் கிறேன். ஆனால் ஐந்து ஆண்டு கூட என்னால் தொடர முடியவில்லை. எனக்கு கிடைத்த பெரிய பதவி அவனை மகிழ்ச்சிப்படுத்தவில்லை. மாறாய் பொறாமைக்குள் தள்ளி தாழ்வு மனப்பான்மைக்குள் சிக்க வைத்தது.நான் ஒருபோதும் அவனை கீழ்த்தரமாக நடத்தாவிட்டாலும் அவனால் சாதாரணமாக நடக்க முடியவில்லை.அன்று நடந்த ஒரு நிகழ்வு எங்கள் பந்தத்தை முறித்தது.

வேலையால் கொஞ்சம் தாமதமாக வந்ததை சாக்காக வைத்து 'எவனோடு ஊர் சுற்றிற்று வாறீர்?'வார்த்தை நெருப்பாய் என்னை தகித்தது.என் தன்மானத்தை சீண்டிப் பார்த்தது அந்த வாக்கியம். 'என்ன பேச்சு இது?வார்த்தையைக் கொட்டாதீங்க.என்னைக் காயப்ப டு;த்த இப்ப என்ன நடந்தது?'எனக்குள் பகீரென வந்தது கோபம். அன்றைய நிகழ்வைப்போல் அடிக்கடி எனது ஒழுக்கத்தைக் குறைவாக பேசும் வார்த்தைகள் நீளத் தொடங்கின.அப்பாவிடம் தொலைபேசியில் பேசும்போது நான் கூறவும் 'இப்படியான பேச்சுக்கள் வளரவிடக்கூடாது. அடிக்கடி கூறத்தொடங்கினால் தான் நினைத்ததை சாதிக்க இதை ஆயுதமாகப் பாவிக்கத் தொடங்குவினம்.இந்த வார்த்தை ஒருபெண்ணை நோகடிக்குமென்பது ஆண்களுக்குத் தெரியும்.சுயமரியாதையை இழந்து என்ன வாழ்க்கை வேண்டிக்கிடக்குது.உமது எதிர்ப்பைக் காட்டிவிடும். அல்லது இதே தொடர்ந்து உமது நிம்மதி போய்விடும். இது தொடர அனுமதிக்கக் கூடாது'எதிர்ப்பைக் காட்டியதால் தப்பை உணர்ந்ததாக தெரியவில்லை.மீண்டும் மீண்டும் காயப்படுத்துவதை வழக்கமாக கொண்டான். நன்றாக யோசித்தேன்.என் மகன் குழந்தையாக இருந்த போதும் எங்கள் வாக்குவாதங்கள்,எனது வருத்தம் அவனைப் பாதிப் பதை உணர்ந்து வெகுவிரைவில் முடிவெடுத்தேன்.¨நாங்க பிரிந்து விடுவோம்.இது எங்கள் மூவருக்குமே நல்லதில்லை.மனக்காயங்களுடன் இந்த உறவு நீடிப்பதில் எந்த அர்த்தமுமில்லை.'கொஞ்சநாள் பேசாமல் இருந்துவிட்டு மீண்டும் உடன் வேலை பார்க்கும் சக உத்தியோகத்தர் களுடன் இணைத்து பேசுவது அருவருப்பைத் தந்தது.இந்தநாடுகளுக்கு வந்தும் இந்த நாட்டவர்களைப் பார்த்து இவர்களைப்போல் வாழத் தெரியவில்லையே என்று எம் தமிழ் சமூகத்தின்மேல் கோபம் வந்தது. அவனது பேச்சு மனஉளைச்சலைத் தந்ததேயொழிய அவன் திருந்துவ தாகவோ பிரிவதாகவோ தெரியவில்லை.பலமுறை யோசித்த நான் ஒருநாள் எனது உடமைகளுடன் மகனையும் அழைத்துக் கொண்டு தனியாக வந்துவிட்டேன்.வந்த அன்று மனம் மிகவும் அமைதியாக இருந்ததை என்னால் உணர முடிந்தது.அப்பா அழைத்தபோது வீட்டை விட்டு வெளியேறிவிட்டதைச் சொன்னேன்.அப்போது அப்பா சொன்னார். ¨வேண்டாத சுமையைக் காலம் முழுக்க சுமக்க வேண்டாம்.சரியான நேரத்தில் சரியான முடிவு எடுக்காவிட்டால் வாழ்க்கை முழுக்க அழ வேண்டி வரும.; திருமண பந்தம் மட்டுமே வாழ்க்கையில்லை. சுய மரியாதை இழந்து ஒரு திருமண பந்தத்தை நீட்டிக்க வேண்டிய எந்தத் தேவையுமில்லை.ஆண் என்ற அகம்பாவத்தில் பெண்மையைக் கேவலப்படுத்தி அவமானப்படுத்தப்படும்போது அது நமக்கான இடமில் லையென்று ஒதுங்குவதுதான் சரியானது.என்ரை மகள் கெட்டிக்காரி. அவள் என்ன முடிவு எடுத்தாலும் சரியானதுதான்' தொலைபேசியை வைத்தபிறகும் அவரது வார்த்தைகள் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

காற்றடித்தால் சாயும் சின்ன மரமல்ல இந்த மகிழினி.எந்தக்காற்றுக்கும் அசையாத யாழ்ப்பாணத்து பனைமரம் நான்.என்னை அசைக்க முடியாது.நான் கெட்டிக்காரி.

## குமரன்விஜி

கடலின் அடியாழத்தில் நீந்தும் மீன்களின்
செதில்கள் தரும் மெல்லோசையை அருகிலிருந்து
கேட்பதுபோல ஒரு சத்தம் உன் துவக்கச்
சிரிப்பிலிருந்து
ஆமையாண்டுகள் ஊர்ந்து
என் மனக்கரையில் முட்டையிட்டு
பின்பொரு நாள்
கடலில் குஞ்சுகளோடு நீந்திப்போவது
தொடர்கால பந்தம்.
உப்பு வாழ்வில்
கடலிலேயே வாழ்ந்துவிடும்
மீன்களுக்கு
அவசியமில்லை கரைகள்.
ஆனால்
வானமில்லாத கடலைப் பற்றி
பூமியிடம் ஏது உறுதி.
வானமென்பது
அன்பாய் விரிந்து இருக்கையில்
எந்தக் கிளையில் அமர்ந்திருந்தாலும்
பறவைகள்
பறக்கத் தொடங்கி விடுகின்றன.
நீரில்
ஆண் நீரென்றும் பெண் நீரென்றும்
தனியாக ஏது?, சொல்.
கலந்தே சுழல்கிறது நீரைப்போல
நம் காதல்.





## இளையவன் சிவா

கூர்தீட்டப்பட்ட
கல்லில் வைத்திருக்கும்
விலங்குகளின் வேட்டை.
இழுத்துச் செல்கிறது
இன்னொரு உலகத்திற்கு.
தாவரத்தின் நார்களுக்குள்
அம்புகளைக் கூட்டி
நடை பயணத்தில் வனத்தை அளக்கும்
மனிதனின் ஆசைக்குள்
உருண்டு கிடக்கின்றன
குருதியின் ஓட்டம்.
மரத்தின் கிளையிலிருந்து
தாவித் தாவி
விமானத்தில் ஏறிய மனிதனுக்கு
நாடுகளைப் பிடிக்கும் பேராசை
தூண்டில் போடப் போட
மனங்களைப் படிக்க முடியாமல்
மருந்துகளுக்குப் பின்னாலும்
குண்டுகளைச் சுமந்தபடியும்
ஓடிவிட முடிகிறது.

# இரா.இராகுலன் கவிதைகள்



## ஆறுதல்

எறியும் கல்லை உடைக்காமல்
விசும்புவதாய் வரிசையாய் அலையெழுப்புகிறேன்
அடியாழத்தில் தேக்கும் குளமாய் நிற்பதால்
வந்தமர்கின்றன ஒவ்வொரு கல்லும்
ஓரளவு நிரம்பியிருப்பதால்
ஏற்கனவே உள் தேங்கியிருக்கும்
கற்களைக் காண வாய்ப்பில்லை
உங்களுக்கும்முன் சிலர் எறிந்திருந்தனர்
எல்லாவற்றையும் ஆழத்தில் சுமந்து
தேக்க இடமிருப்பதால் எறிய எறிய
ஒருபோழ்தும் உள்ளிருந்து மேலெழாதபடி
மனக்கரையில் ததும்புகிறேன்
பெய்யாது நீண்ட மழையில்
வற்றிப்போயிருந்தேன் எல்லாம் தெரிய
கொக்குகளாகிச் சிறகுகள் கிளர்த்தித்
தூரமாகியிருந்தீர்

◎

## பிரிதல் நிமித்தம்

உன்னைக் கொல்வது
என்னைக் கொல்வது
நீ இறப்பது
நான் இறப்பது என்பது
நாம் சந்திப்பதை நிறுத்திக்கொள்வது
உரையாடுவதை விட்டொழிப்பது
இணைந்து எங்கும் செல்லாமலிருப்பது
நினைவுகளைக் கொளுத்திச் சாம்பலாக்குவது

◎

## நமக்கிடையேயான கேள்விகளும் பதில்களும்

கேள்விகளைக் கேட்காமலேயே காத்திருப்பதிலும்
பதில்கள் கிடைத்துவிடுகின்றன
பதில்கள் அளிக்கப்படாமல் இருப்பதிலும்
பதில்கள் கிடைத்துவிடுகின்றன
சில நேரங்களில் பதில்களே
கேள்விகளாகின்றன
கேள்விகளே பதில்களாகின்றன
நாம் நம்மை அவிழ்த்துக்காண்பிக்கிறோம்
தாழிட்டு உள்செல்கிறோம்
மிக அருகு வருகிறோம்
மிக தூரம் செல்கிறோம்
கேட்கும் கேள்விகளிலும்
அளிக்கும் பதில்களிலும்.

◎

## என்னை அறி

முதலில் என்னை நம்பு
அதனினும் கூடுதலாக என்சொல்லை நம்பு
இப்பொழுது
எழுந்து என்னோடு நடந்து வா
எங்கென்று எதுவும் கேட்க வேண்டாம்
என்னைப் பின் தொடர்ந்து
நடந்து வந்துகொண்டே இரு
இதோ இந்தக் கிணற்றில் குதி
என் மனத்தின் அகண்ட பிரபஞ்சத்தின்
மறுகரையை நீ அடைவாய்.

## வானிற்குக் கீழ்

அதே கதிரவன்தான் வந்திருந்தது
அதே நிலவுதான் வெளிவந்திருந்தது
அதே நட்சத்திரங்கள்தான்
சில இரவைக் கீறியதாலும் கீறாததாலும்
இடம் மாறியதாய் மிளிர்கின்றன
அதே வானம்தான் கடல்சேர நிலைகொள்ளாது
மேககங்களாய் அலைவுறுகின்றன
அதே கடல்தான் வானம் சேர
அலைகளாய் எழுகின்றன
ஓர் ஏணியமைத்திட
இடையில் எல்லாம்
எழுந்து மரித்து எழுகின்றன
நினைத்த உயரம் நீள


◎

## காத்திருத்தலின் விளைச்சல்

ஒரே நாளில்
எல்லாவற்றையும்
எப்படி புரிந்துகொள்ள முடியும்
எப்படி பேசிவிட முடியும்
எல்லா துயரங்களையும்
எப்படி கடந்துவிட முடியும்
எல்லா சாலைகளிலும்
எப்படி நடந்துவிட முடியும்
எல்லாவற்றையும்
எப்படி செய்துமுடித்துவிட முடியும்
எல்லா கேள்விகளையும் கேட்கவும்
எல்லா பதில்களையும் சொல்ல முடியும்
ஒரே வாழ்க்கையில்
எப்படி எல்லா வாழ்க்கையையும் வாழ முடியும்

◎

ஐ .தர்மசிங் நாகர்கோவில்



# "நான்"

ஆதி நாள் துவக்கம் முதல்
என்னுடனே
எனது பயணம்

குழந்தையாக இருந்தேன்
குழந்தையைப் போல பேசினேன்
முதிர் வயதானேன்
முதிர்ச்சியோடு பேசுகிறேன்


இரு விழிகள் இருந்தும்
எனக்கு எப்படித்
தெரியாமல் போனது
எனது முகம்

தாயின் அன்பு
வெளிப்படுவதாக சிலரும்
தந்தையின் அறம்
நிறைந்திருப்பதாக சிலரும்
பாம்பின் சீற்றம்
படர்ந்திருப்பதாக சிலரும்
இரவின் அமைதியை
அணிந்திருப்பதாக சிலரும்
கலகக் குரல்
கலந்திருப்பதாக சிலரும்
கருணையின் கனிவு
கசிவதாக சிலரும்
அவரவர் பார்வையில் என்னை
அளவிடுகிறார்கள்

எனது பார்வையில்
நான்
பரிசுத்தமானவன் என
என்னை நானே
கட்டமைத்திருப்பதால்
பிறரின் வாழ்வு
பிழை சூழ் உலகாக
புலப்படுகிறது

யாரேனும் என்னை
எந்த வடிவில் கண்டாலும்
என்னிடம் அழைத்து வாருங்கள்
"நான்" ஐ கொன்று விட்டு
என்னில் வாழவேண்டும்
நான்.

ச.சத்தியபானு, சென்னை



# மழலையின் மந்திரச் சொற்கள்

ஒவ்வொரு முறையும் வெற்றி நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் பிரதாப்பிற்கு இன்று ஏனோ அவனோடு தொடர்ந்து நான்கு ஐந்தாகி ஓடிக்கொண்டிருக்கிறார்....

அதிகாலையில் எழுந்து அலறல் மொழியுடன் விழிக்கும் ஹரணிக்கு இன்னும் கொஞ்சம் சொந்தங்களாய் தொடர்ந்துக் கொண்டு போகிறது விளையாடும் பொருட்கள்...

தேடி தேடி எடுக்கிற ஏ,பி,சி,டி என எழுத்துகளை ஒன்று சேர்க்கும் பவ்யாவிற்கு புரியவில்லை இது ஆங்கில எழுத்துக்களென்று .... வாசிலின் அருகில் எறும்புகள் சாரை சாரையாக நீண்டிருக்க அதனருகில் சக்கரை அள்ளி தெளிக்கிறாள் அனுஷா.....

இப்படி பெரும் பெண் அணிகள் மத்தியில் அழகிய அண்ணாய் நின்றுக் கொண்டிருந்தான் பிரதாப்....

உதடுகள் முழுவதும் புன்னகை ஏதோ தேடிக் கொண்டிருக்கிறது அவர்களது கண்கள் பிற்கால வாழ்வியல் நிகழ்வுகளுக்கு அடித்தளமாக சமைப்பது எப்படி? வாழ்வில் மேடு பள்ளங்களை கடப்பது எப்படி? வெற்றியை பெறுவது எப்படி? தோல்வியிலும் திருப்பி நடப்பது எப்படி? யெனும் பாடங்களோடு பயணித்து கொண்டிருக்கிறது பால் மனம் மாறா பச்சிளம் குழந்தைகள்.....

தினமும் நடக்கும் சாலை தான் என்று நினைக்கும் போதெல்லாம் ஒவ்வொரு முறையும் சைக்கிளிலிருந்து விழுந்து எழுந்து சாதனைப் படைக்கிறார்கள் குழந்தைகள்.....

என்றும் போலவே தோன்றும் வானம் அதிலிருந்து வரும் சூரியன் தானே என நினைக்கும் போதெல்லாம் சூரியனுக்கு பொட்டு வைத்து அனையாக்குகிறாள் ஹரணி.... என்றாவது ஒரு பெய்யும் மழையை கூட அள்ளி தனது பையில் போட்டு விடுகிறான் பிரதாப்.....

பல கப்பல்களை செய்து கடலில் விடுவது கூட கடினமான பொருட்செலவாக உள்ளதா நம் தேசத்திற்கு பல வண்ண காகிதங்களில் கப்பல்களை மிதக்க விடுகிறாள் பவ்யா..... அது கரை கடக்கும் போதெல்லாம் மனதின் பாரங்களை குறைத்து கொண்டே போகிறது .....

அன்றாட பணிகளில் கலந்து சாப்பிட்டு புது புது பெயர்களை இட்டு செல்கிறார்கள் குழந்தைகள்......

புதிய உத்வேகத்துடன் கடக்கிறது அதிகாலை உறவுகளாய் அழகிய புறாக்கள்..... அவைகளிடமும் தூது அனுப்புகிறார் குழந்தைகள் எனது தந்தை சீக்கிரம் வீட்டு வர சொல்லென்று.... எனக்கு நிறைய விளையாட்டு பொருட்களையும், சிறயளவு நெறுக்குத்தீனிகளும் என்கிறார்கள் குழந்தைகள்.....

எந்த நேரம் பூக்குமென்று பூக்களுக்கு கூட தெரியவில்லை.... ஆனால் அதனை உண்ணும் வண்டுகளும், வண்ணத்துப்பூச்சிகள் தேனின் சுவையறிவது போல யார் யார் எந்தெந்த வீடுகளில் எங்கெங்கு சென்றிருக்கிறார்களென சரியாக கூறி விடுவார்கள்.... அதான் அந்த குழந்தையும் தெய்வமும் ஒன்றேன கூறி இருக்கிறார்கள்.....

வாழ்க்கை பாடத்தை அழகாக கற்றுக் கொள்கிறார்கள் மழலையென்னும் மந்திரிகள்..... அடிக்கடி பெரியவர்கள் அனைவரும் நான் சிறுவர்களாகவே இருந்தால் எவ்வளவு நல்லது என்று புலம்புவர்கள் மத்தியில் சிறுவர்கள் மட்டும் சிறுவர்களாவே இருக்கிறார்கள்.....

ஒவ்வொரு காக்கை இடும் உணவை பாதம் பார்த்து விட்டு செல்கிறது சில அணில்கள் போல தன் குழந்தைக்கென எடுக்கும் சாதத்திலும் பிற குழந்தைகளுக்கு ஊட்டி விட்டு தாயாகிறார்கள் சில அன்னைமார்களும் .....

இப்படியொரு அழகிய பயணமாய் அனைத்து குழந்தைகளும் சங்கமித்து ஓசையை எழுப்புகிறது விடியாத விடியல்களையும் தொலைந்த கிடந்த இரவுகளை தனது மழலை மொழியில் மெல்ல அணைத்து தன்னுள் தாழிட்டு கொள்கிறார்.....

அனுதினமும் அகந்தையுடன் திரியும் பூனைகளையும் சேர்த்து கொள்கிறார்கள் தன்னுடைய எட்டாவது நண்பன் இதுவென்று.....

அவர்களுடனே சுற்றி திரியும் வாய்களுக்கு உணவிடும் போதெல்லாம் சாப்பிடு சாப்பிடுவென்று தலையை கோதி விடும் போது மாண்டும் போன மனிதநேயம் மறுபடியும் துளிர்கிறது அவர்களின் பிஞ்சு விரல்களுக்குள்....

அதட்டும் அம்மாவிடமும் அசட்டு சிரிப்பை அள்ளி தெளிக்கிறார்கள்.... முறைக்கும் மாமன்களிடம் முணுமுணுத்து கொண்டு அன்பினை அள்ளுகிறார்கள்......

பூக்கும் பூக்களுக்கு புது விதமான வாசனை போல புதிய உலகினைப் பார்க்கும் குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் புதியது ஒவ்வொரு மணித்துளிகளும் அரிது.....

கட்டமைக்கும் கட்டத்தை தாண்டிய ஒரு அழகிய பயணமாய் தொடர்கிறது மழலையின் மந்திரச் சொற்கள்.... பூமியில் இன்னும் புது வித மலர்களால் பூத்து குலுங்கி மகிழட்டும் மழலை மந்திர புன்னகையால் ..... வாழ்வித்து வாழ்கிறார்கள் மழலைகள்......



# வீர விதைகளின் கதை

**கதை – 1**

*(ஒரு போராளியின் போராட்ட வாழ்க்கையின் ஒருபகுதி சில கற்பனைகளோடு.)*

பச்சை வயல்வெளி பரந்து கிடைக்க வாழ்வும் வளமும் மக்களோடு பின்னிக்கிடந்தது தம்பலகாம கிராமத்தில். என்றும் இனிய பூங்காற்றால் இறுக கட்டியணைத்தபடி வயல்வெளிகள் சூழ்ந்து கிடக்க குட்டி தீவுகள் போன்ற மேட்டு நில கிராமங்களில் மக்கள் துன்பம் அறியாது இன்புற்றிருந்தார்கள். அதில் ஒரு கிராமம் தான் கள்ளிமேடு. அங்கெ துள்ளி விளையாடும் சிறுவர்கள் போல் சின்னச்சிறு பசுக்கன்றுகளும் ஒன்றோடொன்று முட்டி மோதி விளையாடி கிடந்தன. இயற்கை அன்னையின் தாவணி விரிப்பில் நர்த்தனமாடிக் கிடந்தன முயல்களும் மான்களும். அந்த சிறு முயல்போல் தனது சின்னஞ் சிறு வயது முதலே மிகவும் சுறுசுறுப்பாக விளையாடித் திரிந்தான் இனியன். வாலிபப்பருவம் எதையும் துணிவுடன் செய்யும் குணமும் நண்பர்களிடையே அவனுக்கு பெரும் மதிப்பை தந்திருந்தது. என்னதான் இருந்தாலும் அவனது மகிழ்ச்சி அவனது தம்பலகாம மண்ணில் நிலைக்கவில்லை. அழகிய பருவமங்கையாய் அழகோவியமாய் கிடந்த அந்த நிலத்தை கவர நினைத்தார்கள் அயலில் இருந்த பெரும்பான்மையின கிராம மக்கள் அதற்கு துணை போனது அரச இயந்திரம். பச்சை

வயல் பருவ மங்கைபோல் கதிர் முற்றி குனிந்திருக்கும் வேளை காடையர்களோடு வந்த பெரும்பான்மை குடிகள் வயல்களை சூறையாடினார்கள். அதைத் தடுக்கச் சென்ற கிராம மக்களை வயல் வெளிகளுக்குள் வெட்டிச்சாய்தனர் அந்த காடையர்கள். வெறியர்களின் கோரத்தால் சிலபொழுதுகளில் இரத்தமும் சதையுமாக கற்பிழந்து கிடந்தன வயல்வெளிகள். பல நாள் சோகமே சூழ்ந்து கிராமமே அமைதியாக கிடந்தது.

நிலானி அவனது கைகளின் பிடியில் காதலின் ஆழம் இல்லாததை உணர்ந்தாள் இடையிடையே இனியனின் சிந்தனை அவளை விட்டு வேறு இடம் செல்வதாய் எண்ணினாள். தனது கரங்களால் அவனது முகத்தினை ஏந்தி என்ன யோசனை என்றாள். கண்களில் ஏறிய இரத்த சிவப்பு மாறாமல் அன்னை மண்ணை காடையர்கள் சூறையாடும் போது காதல் கொள்வது கடினமாக இருக்கின்றது நிலானி என்றான். அவள் வார்த்தை மறந்தாள். அந்த காலத்தில் அந்த கிராமமே போர்க்கோலம் பூண்டிருந்தது. நீ நினைப்பது என்னவென்று புரிகிறது இனியா உன்விருப்பப்படியே செய் உன்னை தொடர்ந்து நானும் களம் காண வருவேன் என்றாள். அவன் நிலானியை இறுக்கி தன் மார்பின் அணைப்பினுள் சிலநிமிடங்கள் வைத்தபின் அவளிடம் இருந்து விடைபெற்றான். அவன் அணைப்பு நிமிடங்களா மணித்துளிகளா என்று மறந்து கன்னத்து கண்ணீரை துடைத்து கையசைத்தாள் நிலானி. அப்போது அவன் அவள் கண்களில் இருந்து மறைந்து கொண்டிருந்தான். வீட்டருகே அவனது தாயார் அந்த வழியே போராளிகள் யாரும் வருகின்றார்களா வந்தால் அவர்களுக்கு சாப்பாடு கொடுத்துவிட்டு படுக்கைக்கு செல்வதற்காக நின்றிருந்தாள். அம்மா பசிக்குது என்று வந்த இனியனுக்கு அவனுக்கு பிடித்த மான் கறியோடு பரிமாறினாள் அம்மா. அவர்களுடன் இரு போராளிகளும் உணவருந்தி விடைபெற்றார்கள். அம்மாவோடு நீண்ட நேரம் உரையாடி விட்டு படுக்க சென்றான் இனியன்.

அவனது பயிற்சி காலத்தின்போதே பல களங்களை சந்திக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. திருகோணமலை போராட்டங்களையும் இழப்புகளையும் சந்தித்து அவலத்தின் உச்சில் இருந்த நிலம் அங்கு வாழும் ஒவ்வொருவருமே தாங்களும் ஓர் போராளியாகவே வாழ்ந்தார்கள் எல்லை கிராமங்களில் இருந்து வரும் ஆக்கிரமிப்புகளை எதிர்த்து போராளிகளோடு தாங்களும் நின்று போராடினார்கள். அந்த ஊர் பெரியவர் ஒருவரிடம் இருந்து பெற்ற தகவல்களை வைத்து அன்றய திட்டம் வகுக்கப்பட்டிருந்தது அன்று பயிற்சி பெற்ற போதிய போராளிகள் அங்கு இல்லாத காரணத்தால் இனியனும் அந்த ஊர் மக்களும் இணைக்க பட்டார்கள். தங்கள் கிராமங்களை ஆக்கிரமித்திருந்த காடையர்களையும் ஆயுதபடையினரையும் அழித்தொழிக்கும் திட்டம் உருவாகி இருந்தது. தனது முதலாவது போர் என்று வெறியோடு புறப்பட்டான் இனியன். ஒரு போராளிக்கு தன் இனத்தை அளிப்பவனை அழித்தொழிப்பது வெறியாக இருந்தால் தான் அவன் வெற்றிகொள்வான். தெகிவத்தை முகாம் காடையர்களும் படைகளும் சேர்ந்து கும்மாளம் போட்டபடி இருந்தது. முன்னேறிச் சென்ற போராளிகளின் இடைவிடாத தாக்குதலால் நிலைகுலைந்து செய்வதறியாது திணறினார்கள் ஒரு சில காடையர்கள் தப்பி ஓடி காட்டுப்பகுதிக்குள் செல்ல முனைந்தபோது சூழ நின்ற மக்களின் தாக்குதலுக்கு உள்ளாகி மாண்டார்கள். அவர்களுக்கு உதவிக்கு மேலதிக படையை அழைப்பதற்கு கூட நேரம் இன்றி படைமுகாம் முற்றாக அளிக்கப்பட்டது. எமது மண்ணை சூறையாடிய கயவர்களிடம் இருந்து பல ஆயுதங்கள் கைப்பற்ற பட்டன. அவற்றை மக்களே போராளிகளின் முகாமிற்கு எடுத்துச் சென்று தந்தார்கள். தங்கள் தரப்பில் எதுவித இழப்புகளும் இன்றி நடந்த இந்த தாக்குதல் இனியனை மேலும் உற்சாக படுத்தியது அவனுள் ஏறிக்கிடந்த விடுதலை நெருப்பு சுவாலை விட்டு எரியத்தொடங்கியது. தனது தளபதியிடம் தான் அடுத்த சண்டைக்கு எப்போ போவது என் று அடிக்கடி கேட்டான் இனியன். அவனுக்கு அழகன் எந்த பதிலும் சொல்லவில்லை உனது பயிற்சி இன்னும் முடியவில்லை பேசாமல் இரு என்று அனுப்பிவிட்டான். அழகன் தான் அந்த முகாமின் பொறுப்பில் இருந்தான். இனியனின் முதன்நாள் தாக்குதலே அவனின் திறமையை அழகனுக்கு காட்டிநின்றது. அவன் தன்னோடு இணைந்தது அழகனுக்கு மேலும் பலமாக தோன்றியது.

எதிர்பார்த்தகாலத்தைவிட விரைவாகவே பயிற்சி காலத்தை முடித்தான் இனியன்.

தனது மகன் நாட்டுக்காக சென்றதையிட்டு பெருமைப்பட்டு இருந்தாள் இனியனின் தாய் சூடாமணி. அவன் எப்போதாவது வந்து தனது கையால் உணவருந்திப்போவான் என்று எண்ணி கிடந்தாள். தொடர்ந்து தினமும் தன்பிள்ளைகள் போல் அந்த வழியால் செல்லும் போராளிகளுக்கு உணவு கொடுப்பது அவளது வழக்கமாய் இருந்தது. தம்பலகாம கிராமத்தில் ஒவொரு வீடுகளும் போராளிகளுக்கு தங்கள் சொந்த வீடுபோலவே இருந்தது. தொடர் இழப்புகளை சந்தித்துக்கும் எமக்கு இவர்கள்தான் விடிவெள்ளிகள் என்று எண்ணி கிடந்தது தம்பலகாமம். வானத்து வெள்ளிகளை எண்ணியவாறு தனது கடைசி நாள் பயிற்சி முடிந்ததையும் இனி முழு சண்டைக்கு தான் போகமுடியும் என்ற எண்ணமும் அவனுக்கு மேலும் உடலில் முறுக்கேற்றியது. வயல் வேலை செய்து முறுக்கேறிய இனியனின் தந்தை வயல்வெளிகளில் இனி எவ்வளவு காலம் விவசாயம் செய்யமுடியுமோ தெரியாது என்று சூடாமணியிடம் கவலைப் பட்டுக்கொண்டிருந்தார். அவர்களின் ஆக்கிரமிப்பு தொடந்துகொண்டே இருக்கின்றது. கொஞ்சம்

கொஞ்சமாக தாங்கள் வாழ்ந்த கிராமங்களை விட்டு தமிழ் மக்கள் இடம்பெயர தொடங்கிவிட்டார்கள். எப்போ இங்கே வருவார்களோ தெரியாது என்று கவலையோடு பேசினார். அன்று பேசிய வார்த்தைகள் நிலானியின் காதுகளில் அலையலையாய் வந்து இரைந்துகொண்டிருந்தன. ஆசையாசையாய் இனியனோடு வாழ நினைத்த அவளின் கனவு காணாமல் போயிருந்தது. அவளது கனவு மட்டுமல்ல அந்த கிராமமே தங்கள் வாழ்க்கையின் நீட்ச்சியை நினைத்து ஏங்கி கிடந்தது. இனியும் பொறுத்திருக்க முடியாதென்ற முடிவோடு தன்னையும் போராளியாகிக்கொண்டாள் நிலானி. இப்பொழுது அவள் இனியனோடு மனதளவில் மீண்டும் இணைத்துவிட்டது போன்று இருந்தது. விடுதலை பெற்றால் வாழ்வோம் அல்லது உடல் மண்ணில் இணையட்டும் உயிர் விண்ணில் இணையட்டும் என்று நினைத்தாள். இனியனின் நினைப்பு நிலானியின் மீது சென்றது இதே விண்மீன்களை அவனின் கண்களுக்குள் எண்ணியவாறு அவனை பார்த்துக்கிடந்தாள் நிலானி. என்ன பார்கின்றாய் என்றான் இனியன். உன் கண்களுக்குள் இறங்கி காதல் தடாகத்தில் காணாமல் போகின்றேன் என்றாள். ஐயோ நீ படிக்கும் தமிழ்தான் உன்னில் என்னை தொலைய வைத்தது என்றான் இனியன். தமிழும் காதலும் இறங்கினால் வெளியேற முடியாதுதானே என்றாள் அவள் இருவரும் மனமின்றி பிரிந்த நாட்கள் எத்தனையோ இருந்தன. கண்ணில் கிடந்த விண்மீன்கள் ஆயிரம் சூரியனாகி விடுதலை நெருப்பாய் அவனது நெஞ்சில் எரிந்துகொண்டிருந்தது. எவ்வளவுநேரம் உறங்கினான் என்று தெரியாது சின்னவன் ஊற்றிய தண்ணீர் சில்லென்று தலையில் இறங்கியது. துரத்திக்கொண்டு ஓடினான். ஐயோ அண்ண அழகண்ண வரட்டம் அடுத்த தாக்குதல் திட்டம் தயார் என்று ஓடினான் சின்னவன். அந்த முகாமில் வயதில் சிறியவன் தான் சின்னவன் தாய் தந்தை இரு சகோதரிகள் சாவினை நேரில் பார்த்து காலில் குடுபட்ட காயத்தோடு சாவின் வாசல்வரை சென்று வந்தவன். இனி அவனுக்கு வாழ்க்கையில் எதைக்கண்டும் பயமில்லை என்று இருக்கும் துடிப்பான போராளி. இவன் போன்று இன்னும் பலர் இனி இழக்க எதுவும் இல்லை என்று இந்த தேசத்தில் இருக்கின்றார்கள். இம்முறை அழகன் தெரிவு செய்த இடம் மக்கள் நடமாட்டம் அற்ற வீதி, ஆயுத படையினர் காடையர்கள் முகாமிற்க்கு ஆயுதங்களும் உணவும் கொண்டு செல்லும் பாதை. துப்பறியும் போராளிகளிடம் இருந்து கிடைத்த தகவலின்படி நேரம்மும் திட்டமும் மிகவும் கவனமாகவே செய்யப்பட்டது. அன்றிரவு இனியனையம் சின்னவனையும் கூடிக்கொண்டு சென்றான் அழகன். அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு இரவு முகாமிற்கு திரும்பிக் கொண்டிருந்தார்கள். ஊரே அடங்கிக்கிடந்தது. இனியனின் கைகளை இறுக பற்றி இழுத்து நிறுத்தினான் சின்னவன் அண்ண எதோ கடிச்சுப்போட்டுது என்று சொன்னான். அழகன் தன்னிடம் இருந்த மின்விளக்கை ஏற்றி தேடினான் கிடந்த சருகளுக்குள் அது மறைந்து கொண்டிருந்தது. ஒருவனின் முதல் எதிரி மனதில் ஏற்படும் பயம்தான் எனவே என்னவென்று கூறாது மறைத்தான் அழகன். அது ஏதும் பூச்சியாக இருக்கும் என்று கூறிய அழகன் இனியா நாங்கள் எமது முகாமிற்கு விரைவாக திரும்பி செல்லவேண்டும் என்று சொன்னவுடன் இன்யனின் சாரமே காவு கட்டில்லாக மாறியது. சின்னவன் அழக்கூட கண்களில் நீரேற்று கிடந்தான். முகாமிற்கு சென்றபோது மருத்துவிச்சி செல்லமா சில இலைகளோடு நின்றாள். என்ன நடக்கின்றது என்று தெரியாமல் விழி பிதுங்கி கிடந்தான் சின்னவன். செல்லம்மா அட இது சாரை ஒரு மண்ணும் பண்ணாது என்று கூறி சின்னவன் காலில் பல்லு பட்ட இடத்தில் இருந்து சிறிது இரத்தத்தை எடுத்துவிட்டு பச்சிலை சாற்றை வைத்தாள். விடிய எல்லாம் மாறிவிடும் கவனமா இருங்க பிள்ளையள், நீங்கதானே எங்கிட காவல் தெய்வங்கள் என்று கூறி சென்றாள். தனது சகோதரனுக்கும் சாரை கடித்து மாறியதும் இதே செல்லமா கிழவிதான் வைத்தியம் பார்த்ததும் இனியன் நினைவில் வந்துமறைந்தன. அதிகாலை நான்கு மணிக்கு எல்லோரும் புறப்பட்டார்கள். தங்கள் ஆயுதங்கள் ஏந்தியவாறு அழகனின் உத்தரவுக்காக காத்துநின்றார்கள். அழகன் தடுத்தும் சின்னவன் தனது சீருடையோரு வந்து நின்றான். பாலம்போட்டாறு என்று இடத்தில் வந்து அனைவரும் நிலைபெற்றார்கள் ஒருபுறம் அடர்ந்த சிறு மரங்கள் கொண்ட பற்றைக்காடு மறுபுறம் வீதியை மறைக்கும் கற்பாறை தொகுதி. இருபுறமும் தங்கள் நிலைகளை எடுத்துக்கொண்டார்கள் போராளிகள். ஒரு ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்காக போராடுபவர்கள் தங்கள் முழு உறுதியையும் போராட்ட களத்தில் வைத்திருப்பார்கள் ஒருபுறம் அழகனோடு சில போராளிகளும் மறுபுறம் இனியனோடு சில போராளிகளும் பதுங்கி இருந்தார்கள். அழகன், அருகில் கிடந்த சின்னவனுக்கு சைகை காட்டினான். அந்த நொடிப்பொழுதில் சின்னவனின் எண்ணத்தில் தனது குடும்பத்தினரும் மற்றும் அன்று அவனது கிராமத்தில் உயிரற்று வீழ்ந்த தனது கிராம மக்களும் கண்முன்னே வந்து சென்றார்கள். முதல் வந்த வாகனம் தீப்பிளம்ப்பாக மேலெழும்பி அந்த இடத்தையே ஒளிப்பிழம்பாக்கியது. இனியன் மற்றும் அழகனோடு வந்த போராளிகளின் கைகளில் இருந்த முன்னர் எதிரியிடம் கைப்பற்றபட்ட ஆயுதங்கள் அவர்களுக்கே பதில் சொல்லிக்கொண்டிருந்தன. எதற்கும் அஞ்சாத வீரர்களின் கைகளில் இருந்த துப்பாக்கிகள் குண்டுகளை உமிழ்ந்தவாறு முன்னே சென்றுகொண்டிருந்தன. சில நிமிடங்கள் நடைபெற்ற பலத்த எதிர்தாக்குதலின் பின்னர் அந்த இரண்டாவது வண்டியும் மௌனமாகியது. விரைந்து சென்ற போராளிகள் எதிரியின் ஆயுதங்களை அந்த வண்டியில் இருந்து எடுத்துக் கொண்டிருந்தார்கள். இனியன் திடீரென குட்டியை ஈன்ற புலி இரையை

தப்பவிடாது பாய்வதுபோன்று மின்னல் வேகத்தில் பாய்ந்தான். அவனது துப்பாக்கி இடைவெளியின்றி ரவைகளை கக்கிக்கொண்டு இருந்தது. அந்த ராணுவ வீரன் வாகனத்தில் இருந்து கீழே இறங்கியே பதில் தாக்குதல் நடாத்தியிருக்கின்றான் ஆட்டத்தின் வேகத்தில் இதை போராளிகள் யாரும் கவனத்தில் கொள்ளவில்லை. அந்த வீரன் வாகனத்தின் மறைவில் இருந்து போராளிகள் இருந்த திசை நோக்கி துப்பாக்கியை நீட்டினான். அவனது ரவைகள் குழலை கடந்திருந்தால் பல போராளிகளின் உயிர் அந்த இடத்தில போயிருக்கும். ஏனெனில் எந்தவித மறைவோ அன்றி சூட்டின் எல்லையில் இருந்து தப்பிக்க கூடிய நிலையிலோ அவர்கள் இல்லை. அந்த கணப்பொழுதில் தன் உயிரையும் மதிக்காது தனது சக போராளிகளின் உயிரை காக்க பாய்ந்து செயற்படத்தால் அந்த தாக்குதல் போராளிகள் தரப்பில் எந்த சேதமும் இல்லாமல் வெற்றிகரமாக நடந்தேறியது. தாக்குதலின் பின்னர் இனியனின் கிராமமான கள்ளிமேடினூடாக உளவு இயந்திரத்தில் போராளிகள் சென்று கொண்டிருந்தார்கள். அன்றும் இனியனின் தாய் சூடாமணி வீட்டு வாசலில் யாரும் வந்தால் உணவு கொடுப்பதற்காக நின்றிருந்தாள். இப்போதெல்லாம் எப்போதாவது ஒருநாள் தன்மகனும் வருவான் என்ற எண்ணம் தான் அவளுக்கு இருந்தது. உளவு இயந்திரம் அவளை கடந்து சென்று சிறிது தூரத்தில் நின்றது. அனைத்து போராளிகளும் இறங்கி அவளை நோக்கி வந்தார்கள் இனியன் ஓடிவந்து தாயை கட்டி அணைத்தான். அவன் தாயையும் தாய் நாட்டையும் நேசித்த உத்தமன். அனைவரும் உணவருந்தியபின் சூடாமணியிடம் இருந்து விடைபெற்று சென்றார்கள்.

அந்த காலம் தொப்புள் கோடி உறவென்று கூறிய தேசத்து படைகளும் அவர்களோடு சேர்ந்தது இயங்கிய அரச படைகளோடும் போராடவேண்டிய காலம். போர் என்பது அப்போது நேரடியாகவும் மறைமுகமாகவும் உள்நுழைந்து தாக்கி அளிக்கும் காலமாகவும் இருந்தது. வந்த அயல் நாட்டு படைகள் இங்கிருந்த இளைஞனர் சிலரை தங்கள் தேவைக்காக பாவித்தார்கள் அவர்கள் மூலமாக போராளிகளின் மறைவிடங்கள், ஊருக்குள் அவர்கள் வந்து செல்லும் இடங்கள் என்பனவற்றை அறிந்துகொண்டார்கள். போராளிகளுக்கு உதவினார்கள் என்று பல பொதுமக்கள் துன்புறுத்தப்பட்டு சிறைப்பிடிக்க பட்டார்கள். ஆரும் அற்ற அநாதை இனமாக அளிக்கப்பட்டுக்கொண்டிருந்தது தமிழ் இனமும். காவலுக்கு வந்தவர்களாலேயே களவாடப்பட்டுக்கொண்டிருந்தது எமது தேசம். இவர்களுடன் நாங்கள் போராடி வெல்லமுடியும் என்று நினைகிண்றீர்களா என்றான் சின்னவன். டேய் தம்பி இது மாத்திரமெல்ல இந்த உலகத்தின் அத்தனை நாட்டு படைகள் வந்தாலும் நாங்கள போராடுவோம் ஏனென்றால் அவர்கள் கூலிக்காக வேலை பார்ப்பவர்கள் நாங்கள் நசுக்கப்பட்ட இனத்தின் பிள்ளைகள் கடைசி போராளி இருக்கும்வரை முழக்கம் நிற்காது என்று இடியின் குரலாக இருந்தது இனியனின் வார்த்தை.

இனியன் அப்போது மூதூர் பிரதேசப் பொறுப்பாளனாக இருந்தான் அனைத்து விடயங்களிலும் சிறந்ததொரு தளபதியின் பண்பையும் ஆற்றலையும் கொண்டிருந்தான். அன்று மக்களோடு மக்களாகவே இனியேனும் தோழர்களும் கலந்து நடமாடினார்கள்

தாக்குதல் நடாத்துவதற்கு பெருமளவு ஆயுதங்களை எடுத்து செல்லமுடியாத நிலை ஏழு பேர் கொண்ட குழுவாக இனியன் புறப்பட்டான். ஐந்துபேரை தன்னோடு அளைத்துக்கொண்டு மறைக்கப்பட்ட ஆயுதங்களோடு வெருகல் முகத்துவாரா கிராமத்தில் உள் நுழைந்தது இனியனின் குழு இதை எவ்வாறோ அறிந்த படையினர் முன்னரே மறைந்திருந்து இனியனின் குழுவை சுற்றி வளைத்தனர். அதை அறிந்த இனியன் தனது திட்டத்தை மாற்றி பின்வாங்க உத்தரவிட்டான் அறுவரும் அங்கிருந்து தப்ப முடியாத நிலை. தாக்குதலுக்கு எப்படி தயாராக வேண்டும் என்பதோடு எப்படி பின்வாங்கி தப்பிக்க வேண்டும் என்பதும் அவர்களுக்கான மறைந்து தாக்கும் போர் முறையில் சிறைப்பாக இருந்தது. எதிரியின் துப்பாக்கிகள் குண்டுகளை கக்க தாயாரான வேளை இரு வேறு எதிர் திசைகளில் கைக்குண்டுகள் வெடித்தன, உடனே படையினர் சத்தம் வந்த திசை நோக்கி சுடத்தொடங்கினர். முன்னரே இனியன் கொடுத்த ஆணையின் படி காந்தன் கைகுண்டுகளை வீசிவிட்டு தப்பித்தான். அந்த மின்னல் வேகத்தில் இனியனும் சக போராளிகளும் அங்கிருந்தது பின்வாங்கத் தொடங்கினார்கள். தன் போராளிகளை காப்பதற்காக இனியனின் துப்பாக்கி தொடர்ந்து குண்டுகளை துப்பியவாறே பின்வாங்கியது. அந்த நிலைமையை சுதாகரித்த ஒரு படை வீரன் இனியனை நோக்கி சுட்டான். பாய்ந்து வந்த குண்டு இனியனின் இடது காலில் துளை போட்டு வெளியேறியது. ஆனாலும் இனியன் தனது நண்பர்களை காப்பதற்காக தொடர்ந்து பதில் தாக்குதல் நடாத்தியவாறே சென்றான். அடுத்த குண்டு இனியனின் வலது மார்பில் உள்ளிறங்கியது. அப்போ தனது துப்பாக்கியை மௌனித்து அங்கிருந்து தப்பித்து சுற்றிவளைப்பில் இருந்து வெளியேறினார்கள் போராளிகள்.

அன்று அவனது தோழர்கள் அனைவரும் மருத்துவர்களும் தாதிகளுமாய் மாறி இனியனுக்கு சிகிச்சை அளித்தார்கள் அதில் இருந்து மீண்டுவர பல மாதங்கள் ஆகியது. அதற்கு முன்னர் நடந்த பல போர்களில் அவன் பட்ட காயங்களைவிட இம்முறை இனியனின் காயம் மாற நீண்ட நாளாகியது. அதிலிருந்து மாறி அடுத்த களமுனைக்கு தயாராகும்வரை இனியன் மருத்துவ முகாமில் இருந்தான்.

நிலானி போராளியாக தன்னை இணைத்து சில மாதங்களிலேயே அரச படைகளும் காடையர்களும்

கள்ளிமேடுக் கிராமத்து நிலங்களை சூறையாடவந்தபோது நடைபெற்ற போரிலே வீரச்சாவை தழுவிவிட்டாள். அந்த கிராமத்து மக்களில் மரணித்தவர்களைவிட எஞ்சியோர் அங்கிருந்து இடம்பெயர்ந்து அருகில் உள்ள கிராமங்களுக்கு சென்றுவிட்டனர். இப்பொது இனியனின் கள்ளிமேட்டு கிராமம் தமிழர்களின் நிலம் என்ற அடையாளம் மறைக்கப்பட்டுவிட்டது. அங்கு வாழ்ந்த இனியனின் பெற்றோர் என்ன ஆனார்கள் என்பதுகூட அறியமுடியாத நிலை. எனக்கு பின்னால் தானும் வருவேன் என்று கூறிய நிலானி எனக்கு முன்னே சொந்த மண்ணிலேயே இரதம் சிந்திவிட்டாள். அந்த பூ போன்ற மென்மையான பெண்ணுக்கும் பூமித்தாய் போன்று பொங்கியெழ வைத்தது எமது மக்களின் விடுதலை வேட்க்கை என்று கூறிய இனியனின் கண்கள் தலையணை வரை கரைந்தன. அவனது குடும்பத்தின் நிலை அழவைத்ததா அல்லது நிலானியின் பிரிவு அழவைத்ததா இல்லை அவனது கிராமத்தின் அழிவு அளவைத்ததா என்று யோசனையோடு இனியனின் கையை பற்றினான் முருகன். காயப்பட்ட போராளிகளின் மருத்துவ முகாமிற்கு கள்ளிமேடுக் கிராமத்தில் இருந்து வந்தவன்தான் முருகன். அவனும் வேறு ஒரு பகுதியில் நடைபெற்ற மோதலில் தனது ஒரு காலை இழந்திருந்தான்.

வாகனத்தில் வந்திருந்தால் மூன்று மணி நேரம் தான் எடுத்திருக்கும் நாமோ மூன்றாம் நாள் அரைவாசித்தூரம் தான் கடந்துள்ளோம் என்கிறார் அருண்மாஸ்ட்டர். இதெல்லாம் எமது தமிழ் மக்கள் வாழ்ந்த இடம் ஆனால் இன்று நாம் அனைத்தையும் இழந்துவிட்டொம். எமக்கென்று ஒரு அரசு இல்லாததுதான் இந்தநிலை என்று பெருமூச்சு விட்டார். நாம் இப்போ எங்கே நிக்கின்றோம் என்றான் சின்னவன், மற்றவர்கள் தங்களுக்குள் தங்களின் ஊர்களின் கதைகள் தங்களுக்கு நடந்த அவலங்களை கதைத்தவாறு நடந்து கொண்டிருந்தார்கள். சில நேரம் தங்களின் போராட்டத்திற்கு வருமுன்னர் இருந்த வாழ்க்கையும் பேசி நடையின் களைப்பை மறந்தார்கள். அடர்ந்த காட்டின் நடுவே நடந்த களை மாற ஒரு இடத்தை தெரிவுசெய்து அமர்ந்தார்கள். இனியனை அழைத்த அருண் இப்பொது அந்த முயல்களை நாங்கள் சுட்டு சாப்பிடலாம் என்கிறார். அனைவரின் அடிவயிற்றிலும் பசித்தீக்கு நெய் வார்த்து வர்த்ததுபோல் இருந்தது. பசி இருந்தாலும் உணவின் வாசனையோ அன்றி நினைப்போ ஏற்படும்போதுதான் அடிவயிற்றில் தீச்சுவாலை மேலெழும். அதை கடப்பது பெரும் பாடாகவே எல்லோருக்கும் இருந்தது. மூதூரில் இருந்த புறப்பட்டு இன்று நான்காம் நாள், இரண்டு அல்லது மூன்று நாள் என்று எண்ணி புறப்பட்ட பயணம் நான்காம் நாளில் நிற்கின்றது. அடர்ந்த காட்டினூடே நடக்கும்போது அதிக உணவு பொருட்களை எடுத்துவர முடியாது. எனவே கொண்டுவந்த உணவு அனைத்தும் தீர்ந்துவிட்டது. பிடித்த முயலை முன்னர் சாப்பிட அருண் விடவில்லை நெருப்பின் புகை மேலெழுந்து அயலில் உள்ள குடிகளுக்கு தெரிந்தால் நாம் செல்வது தெரிந்துவிடும். ஆனால் இப்பொது நாம் அடர்த்த காட்டினுள் இருக்கின்றோம். அதோடு இந்தப்பகுதியின் கிழக்கு ஓரளவு நமது கட்டுப்பாட்டில் இருக்கின்றது. மேற்கு பகுதி யாரும் புகமுடியாத காடு. அண்ணா எனது கேள்விக்கு பதில் சொல்லவில்லை என்றான் சின்னவன். மேலும் இந்த பாதையால் இவ்வளவு தெளிவாக எவ்வாறு வருகிண்றீர்கள் என்றான். இனியன் எல்லோருக்கும் நெருப்பில் வாட்டிய முயல் இறைச்சியை பரிமாறிக்கொண்டிருந்தான். இது இன்று கோமரங்கடவல என்று அழைக்கப்படும் பகுதியின் காடு. ஆனால் என்று நிறுத்தி பெருமூச்சு விட்டார் அருண் மாஸ்டர். இறைச்சியயோடு இறங்கிய நீர் அடிவயிற்றின் தீயை சிறிதுசிறிதாக அணைத்துக்கொண்டிருந்தது. அவரின் நெஞ்சில் எரிந்த நெருப்போ முழு காடும் பற்றி எரிவதுபோல் கனன்றுகொண்டிருந்தது. நாம் நடந்து வந்த பாதைகள் அநேகமாக யானைகளின் வழித்தடங்கள் நாங்கள் இதனூடாக பல முறை கடந்துள்ளோம்.ஆனால் இந்த முறைதான் பயணம் நீண்டதாகி விட்டது ஏனெனில் முன்னர் ஒரு அரச படையோடு போராடினோம். இப்பொது இரண்டு அரசுகள் அதுவும் இவர்கள் எந்த காடுக்குள்ளும் செல்லக்கூடிய படைபலம் உள்ளவர்கள். அவர்களின் எண்ணிக்கையும் எந்த கடுமையான நிலையையும் சமாளிக்கும் திறனும் மிகவும் அதிகம் கொண்டவர்கள். நாங்கள் கடந்த மகாவலி கங்கை, உப்பாறு, தம்பலகாமகளப்பு எல்லாம் முன்னர் சிறு படகுகள் மூலம் விரைவாக கடந்து வருவோம். இம் முறையோ நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி கிடந்தது ஏனெனில் இன்று காட்டிக்கொடுப்பவர்கள் அதிகமாயிருக்கின்றார்கள். கடைசி இறச்சி துண்டை கடித்தவாறு இந்த பகுதி முன்னர் குமரன்கடவை என்ற தமிழ் கிராமம். நமது மக்கள் வாழ்ந்த பகுதி. இந்த இடதில் 13 ஆம் நூற்றாண்டு பழைமையான சோழர் காலத்து சிவன் கோவில் இருக்கின்றது. அந்த பக்கம் உள்ள மலையில் கோவில் அடியில் தமிழ் மற்றும் சமஸ்கிரததால் ஆன கல்வெட்டு இருக்கின்றது. நாம் ஆண்ட நிலங்கள் இன்று எம்மிடம் இல்லை. நாடு காட்டிக் கொடுத்தாலும் காடு ஒருபோதும் போராளிகளை காட்டிக் கொடுப்பதில்லை என்றவாறு எழுந்தார் அருண் மாஸ்டர். இனியும் தாமதித்தால் நாளை இரவிற்குள் பொய் சேமுடியாது விடிந்தால் வீதியால் நடக்க முடியாது புறப்படுவோம் என்று அருண் ஆயத்தமானார்.

மூதூரில் இருந்து மணலாற்றுக்கான நடை பயணம் முடிந்து அனைவரும் முகாமில் இளைப்பாறினார்கள். மணலாறும் தம்பலகாமம் போன்று அரச உதவியோடு காடையர்கள் குடியேற்றங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

அவற்றுக்கு எதிரான போர்கள் பலவற்றிலும் இனியனும் அவனது தோழர்களும் பங்கேற்றார்கள் தினமும் இழப்புகள் வெற்றிகள் என்று கடந்து போனது. அப்போது அயல் நாட்டு படைகள் அகற்றப்படுவிட்டன. தமிழ் மக்கள் தமது நிலங்களுக்கு திரும்பி வாழத்தொடங்கினார்கள். அவர்கள் சென்று சில மாதங்களின் பின்னர் அரச படைகளின் உதவியோடு மீண்டும் ஆக்கிரமைப்பு ஆரம்பமாகியது. ஆனால் இப்போது அவர்களுக்கான எதிர்ப்பு போராளிகளிடமிருந்து மிகவும் மோசமானதாக இருந்தது. அதை சமாளிக்க முடியாமல் திண்டாடியது அரச படை.

மேலும் தமக்கு உதவியாக மணலாறு மாவட்த்தின் அமரிவயல் கிராமத்தில் சிறிய படை முகாம் ஒன்றை அமைத்தார்கள். அந்த புதிய முகாமை அண்டிய பகுதிகளில் குடியேற்றங்கள் திட்டமிட்டு முனைப்போடு நடைபெற இருக்கின்றன என்பதினை போராளிகளின் தகவல் அறியும் பிரிவினர் அறியத்தந்தனர். கொக்கிளாய் படை முகாமில் இருந்து முன்னேற முனையும் படைநடவடிக்கை அனைத்தும் போராளிகளின் முன்னணி காவல் அரண்களில் இருந்து மேற்கொண்ட பெரும் எதிர்பால் தடைபட்டுக் கிடந்தது. அந்த முன்னணி அரண்களின் பொறுப்பில் இருந்தான் இனியன். அவனுக்கு மேலிடத்தில் இருந்து தகவல் வந்தது அமரிவயல் முகாம் தாக்குதல் திட்டமிட்டுள்ளது அதற்கு இனியன் பொறுப்பேற்று நடாத்த வேண்டுமென்பதே அந்த தகவல். அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி இரவு முழுவதும் காடையர்களாலும் படைகளாலும் எமது மக்கள் படும் வேதனை கண்முன்னே வந்து சென்றது. இன்னும் ஓரிரு நாட்களில் சமர் தொடங்கவேண்டும் கொக்கிளாயில் இருந்து வரும் உதவிகளை எவ்வாறு தடுப்பது வேறு வழிகளில் படையினருக்கு கிடைக்க கூடிய உதவிகள் அனைத்தையும் அறிந்து கொண்டான்.


நாயாறு கடற்கரை மணலில் தனது நண்பர்களோடு சென்று அந்த மணற்பரப்பில் சிறு குழந்தைபோல் நண்பர்களுடன் உருண்டு புரண்டு விளையாடி அவர்களுடன் இரவு உணவை அருந்தினான். இரவு தோழர்களிடம் அனைத்து விபரத்தையும் கொடுத்து அனைவருக்குமான சீருடைகள் என்னென்ன ஆயுதங்கள் யார் யார் பாவிப்பது எந்தெந்த நிலைகளில் அவர்கள் செயற்படவேண்டும் என்று விரிவாக விளங்கப்படுத்தினான். அவனுக்கான புதிய சீருடை வந்துசேரவில்லை. சீருடை போட்டாலே ஒரு தனி மிடுக்குதான் என்று நண்பனிடம் கூறிச்சென்றான்.

அதிகாலை வேளை தாக்குதல் நடாத்த வேண்டிய முகாமிற்கு அருகே சென்று சேர்ந்தனர் அதிகமாக வயல் வெளிகளே நிறைந்து கிடந்தன அவருக்கிடையே அரண் அமைத்து நின்றன சிறிய புதர்கள். கார்த்திகை மாத குளிர் இரவு பெய்த மழையின் ஈரம் சிறிது சிரமமாகவே இருந்தது. ஆனாலும் அதுதான் அந்த புதிய சிறிய படை முகாமில் இருந்த படையினருக்கு எந்தவித தாக்குதலுக்குமான எதிர் பார்ப்பையும் தரவில்லை.

அந்த புதர்களுக்குள் பதுங்கி கிடந்தார்கள் போராளிகள். காலை தனது கண்களை சிறிதாக திறந்தது. அந்த ஒளியில் முகாமுகாமில் நடமாட்டம் தெரிந்தது. சரியான நேரம் பார்த்து காத்திருந்த இனியனின் துப்பாக்கி குண்டு நெருப்பை கக்கியவாறு முன்னேறியது. தொடர்ந்து போராளிகள் இரவை கிழித்து ரவைகளை உமிழ்த்தவாறு முன்னேறினார்கள். முன் அரணில் இருந்த படையினர் திகைத்து வீழ்ந்தனர் உள்ளிருந்த படையினர் சுதாகரித்து மூர்க்கமான எதிர் தாக்குதல் நடாத்தினர். அமரிவயல் முகாமின் நான்கு புறமும் போராளிகள் சூழ்ந்துகொண்டனர். சில போர் முனைகளை மூன்று புறம் சூழ்ந்து ஒரு வழியால் வெளியேற இடம் கொடுத்து போராளிகள் தாக்குவார்கள் இல்லையே எதிரியின் எதிர் தாங்குதல் அதிகமாக இருக்கும். எதிரியிடம் சிக்கும் பூனைக்கூட த் தான் தப்ப வழி இல்லாவிடில் தன்னை காத்துக்கொள்ள மூர்க்க மாக எதிர் தாக்குதல் செய்யும். ஆனால் இது சிறிய முகாம் என்பதால் இனியனின் படை நான்கு புறமும் சூழ்ந்து தாக்கியது.

முன் அரண்களைத் தாண்டி முன்னேறியது இனியனின் படை. சின்னவனின் தலையையும் மார்பையும் துளைத்து வெளியேறின எதிரியின் குண்டுகள் சரிந்து அவன் மண்ணில் வீழ்ந்தான். பாய்ந்து முன்னேறிய போராளிகள் சில அடிகள் இடைவெளியில் நின்று மோதினார்கள். எண்ணிலடங்கா துப்பாக்கி ரவைகள் முகிலனை பதம்பார்த்தன. சில மணி நேரத்தில் கடும் போரின் பின் படை முகாம் போராளிகளின் வசம் வீழ்ந்தது. ஆக்கிரமிப்புச் சின்னம் அடியோடு வீழ்ந்தது. தனது இடது கை ஆள்காட்டி விரலை முன்னே காட்டியவாறு வலது கையால் மார்போடு தனது துப்பாக்கியை அணைத்தபடி சரிந்து வீழ்ந்து கிடந்தான் இனியன். அவனது உடல் எங்கும் இரத்த துளைகள் குருதியை வெளியேற்றிக் கொண்டிருந்தன. அந்த வீரனின் உடலும் அவனது ஆயுதமும் தங்களது வெப்பத்தைக் குறைத்துக் கொண் டிருந்தன. இனியன் அணிய விரும்பிய புதிய சீருடை அவனது வித்துடலை கம்பீரமாக அலங்கரித்திருந்தது. இனியன், சின்னவன் முகிலன் ஆகியோர் மரியாதையுடன் அவர்கள் நேசித்த மணலாற்று மண்ணில் விதைக்கப் பட்டார்கள்.

அடுத்த விதையின் கதை தொடரும்.



மலர் மகள்

## எல்லாமுமாக

*அன்பாக*
*ஆறுதலாக*
*நட்பாக*
*துணிவின் பிரகடனமாக*
*எதிரியாக*
*துரோகியாக*
*வன்மமாக*
*பேராசையின் நிறமாக*
*சாதிக்கும் கருவியாக*
*உறவை ஒதுக்கும் அலையாக*
*தற்கொலைக்கு தூண்டிலாக*
*பகடையின் சோடனையாக*
*ஏமாற்றும் கொள்கலனாக*
*என பன்முக செயலியாக*
*அலங்கரித்துக் கொள்ள*
*முடிகிறது*
*அந்த பொக்கை வாய்*
*கிழவன் தாளால்.!!!*

நேசன் மகதி

## காதோடு கேட்பதெல்லாம்...!!

*தார்பாய்கொண்டு மூடப்பட்ட சிறுவாகனத்தில்*
*சிறிய இசையொலிகளை*
*காற்றில் மிதக்கவிட்டு*
*பாடல்களை பாடிக்கொண்டே*
*மெல்ல நகரும்*
*கண்பார்வையற்றோர் வாகனத்திலிருந்து*
*காதுகளில் வந்து விழுகிறது*
*ஒரு பாடல்*
*கண்ணோடு காண்பதெல்லாம்*
*கண்களுக்கு சொந்தமில்லை.....!*

# வில்வரசன் கவிதைகள்

## வனத்தாய்


அவ்வளவு இலகுவில்
கடந்து செல்ல முடிவதில்லை
அந்த தேக்கு மரங்களை
வீதியின் இருபுறமும் இலைகள் உதிர்ந்தும்
பட்டைகள் சிதைந்து
சன்னம் துளைத்து
எச்சமாய் நிமிர்ந்து நிற்கும்
தேக்க மரங்களை
அவ்வளவு இலகுவில்
கடந்து விட முடிவதில்லை

கார்த்திகை மலர்ந்தது.
வான்துளி முத்தத்தில்
துளிர்த்துக்கொண்டன காடுகள்
மீண்டும் பாடத் தொடங்கின வண்டுகள்.
மொட்டைக்குளத்தில் மலர்ந்த தாமரையின்
பக்கத்திலிருந்து வாத்தியம்
இசைக்கின்றன தவளைகள்.

முகம் மறந்து போன
மறவர்களின்
நினைவுகளை மீண்டும் பாடத்தொடங்கின
நேசம் விதைத்த பெருமரங்கள்.

நெஞ்சத்தில் பொங்கி எழும் கண்ணீரை அடக்கி
அந்த வீதியின் இருபுறமும் புன்னகைத்து
சிலிர்க்கும் காற்றின் வருடலில் தேங்கிக்கிடக்கிறது
ஓர் யுகக்கனவு.

★ தேராவில் துயிலும் இல்லம் தாண்டி
பயணிக்கும் பாதையில் வீதியின் இருபுறமும்
உள்ள தேக்கு வனம்.



◎

## வேட்டை

எல்லா மலைப்பயணங்களின் பொழுதும்
எங்கிருந்தோ எப்படியோ வந்து சேர்கின்றது
அறிமுகமில்லா வேட்டைநாயொன்று

பயணத்தின் முழுமைக்கும்
வழிகாட்டியபடி நடக்கிறது
பாறைகளில் உட்க்கார்ந்து ஒய்வுகொள்கிறது,
இடைக்கிடை வாலாட்டவும்
அன்புடன்
முகம் உரசி முத்தம் தரவும் செய்கின்றது.

பயணம் முடிவில்
சொல்லிக்கொள்ளாமலே
விடைபெறுதலற்று
மறைந்து போகின்றது,
எப்போது இல்லாமல் போனது என்பதை
யோசிக்கும் கணத்திலெல்லாம் மெல்லிய
பிறாண்டலுடன்
மெளன உறுமலுடன்
மனதுக்குள் இருந்து குரைக்கிறது
அன்பெனும் விம்பமாக.

◎

## தனியிரவு

இரவுகள் எப்போதும் சபிக்கப்பட்டவை
இரவுகளில் தான் நகரத்தொடங்குகின்றன
துயரமெனும் நாகங்கள்

இரவுகளில் தான்
மனப்புற்று கிழித்து இறக்கைகள் முளைத்துப்
புற்றீசல்களைப் போல
நினைவில் பறக்கின்றன அவமானங்கள்

அமவாசை இருளில்
இரவுப்பூச்சிகளின் மெல்லிசையில்
எதோ ஒன்றை யோசித்தபடியே
கழிந்து போதலே
இப்போதெல்லாம் இனிமையாகிற்று

சீக்கிரம்
வந்து விடப்போகின்ற பௌர்ணமி நிலவுக்காய்
காத்திருக்கின்றன அல்லிகளும்
அதன் பக்கத்தில் தனித்தழும்
இதயங்களும் கூட.

◎

## நட்பியல் குறிப்புக்கள்.01

நெடுங்காலத்துக்குப் பிறகு
இரண்டு நண்பர்கள் சந்தித்துகொள்கையில்
தங்கள் இறந்த காலத்துக்குக்காய்
இரங்கி கொள்கின்றனர்
இனிவரும் நாட்களுக்காய்
வாழ்த்தவும் செய்கின்றனர்

பிரியும் போது
சந்திக்கலாம் எனும் நம்பிக்கையில்
இருவரும்
ஒற்றைப் புன்னகையை
மாறி மாறி சட்டைப்பைகளில்
திணித்துக்கொள்கின்றனர்

அவ்வளவுதான்

◎

## நட்பியல் குறிப்புக்கள். 02

பால்ய காலத்து நண்பர்களைச்
சந்திக்கும் போதெல்லாம்
“எப்பிடி இருக்கிறாய் “
என்ற கேள்விக்குப்
பதிலற்று
விவரணங்கள் தவிர்த்து
“ஒரு டீ சாப்பிடலாமா? “
என்றழைக்கும் புன்னகையில்
வந்தமர்கிறது
“அப்பிடியேதான் இருக்கிறேனெனும்
இறந்த காலத்தின் பதிலுரை

சங்கர சுப்பிரமணியன்

# எது எவரை தீர்மானிக்கிறது / எவர் எதை தீர்மானிக்கிறார்?

கற்றவர் எல்லாம் அறிவாளியா
கல்லாதவர் எல்லாம் மூடரா

போர்புரிபவர் எல்லாம் போராளியா
போர்புரியாதவர் எல்லாம் கோழையா

பேசத்தெரிந்தவர் எல்லாம் பேச்சாளரா
பேசத்தெரியாதவர் பேச்சாளரில்லையா

கற்றுக் கொடுத்தால்தான் ஆசானா
கற்றுத் தராவிடில் ஆசானில்லையா

நடிப்பவர் எல்லாம் நடிகரா
நடிகரல்லாதவர் நடிப்பதில்லையா

எழுதுபவர் எல்லாம் எழுத்தாளரா
எழுத்தாளரால் மட்டுமே எழுதமுடியுமா

பாடுபவர் எல்லாம் பாடகரா
பாடகரில்லை என்றால் பாடக்கூடாதா

காவியுடுத்துபவர் எல்லாம் துறவியா
துறவியெல்லாம் காவி உடுத்துகிறார்களா

ஆலயம் செல்பவர் எல்லாம் ஆன்மிகவாதியா
ஆலயம் செல்லாதவன் எல்லாம் நாத்திகனா

விருதுபெறுபவர் எல்லாம் சிறந்தவரா
விருதுபெறாவர் எல்லாம் சிறப்பற்றவரா

விருதுபெற்றவை எல்லாம் உயர்ந்தவையா
விருதுபெறாதவை எல்லாம் தாழ்ந்தவையா

இங்கு எது எதை தீர்மானிக்கிறது?
இங்கே எவர் எவரை தீர்மானிக்கிறார்?
ஏன் இக்கேள்வி என்னுள் எழுகிறது?

அன்றொரு நாள் அங்கே ஒரு போட்டி கண்டேன்


அடுத்த நாள் அப்போட்டியில் பலர்
போட்டி போடக்கண்டேன்

இன்றுவரை பல விருதுபெற்றோர்
அவ்விருதை பெறவுமில்லை

அது என்னவென்று எனக்கு ஒன்றும் புரியவில்லை

அன்றொரு நாள் அங்கே ஒரு போட்டி கண்டேன்

பலர் போட்டி போடக்கண்டேன்.



# ஓடை வெயில்

கல்லூரி.... கலை கட்டும் நேரம் மதிய நேரம் தான்.

லன்ச் டைமில் இருக்கும் ஆசுவாசம்.... ஒரு குதூகலம்.... நாளில் வேறு நேரத்தில் கிடைக்காது. ஆளாளுக்கு பிடித்த இடத்தில்... பிடித்த தோழிகளோடு.. பிடித்த நண்பர்களோடு என அமர்ந்து உண்கையில் உள்ளத்தில் சலசலக்கும் ஓடையை உணரலாம். ஆளுக்கொரு கை... ஆளுக்கொரு சோறு. எந்த டிபனில் எந்த சோறு என்று எவனுக்கும் தெரியாது. ஸ்லாபில் அமர்ந்து... மரத்தடியே கூடி... கேன்டீனில் அமர்ந்து... மைதான சுவர் ஒட்டி நின்று... என்று பொதுவுடைமை பொக்கிஷம் தினம் தினம் பூக்கும் நேரம்.

*Bcom*காரன் *BBM*ல் இருப்பான். *Bsc*க்காரன் *Bcs*ல் இருப்பான். பார்க்கவே பேரழகாக இருக்கும். ஒற்றுமையின் உற்சாகம் டிபன் பாக்ஸ் விரல்களில் வீணை மீட்டும். கடையில் சாப்பிடுகிறவனும்t இருக்கிறான். காசு வைத்திருப்பான். அல்லது.. கடன் வைத்திருப்பான். அதே நேரம் லன்ச் பெல் அடித்தும் அடிக்காமல் வீட்டுக்கு ஓடுகிறவனும் இருக்கிறான். வீட்டு சாப்பாடு விரும்பிகளை பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. வீடு அருகில் இருக்கலாம். அல்லது பைக் வைத்திருக்கலாம். ஒவ்வொரு வயிறுக்கும் ஒவ்வொரு கதை இருக்கிறது தானே. இது வனராஜன் கதை.

வனராஜன் வீட்டுக்கு போகும் லிஸ்டில் வந்து விடுவான்.

ஏன்டா உன்கிட்ட பைக்கும் இல்ல.. வீடும் தூரம். நடந்து போயிட்டு வர தான் நேரம் இருக்கும். வேக வேகமா போய் சாப்டுட்டு.. வேக வேகமா இந்த வேகாத வெயிலுக்குள்ள ஓடி ஓடி வர்றதுக்கு.... சோத்தை டிபன் பாக்ஸ்ல போட்டுகிட்டு வந்துட்டா ஈஸி தான.

நண்பர்கள் சொல்லி பார்த்தார்கள். சொல்லி சொல்லி பார்த்தார்கள்.

ம்ஹூம். சுட சுட தின்று பழகியவர்கள்... சுலபத்தை விரும்ப மாட்டார்கள். நடந்து நடந்து ஓடி ஓடி வீட்டுக்கு போனாலும் சரி. திருப்தியா சாப்ட்டு வரணும் என்று வனராஜன் வியாக்கியானம் பேசுவான்.

“தோப்புக்கார தொரைடா... அப்டித்தான் பேசுவாரு. பேர் பாத்தியா வனரா.........ஜன்.... இந்த வனத்துக்கே ராஜன் இல்லயா...!!?”

நண்பர்களின் கேலியை அவன் பொருட்படுத்தியதே இல்லை. மதிய பெல் அடித்ததும்... மடங்கி இருந்த காற்றுக்கு மல்லிகை பூ சூடின மாதிரி வேர்க்க விறுவிறுக்க ஓடி விடுவான்.

என்னவோ நடக்குது. நண்பர்களுக்கு சந்தேகம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஒரு நாள் சந்தேகம் வலுத்து விட்டது. சந்தேகிக்க.... வீடு செல்லும் அவன் பாதை தான் தடம் போட்டுக் கொடுத்தது.

எனக்கென்னவோ இவன் வீட்டுக்கு போற மாதிரி தெரியலயே... அப்புறம்..... வீடு அந்த பக்கம் இருக்கு. இவன் ஆல மரத்து இறக்கம் வரை போறான். அப்புறம் யு டர்ன் அடிச்சு கிழக்கால போயர்றான். இது கதையே வேறன்னு நினைக்கறேன் என்றான் நம்பகமான வேவுபாக்கி.

இல்ல இல்ல.. கண்டிப்பா இது லவ்வுதாண்டா... இல்லனா இந்த அளவுக்கு.... நேரத்துக்கு அட்டனென்ஸ் போட போக முடியாது... சரி அப்பிடி யாரு.. நம்ம காலேஜ் புள்ளயா...

அவளா இவளா... இவளா... அவளா...

எந்த டிபார்ட்மெண்டு...

நண்பர்கள் சாப்பிட்டுக் கொண்டே யோசித்தார்கள். சாப்பிடுவதை விட்டு விட்டும் யோசித்தார்கள். தினம் தினம் மண்டைக்குள் இதே குடைச்சல். கேட்டாலும் சரியான பதில் இல்லை. இன்னைக்கு எங்க கூட சாப்பிடு என்று இழுத்து வைத்தாலும்... முறைத்துக் கொண்டு சென்று விடுகிறான்.

நிலவரம் இப்படி இருக்க... *Bsc*காரன் கண்டுபிடித்து சொன்ன கதையே வேறு.

லவ் தான். ஆனா புள்ள நம்ம காலேஜ் இல்ல.

அப்புறம் *SBM* காலேஜா...? அதுதான் தோப்பு தாண்டி இருக்குது..!

அப்படியும் இருக்கற மாதிரி இல்ல. அந்த காலேஜா இருந்திருந்தா இந்நேரம் எப்பிடியும் விஷயம் வெளிய வந்திருக்கும்.

இது ஏதோ வேற விவகாரம் போல. பக்கத்து தோட்டத்து புள்ளன்னு நினைக்கறேன். அது படிக்கல. பண்ணையம் தான் பாத்துக்குது. இதுல இன்னொரு விஷயம் என்னன்னா.... அது கல்யாணம் ஆகி புருஷன விட்டு வந்துருக்கு. என்னவோ கனெக்சன். அதான். ஆளு ரகசியமா போயிட்டு வந்துட்டு இருக்கான்.

கை கால் முளைத்த கற்பனையோ... வேஷம் போட்ட வதந்தியோ... இல்ல நிசமாதான் சொல்றயோ. அவர்களை பிராண்டிக் கொண்டே இருந்தது.

நண்பர்கள் வட்டம் திட்டம் போட்டது. இல்ல மச்சி இதை கண்டு பிடிச்சே ஆகணும்.

நான் உள்பட நான்கு பேர் கொண்ட குழு காலையிலேயே முடிவெடுத்து விட்டோம். எப்படா லன்ச் டைம் வரும் என்று பார்த்துக் கொண்டிருந்தோம். மதியம் வரைக்குமே வகுப்பில் அவன் மேல் தான் எங்கள் கண்கள். அவன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வழக்கம் போல வகுப்பை கவனித்துக் கொண்டிருந்தான். நேரம் நெருங்க நெருங்க.... அவன் இயல்பாய் தான் இருக்கிறான். எங்களுக்கு தான் என்னென்னவோ பண்ணியது.

லன்ச் பெல் அடித்தது. மண்டைக்குள் டக்கென விழித்துக் கொண்ட ஹன்ச் கண்கள் அவனை சூழ்ந்தன.

எங்கள் மதிய உணவை தியாகம் செய்தோம். விட்டு பிடிக்க வேண்டும். பின் தொடர்வது தெரிந்து விடக்கூடாது. பம்மினோம். அவன் வழக்கம் போல வேக வேகமாய் நடையை போட்டான். நாங்களும் வெயிலும் அவனை பின் தொடர்வது சிரமமாக இருந்தது. இருந்தாலும்... ஒளிந்து ஒளிந்து பின்

நடந்தோம். கிடைத்த மரத்துக்கு பின்னால் மறைந்து மறைந்து தாவி தாவி அவனைத் தொடர்ந்து கொண்டே இருந்தோம்.

*Bscக்காரன் சொன்னது சரி தான்.*

அவன் வீட்டுக்கு போகும் வழியை விட்டு விட்டு கீழே கிழக்கு நோக்கி செல்லும் பாதையில் நடக்க ஆரம்பித்தான். அவ்வப்போது திரும்பி திரும்பி பார்த்துக் கொண்டான். சரி தான். ஆள் வசமா என்னவோ செய்து கொண்டிருக்கிறான். அவன் பின்னால் திரும்பும் போதெல்லாம் நாங்கள் செடி புதர்களில்... மர மறைவில் காற்றாய் கரைந்தோம். பிறகு அவன் வேகமெடுக்க நாங்களும் தாகமெடுக்க பின் தொடர்ந்தோம். அவன் ஓடைக்கருகே சென்று விட்டான். தாண்டினால் அந்த தோப்பு குயிலி வீடு தான்.

*பார்க்க சாதுவாக இருந்துகிட்டு படுபாவி என்ன வேலை பண்றான் பாரே. தினமும் அய்யாவுக்கு குயிலி தான் சோறு போடறாளா.*

*சோறு மட்டுமா...* என்ற எங்கள் குழு குசும்பனை கண்களாலே பேசாம இருடா என்று முறைத்தேன்.

சரி சரி என்று வெற்றிடம் அசைத்து சமாதானம் செய்தான். ஆனாலும் கண்களில் குறிப்பு துள்ளியது.

அவனோ... ஓடையின் முன் நின்றான். ஓடையையே வெறிக்க பார்த்தான். நாங்கள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தோம். குனிந்து நீரள்ளி முகத்தில் அடித்துக் கொண்டான். கைகளை கழுவினான். நாங்கள் நெற்றி சுருங்கி நேற்றை விலக்குவது போல பார்த்தோம்.

*என்ன பண்றான்.*

*நீரை அள்ளி அள்ளி குடித்தான்.*

*நடந்து வந்த தாகம் இருக்கும் தான..* நாங்கள் வாகாக மறைந்து நின்று வெயிலை சிமிட்டாமல் பார்த்தோம்.

மீண்டும் நின்று ஓடையையே பார்த்தவன் ஏதோ யோசித்தவனாய் அதன் அருகே நிழல் கொண்ட கல் மீது மெல்ல அமர்ந்து கொண்டான்.

*என்ன தோப்புக்குள்ள போக மாட்டேங்கறான். அவனுக்கு தெரிஞ்சிடுச்சோ என்னவோ..* நாங்கள் எங்களை இன்னும் குறுக மறைத்துக் கொண்டோம். ஒருவேளை குயிலி சோறு எடுத்துக்கிட்டு ஆத்தங்கரை பக்கத்துல ஒரு ஆலமரம் இருக்குன்னு பாடிகிட்டே வருவாளோ. எங்கள் உடல் எங்கும் கண்கள். கண்கள் எல்லாவற்றிலும் ஆர்வம்.

அவள் வரவில்லை. அவனும் ஓடையைத் தாண்டவில்லை. அமைதியாக அமர்ந்திருந்தான். சூனியத்தை வெறிக்க பார்த்தபடி.... அசையாமல் கல் போலவே அமர்ந்திருந்தான். மூச்சு விட கூட அவன் உடல் அசையவில்லை. வெயில் தியானமா இது. என்ன யோசிக்கிறான். நாங்கள் அமைதி இழந்து கவனித்துக் கொண்டிருந்தோம். வானத்தை பார்த்தான். பெருமூச்சு விட்டான். எழுந்தான். ஸ்திரமாக நின்றான். மீண்டும் குனிந்து நீரள்ளி முகத்தில் அடித்துக் கொண்டு திரும்பி விட்டான்.

என்ன கருமன்டா இது.. ஒன்னும் விளங்கலயே. சரி என்று விட்டு விட்டு.... மறுநாளும் பின் தொடர்ந்தோம். அதையே தான் செய்தான். மறுநாளும் பின் தொடர்ந்தும் அதையே தான் செய்தான். அந்த வாரம் முழுக்க பின் தொடர்ந்தோம். அதையே தான் செய்தான். அந்த வருடம் முழுக்க பின் தொடர்ந்திருந்தாலும் அதையே தான் செய்திருப்பான்.

*ஏன் என்றால்.....?!*

என்று சொன்ன போது என் கண்கள்...மேடையில்.... எங்கள் கல்லூரி ஆண்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த உதவி ஆட்சியாளர் வனராஜனை பார்த்தது. அவன் கண்கள் கலங்க என்னை பார்த்து.....ம்ம்ம் என்பது போல தலையசைத்தான்.

கூட்டம் அமைதியாக கவனித்துக் கொண்டிருந்தது. நான் நா தழுக்க தொடர்ந்தேன்.

மதிய சாப்பாடு இல்லை. அதை மறைக்க தான் தினமும் அவன் ஓடையை தேடி நடந்திருக்கிறான். மற்றவர்களிடம் இருந்து தன் பசியை மறைத்துக் கொள்ள ஒரு தனிமை தேவைப்பட்டிருக்கிறது. அதற்கு தான் அந்த வெயிலில் அந்த வேக நடை. யாரிடமும் வறுமையை பகிர அவன் விரும்பவில்லை. அவன் அந்த தோப்பு வழியாக கல்லூரிக்கு வந்தவன். தோப்பில் இருந்து இல்லை. பசி அவனை ஓடை நீராய் உதிர்த்த போதும்... படிப்பு அவனை தலை சிறந்தவனாய் ஆக்கி விட்டது.

எந்த கல்லூரியில் அவன் ஓடை நீரை குடித்துக் கொண்டு படித்தானோ அதே கல்லூரிக்கு சிறப்பு விருந்தினராக வந்திருக்கும் எங்கள் நண்பன் வனராஜனை கல்லூரி தமிழாசிரியன் என்ற முறையிலும்... தனிப்பட்ட நண்பன் என்ற முறையிலும் வரவேற்கிறேன். வாழ்த்துகிறேன். இளமையில் வறுமை கொடிது. அந்த வறுமையிலும் படித்தானே... அது பெரிது.

அதற்கு மேல் என்னால் பேச முடியவில்லை. சிறப்புரை நிகழ்த்த... சிறப்பு விருந்தினர் உதவி ஆட்சியாளர் வனராஜன் அவர்களை அழைத்து விட்டு இருக்கையில் உள்ளம் நடுங்க அமர்ந்தேன்.

பேச எழுந்த அந்த நண்பனின் கண்களில்.... அந்த மதிய நேர ஓடை மினுமினுத்தது.

ஸ்ரீவி.முத்துவேல், தூபாய்



# பெருமையின் சிகரத்தில்....

ஆற்றலருவி வற்றிக் கொண்டிருக்கும் ஒரு மாலைவேளை அது. துபாயில் நாங்கள் வாழும் அடுக்குமாடி குடியிருப்பிற்குள் நுழைகிறேன்.

காவலாளியிடம் அறையின் குளிர்பதனியைப் பழுதுபார்த்து விட்டார்களா? என்று கேட்கிறேன். அவரிடமிருந்து இல்லையென்ற வார்த்தை வெயில் என்னை உரைத்து அடிக்க ஒரு சொட்டுமில்லாத ஆற்றலருவியாய் நொந்து போனேன்.

மின்தூக்கிற்குள் நுழைந்தவுடன் ஆறாவது பொத்தானை எழுப்பி என்னைத் தூக்கிக் கொண்டு செல்ல சொல்கிறேன். கதவுகள் மூடத் தயார்கின்றன. பல்பொருள் அங்காடியில் வாங்கிய பொருள்களுடன் கணவன் மனைவி ஓடி வருகிறார்கள். நான் கதவுகள் திறக்கும் பொத்தானை அழுத்தி பிடிக்க உள்ளே நுழையும் வெள்ளைச்சிட்டுகள். நன்றிக் கனியை பெற்றுக் கொண்டு சிரிப்புப் பூக்கொத்தை பரிசளித்தேன். நீங்கள் இந்தியாவா? என்று கேட்டதும் நான் ஆம் என்றேன். 'வணக்கம்' மென்ற தமிழ் வெள்ளம் அவர்கள் இதழ்களில் ஓட ஆரம்பித்த தருணம் நான் மெழுகுச்சிலையாய்.

நாங்கள் இந்தியாவிற்கு சுற்றுலா வந்திருக்கிறோம் என்றதும் மகிழ்ச்சிக்கடலில் மிதந்தவாறே எங்கள் அறை கரையினை அடைந்தேன்.

உலக இதயங்களைக் கவரும் தமிழ் மொழி என் உடலுக்குள் தாய் மொழியாய் நிறைந்தியிருப்பதில் ஆனந்தமே!!!

ஜமீல்

# கை விடுதல்

இலைகளை அவிழ்த்துப் போட்டு
நிர்வாணமாக நிற்கும் போது
நிழலினை கை விடுகின்றன மரங்கள்

பால் குடி மறந்து சுயமாக
வேட்டையாடச் செல்லும் போது
குட்டிகளை கைவிடுகின்றன
காட்டு விலங்குகள்

சிறகு முளைத்த பின்னர்
தனியாக இரை தேடி பறக்கும் போது
தனது குஞ்சுகளை
கைவிடுகின்றன பறவைகள்

தாகமெடுத்த வெயில் பறவைகள்
நீரை அருந்தி முடிக்கையில்
குழந்தைப் பருவத்திலிருந்து
வளர்த்து வந்த மீன்களை
ஈரமற்று கைவிடுகின்றன ஏரிகள்

தொலைந்த பார்வை
மீண்டும் கிடைத்ததும்
இதுவரைக்கும் கண்களாகவிருந்த
வெள்ளைப் பிரம்பை
முதலில் கை விடுகிறான் குருடன்

கைவிடுவிதலென்பது
இயற்கையானதும்
தவிர்க்க முடியாததுமான ஒன்றுதான்

ஆனால் சிறு உறுத்தலுமற்று
திட்டமிட்டு கைவிடும் போதுதான்
அவர்களை கைவிடச் சொல்லி
கட்டாயப்படுத்துகிறது உடைந்த மனம்.

அலெக்ஸ்பரந்தாமன்

# காலம் வழங்கிய கனிகள்

தெருக்களிலிலும்
தேடுவாரற்றுக்கிடந்த
மனிதர்கள் நடுவிலிலும்
சொற்களை
எளிதாகச் சேகரித்துத் திரிந்த
வழிப்போக்கன் ஒருவனுக்கு
காலமரமொன்று
தன் கனிகளைப் பிரசவித்து
அவனைக் கௌரவித்துக் கொண்டது.


கனி நழுவிப் பாலில் விழுமென்ற
கனவில்
புனைவுலகவாசிகள் ; தம்முள்
புல்லரித்திருந்தவேளை...
எதிர்பாராதவிதமாக
கனிகள்
வழிப்போக்கனுக்குக் கிடைத்ததில்
அமர்க்களமாயின அந்திப்பொழுதுகளில்
வாதப்பிரதிவாதங்கள்
அவரவர் வீட்டு முற்றங்களில்.

முற்றுப்பெறாத
சொற்சமர்க்களத்தில்
கசக்கிப் பிழியப்பட்டன
காலமாற்றத்தின் கனிகள்.

கனிகள் கிடைத்த புளுகத்தில்
அதோ! போகிறான்
அந்த வழிப்போக்கன் தன்வழியில்
காலத்துடன்
கைகோர்த்து நடந்தபடி...

இன்னும் அவர்கள்
வாதப்பிரதிவாதங்களுக்குள்
வலம்வந்தபடி...
வசைச்சொற்களுடன்
வழிமாறிய பயணிகளாக...

நௌஷாத் கான்.லி



# தயிர் சாதம்

என் பேரு அமீர்,பேர்ல மட்டும் தான் வசதி குடி கொண்டு இருக்கு ஆனா நிஜத்துல வறுமை மட்டும் தான் என் நிழலா இருக்கு.சில கஷ்டங்கள் லட்சியத்துக்காக நானே தேடிக்கிட்டது தான்.

டே அமீர் நம்ம சமூகத்துல பத்தாவது முடிச்ச உடனே பாஸ்போர்ட் எடுத்திட்டு எல்லோரும் கப்பலுக்கு போயிடுவாங்க ஆனா நீ மட்டும் தான் டிகிரி முடிச்ச.

உன் படிப்புக்கு ஏத்த மாதிரி உன் வாப்பா ஏதாவது வேலை வாங்கி தருவாரு.

உனக்கு இந்த கூத்தாடி தொழிலெல்லாம் வேணாம்ப்பா,நல்லா படிச்சோம்மா,நல்ல வேலைக்கு போனோம்மா,வீடு வாசல் கட்டினோம்மா,படைச்ச ரப்பை அனு தினமும் தொழுதோம்மான்னு இருக்கணும்.

நமக்கெல்லாம் இந்த கூத்தாடி பொழப்பு வேணாம் அமீர்

அம்மா நான் ஒண்ணும் சினிமாவுல நடிக்க போகலை,டைரக்சன் மட்டும் தான் பண்ண போறேன்.என் திறமைக்கு நிச்சயமா சினிமாவுல வாய்ப்பு கிடைக்கும்.

*சினிமா நீ நினைக்குற மாதிரியெல்லாம் இல்லை அமீர்,அது ஒரு கனவு தொழிற்சாலை பல பேருக்கு சினிமா வெறும் கனவா மட்டும் தான் போய் இருக்கு சினிமா ஒரு எரிகல் மாதிரி அதுல நிறைய கனவை சுமக்குற மனிதப்பூச்சிகள் சிக்கி,சிதறி,சின்னாபிண்ணமாகி சாம்பலா தான் போய் இருக்கு*

எந்த ஒரு விஷயத்தையும் பாஸிட்டிவ்வா அப்ரோச் பண்ணனும்னு நீங்க தான் எனக்கு கத்து கொடுத்தீங்க,இப்ப நீங்களே நெகடிவ்வா சொல்லலாமா?

*என் புள்ள வாழ்க்கைல தோத்துட கூடாதுன்னு பயத்துல சொல்றேன்ப்பா.நீ நல்ல வேலைக்கு போகணும்,கை நிறைய சம்பாதிக்கணும்,கால காலத்துல கல்யாணம் பண்ணனும்,குழந்தை,குட்டிங்க பெத்துக்கிடணும்ன்னு பெத்தவங்க எங்களுக்கும் ஆசை இருக்காதே*

*சினிமாவுல போனா இதெல்லாம் நடக்குறது கேள்விக்குறி தான் அமீர்*

நான் ஜெயிப்பேன்னு எனக்கு நம்பிக்கை இருக்குமா

*எல்லாருமே நம்பிக்கையோட போய் தான் தோத்து போய் இருக்காங்கப்பா*

அம்மா எனக்காக எனக்கு பிடிச்ச சினிமாவுல போக விடும்மா,நம்ம சொந்தக்காரங்க ஆயிரம் குறை சொன்னாலும் நீயும்,வாப்பாவும் எனக்கு சப்போர்ட்டா இருந்தா போதும்.

எனக்கு நீங்க காசு,பணம் எதுவும் தர்ற வேணாம். என் முயற்சிக்கு உறுதுணையா இருந்தா போதும்.நான் சென்னைக்கு போறேன்ம்மா,சினிமாவிலும்,வாழ்க்கையிலும் ஜெயிச்சிட்டு தான் இந்த ஊருக்கு வருவேன்.

*இங்க பாரு அமீர்,உன் விருப்பத்துக்காக தான் இப்ப விடுறேன்,உன்னால முடியலைன்னா திரும்ப ஊருக்கே வந்திடு.அப்புறம் நாங்க சொல்றதை கேட்டிட்டு அதுப்படி வாழுனோம்னு அம்மா சல்மா அறிவுரை வழங்கி அனுப்பினாள்.*

ஊரை விட்டு வந்து இன்றோட ரெண்டு வருஷம் ஓடிப்போனது மிச்சம் ஆனா இந்த சினிமாவுல நான் நினைச்ச மாதிரி எதுவும் பண்ண முடியலை.ரெண்டு மூணு உப்புமா கம்பெனி திரைப்படத்தில் உதவி இயக்குனராக (இயக்குனர் சொல்லும் எல்லா எடுபிடி வேலைகள் செய்யும் நபராக )பணிபுரிந்தேன்..எப்படி இருக்க வேண்டியவன் இப்படி எல்லாம் கஷ்டப்படணுமான்னு தோணும்.வாழ்க்கையில ஜெயிக்கணும்னா கஷ்டப்பட கத்துக்கணும்னு சொல்வாங்க அதான் பிடிச்ச துறையில ஜெயிக்கிறதுக்காக கஷ்டப்பட கத்துக்கிட்டேன்.

எவனொருவன் தன்னை தானே தாழ்த்தி கொள்கிறானோ அவன் நிச்சயம் மேல வருவான்னு பைபிள்ல சொல்றாங்க.என் வாழ்க்கைல எவ்வளவு அவமானங்கள்,கஷ்டங்கள் வந்தாலும் அதை எனக்குள்ளயே புதைச்சுக்கிட்டேன்.இதுவரைக்கும் அம்மா,வாப்பாகிட்ட காசு வேணும்ன்னு கேட்டதில்லை ஏன்னா ஒரு வயசுக்கு அப்புறம் பெத்தவங்களுக்கு பசங்க தான் செய்யணும். என் அம்மாவுக்கு ரம்ஜானுக்கு ஒரு புடவையாவது எடுத்து தரணும்ன்னு ஆசை இருக்கு ஆனா வாங்குற சம்பளம் ரூம் வாடகை, சாப்பாடுக்கே சரியா இருக்கு.

ஷூட்டிங் நடந்தா சாப்பாடு இலவசமா கிடைச்சுடும் ஆனா முன்னே மாதிரி கொரோனாவுக்கு அப்புறம் ஷூட்டிங் எல்லாம் நடப்பதில்லை.வேலையும் முன்ன மாதிரி ரெகுலரா கிடைப்பதில்லை.கிடைக்கும் சொற்ப பணத்திலும் வாடகை,மிச்ச மீதம் மீறும் பணத்தில் குறைவான விலையில் விற்கும் அரிசியை வாங்கி பொங்கிக்குவேன்.குழம்பு வைத்தால் செலவு அதிகமாகும் என்பதால் பெரும்பாலும் அந்த தெருமுனையில் உள்ள பாட்டியிடம் அஞ்சு ரூபாய்க்கு தயிர் வாங்கி சோற்றில் போட்டு சாப்பிடுவேன்.ஒரு நாளைக்கு தயிர் சாதம் பரவாயில்லை தினம்,தினம் சாப்பிட்டால் வெறுத்து போகும்.அந்த வெறுப்பெல்லாம் என் வாழ்க்கையிலும் வந்தாலும் அதையெல்லாம் என்னால் செய்ய முடியாது. ஏனென்றால் பசி கொடுமையில் ஒரு கட்டத்தை தாண்டி சாப்பிட்டு விடுவேன்.

இந்த சென்னை எவ்வளவு மோசமா இருந்தாலும் கஷ்டப்படுற என்னை பார்த்து இரக்கப்படுவதற்கு நிறையபேர் இருந்தாங்க.தயிர் விக்கிற பாட்டி விக்கிற விலைவாசியில் அஞ்சு ரூபாய்க்கு அவ்வளவு தயிர் கொடுப்பது எல்லாம் பெரிய விஷயம் தான்.காசு இல்லாத சில நேரங்களில் ரெண்டு ரூபாய் அல்லது கொசுறு தயிர் எல்லாம் கொடுத்து அந்த பாட்டி உதவி இருக்கிறது..பஸ் ரூட் இல்லாத சில கம்பெனியில் சான்ஸ் தேடுவதற்க்காக ஆட்டோவில் தான் செல்ல வேண்டியிருக்கும்.மற்றவர்களுக்கு வாங்கும் ஆட்டோ சார்ஜை விட உதவி இயக்குனர்களுக்கு குறைவாகவே வாங்கினார் ஆட்டோ டிரைவரான ஜார்ஜ் அண்ணன்.

சென்னையில் பணக்காரனும் அனைத்து வசதியோடு பாரினில் வசிப்பது போலவும் வாழலாம்.என்னை போல தினம்,தினம் வாழ்க்கையை தேடி ஓடும் அன்றாட காய்ச்சியும் வாழலாம் என்பதை இந்த ரெண்டு வருஷம் பட்டதுக்கு அப்புறம் கிடைத்த அனுபவ படிப்பு கற்று கொடுத்தது.

விஜய்,அஜித்தை வைத்து படம் இயக்கிய வெற்றி இயக்குனர் அவரே நடித்து இயக்கிய ஒரு சில படங்கள் சரியாய் போகாததால் இயக்கும் வாய்ப்பு இன்றி தவித்தார்.அவரிடம் உதவி இயக்குனராக பணிபுரிந்த செபாஸ்டின் அண்ணாவிடம் ஏதாவது சான்ஸ் இருக்குமா என்று கேட்டேன்.டிகிரி முடித்து ஒரு மொட்டை மாடியில் அஞ்சு வருஷத்துக்கு மேலாக கஷ்டப்படும் அவர் நிலையை கண்டு என் நிலை எவ்வளவோ மேல் என்று தோன்றியது.

இங்கு வாய்ப்புக்காக அலைந்து கொண்டே இருக்க வேண்டும்.விடாமுயற்சியும்,நம்பிக்கையும்,திறமை இருந்தால் நிச்சயம் ஒரு நாள் ஜெயிக்க முடியும் என்ற எண்ணம் இன்னமும் இருந்தது.

அடுத்த மாதம் இயக்குனர் லோகேஷ் கனகராஜ் உடன் ஒரு நாள் பயிற்சி பட்டறை வகுப்பு அறிவிப்பு அறிவித்து இருந்தார்கள்.அந்த ஒரு நாள் பயிற்சி வகுப்பில் சேர ஒரு காரணம் மட்டுமே என்னிடம் இருந்தது.

எப்படியாவது அவரிடம் உதவி இயக்குனராக சேர்ந்து இயக்கம் சார்ந்த கலையை இன்னும் மேம்படுத்தி என்னுடைய கதையை திறம் பட எடுக்க ஆசைப்பட்டேன். கதை,திரைக்கதை,வசனம் சிறப்பாக எழுத தெரிந்தும் இயக்கம் சார்ந்த நுண்ணறிவு அவ்வளவாக இன்னும் எனக்கு வரவில்லை என்று தோன்றியது.இதுவரை நான் வேலை செய்த உப்புமா கம்பெனி இயக்குனர்களும் எடுபிடி வேலை வாங்கினார்களே தவிர பெரிதாக ஒன்றும் சொல்லித் தரவில்லை.

நாலாயிரம் ரூபாய் என்பது என்னை பொறுத்தவரை பெரிய பணம் தான் இருந்தாலும் இயக்குனர் லோகேஷை சந்தித்து விட வேண்டும் என்ற ஆசை எனக்குள் வேரூன்றி இருந்தது.சினிமா உதவி இயக்குனர் பணிகளுக்கிடையில் இரவில் ஒரு ஹோட்டலில் சர்வர் வேலை பார்த்து எப்படியோ நாலாயிரம் ரூபாய் சேர்த்து விட்டேன்.

அந்த பயிற்சி வகுப்புக்கு சேர அவர்கள் கொடுத்த வங்கி கணக்கில் பணத்தை செலுத்தி விட்டு பெயர் கொடுத்தேன்.அந்த பயிற்சி வகுப்பு ஒரு ஞாயிறு காலை ஒன்பது மணிக்கு என்றால் நான் காலை ஏழு மணிக்கே அந்த இடத்துக்கு சென்று விட்டேன்.கொடுமை என்னவென்றால் என்னை போல் இருபதுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் எனக்கு முன்னதாகவே காத்திருந்தனர். நேரம் ஆக,ஆக முன்னூத்தி எண்பதுக்கும் மேற்பட்ட ஆட்கள் லோகேஷை காண வந்திருந்தனர்.

லோகேஷ் கடந்து வந்த பாதை,படம் குறித்த தகவல்,அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எங்களை போன்றோருக்கு செல்ப் மோட்டிவேஷனாக இருந்தது.அந்த நிகழ்ச்சிக்காக அவர் ஒரு பைசா கூட வாங்கவில்லை என்பது வேறு கதை.எங்களை போன்ற சினிமா ஆர்வமுடைய நபர்களுக்கு ஊக்கம் அளிக்கவும்,ஒரு தன்னார்வ அமைப்புக்கு உதவி செய்யவும் தான் அந்த நிகழ்ச்சிக்கு வந்து இருந்தார்.

ஒரு போதும் உங்கள் முயற்சியை,பேஷனை கை விடாதீர்கள்.யார் என்ன சொன்னாலும் உங்களை நம்புங்கள்.உங்கள் விடாமுயற்சி நிச்சயம் வெற்றி தரும் என்றார்.உங்களிடம் ஒரு கோரிக்கை வைக்கிறேன் என்னிடம் உதவி இயக்குனராக சேர வேண்டும் என்று மட்டும் கோரிக்கை வைக்காதீர்கள் என்று எங்களிடமே ஒரு கோரிக்கை வைத்தது எங்களுக்கு அதிர்ச்சியாய் அமைந்தது.

ஒவ்வொருவருக்கும் புகைப்படம் எடுக்க ஒரு குறிப்பிட்ட நிமிடம் அவகாசம் தரப்பட்டது.எனக்கான நேரத்தில் உங்களிடம் உதவி இயக்குனராக சேர வேண்டும் என்ற ஒரு விண்ணப்பத்தோடும்,நிறைய ஏமாற்றத்தோடும் புகைப்படம் எடுத்து விட்டு வந்தேன். அவ்வளவு பெரிய உயரத்துக்கு சென்ற இயக்குனர் ரொம்ப எளிமையாக பேசுவதே பெரிய விஷயம் என்ற ஆறுதலோடு திரும்பி வந்தேன்.

இந்த கோடம்பாக்கம் என்னையும் ஒரு நாள் திரும்பி பார்க்கும் என்ற நம்பிக்கையோடு நடந்து சென்றேன் உச்சி வெயில் நெற்றியில் அடித்தது காலையில் சாப்பிடாமல் வந்ததால் கொஞ்சம் அடிவயிறு வலித்தது ஏதாவது தள்ளுவண்டி கடையில் சாப்பிடலாம் என்றால் பாக்கெட்டில் ஒரு இருபது ரூபாய் கூட இல்லை அருகே இருந்த கோயிலில் அன்னதானமாக அறுசுவை விருந்து நடந்து கொண்டிருந்தது.அதன் மணம் வேறு காற்றில் பரவி எனக்குள் பசியை அதிகரிக்க தொடங்கியது.இந்த சென்னைக்கு வந்த இத்தனை வருஷத்துல தினம்,தினம் தயிரில் தண்ணியை ஊத்தி,ஊத்தி சாப்பிட்டது வெறுப்பாய் போய் விட்டது. அடிக்கிற வெய்யிலிலும் தயிர் சாதம் தான்,கொட்டுற மழையிலும் தயிர் சாதம் தான்.

என்ன வாழ்க்கை இதுன்னு கொஞ்சம் கஷ்டமா இருக்கும் ஆனா நிச்சயம் ஒருநாள் ஜெயிப்போம் அப்ப நம்ம வாழ்க்கை நிச்சயமா மாறும் என்ற நம்பிக்கை இருந்துச்சு.

நீங்க கேட்கலாம் அமீர் கோயில்ல போய் சாப்பிடலாமான்னு??

இருக்கிறவனுக்கு தான் கடவுள்,மதம்,சாதி எல்லாம் சார் இல்லாதவனுக்கு மனிதமும்,பசியும் தான் பெரிசு

பசி வந்தா பத்தும் மட்டுமல்ல எல்லாமும் மாறி போகும்.இங்கே இல்லாதவன் எல்லாருமே ஒரே சாதி,ஒரே மதம் தான்.பசியில் கோயிலுக்குள் நுழைந்தேன்,தூணில் கொட்டியிருந்த திருநீறை நெற்றியில் பூசி கொண்டு அன்னதானம் நடைபெறும் இடத்துக்கு சென்றேன்.ரொம்ப வருசமாச்சு இன்றைக்கு வடை,பாயசத்தோட,சாம்பார்,ரசம் போட்டு அப்பளத்தை சாப்பாட்டுல நொறுக்கி போட்டு ஒரு பிடி,பிடிச்சிடணும்னு ரொம்ப ஆசையோட உட்கார்ந்தேன்.

அப்போது தம்பி சாம்பார்,ரசமெல்லாம் தீர்ந்து போச்சு.வெறும் சோறும்,மோரும் தான் இருக்கு

சாப்பிடுறீங்களா என்று கேட்டார்கள் பசி கொடுமையில் ‘‘ம் ‘‘தலையாட்டினேன்.



# பூசா

நான் ஆலடிச் சந்தியில் காரை நிறுத்திவிட்டு பிரதான வீதியிலிருந்து கெவர் போலப் பிரிந்து செல்லும் தார் போட்ட ஒழுங்கை வழியே நடந்தேன். மழை அரித்துப் போட்ட குழிகள் திருத்தப்படாமல் கிடந்தன.

பாசி பிடித்துக் கறுத்து கிடந்த மதில் வீடொன்றைத் தாண்டியபோது கம்பிப் படலைக்கு உள்ளிருந்து பெரிய மண்ணிற நாயொன்று திடீரென்று குரைத்து நெஞ்சை உதற வைத்தது.

மதில் வீடுகளைக் கடந்ததும் ஒழுங்கை மடங்கித் திரும்பி குருமணல் பாதையாக மாறி ஒடுங்கி சிறுத்துக் கொண்டே போய் இடப்புறம் திரும்பி சரிவில் இறங்கிக் கொண்டே சென்றது. மதில் வீடுகள் மெல்ல மறைய கொட்டிலில் வீடுகள் வர ஆரம்பித்தன.

முப்பது வருசத்துக்கு முன்னால் அனேகமாக பூவரசங் கதியால் வேலிகள் கிடுகு அல்லது பனை ஓலையால் வேய்ந்திருந்தன. அவையும் உக்கி விழுந்து கொட்டில் வீடுகள் பின்னால் தெரியும். இப்போது அவ்வேலிகளில் சில மதில்களாக மாறி பின்னால் சிறிய ஓட்டுக் கூரைகள் தெரிந்தன. பூசாவின் கொட்டில் வீட்டை கண்டு பிடிப்பது இலகுவாகத் இருக்கப் போவதில்லை என்று தெரிந்தது.

கம்பியில் சைக்கிள் ஓட்டும் சேர்க்கஸ் வித்தைக்காரன் போல மணலில் சைக்கிள் ஓடி வந்த வந்த ஒருவனை நிற்பாட்டி பூசாவின் வீடு எங்கே என்று கேட்டேன். அவன் தெரியாது என்று சொல்ல வாயெடுக்குமுன்

'வேல் மரக்காலை தவகுமார். இப்ப உயிரோடே இல்லை' என்று விளக்கிச் சொன்னேன்.

தென்னிலங்கையின் கடற்கரையோரமாக செல்லும் காலி வீதியை அண்மித்திருக்கும் பூசா இராணுவ முகாமின் பெயரைக் கேள்விப்படாத தமிழர்கள் அந்நாட்களில் மிகக் குறைவு. ஆனால் பூசா என்ற பட்டப் பெயர் தவக்குமாருக்கு இருந்தது அப்போது ஆலடியில் எவருக்கும் தெரியாது. ஏனென்றால் அந்தப் பட்டத்தை அவனுக்கு வழங்கியவர் தோம்பன் வளவில் கள்ளிறக்கும் கிளியர்.

கிளியரின் கள்ளுக்கு அப்போது டிமாண்ட் இருந்ததால் தோம்பன் வளவு என்ற பெயர் குடிகாரருக்கு தெரியும். தோம்பன் வளவு என்றால் அது ஒரு தனிக்காணி அல்ல. ஒரு முப்பது சீவல் தொழிலாளிகளின் குடும்பங்கள் வாழும் பகுதிக்கே அந்தப் பெயர் வழங்கி வந்தது.

அங்கே தொழில் செய்யும் பலர் இருந்தாலும் கிளியரின் கள்ளுக்காகவே ஐந்தாறு மைல்களுக்கப்பாலிருந்தெல்லாம் வருவார்கள். ஆலடியிலிருந்து பூசா மூன்று மைல் சைக்கில் ஓடி தோம்பன் வளவுக்கு வருவான்.

எனக்கு வீட்டிலிருந்து சைக்கிளில் போனால் ஐந்து நிமிடம்தான்.

ஒருமுறை ராணுவத்திடம் அகப்பட்டு பூசா வரை சென்று மீண்டதை கிளியரிடம் சொல்லியதிலிருந்து கள்ளுக் கொட்டிலில் பூசா என்பது அவன் ஆகு பெயராகி விட்டது.

எண்பத்தெட்டு அல்லது எண்பத்தொன்பதாம் வருடம் மார்கழியில் நல்ல மழை பெய்தது. மார்கழியில் மயிர் நனையாத் தூறல் என்பது பொய்த்தது. மழைக்குப் பிறகு பனைகளில் புது ஊற்று தொடங்கும் வரை கள்ளு விற்பனை மாரி காலத்தில் மந்தமாகவே இருந்தாலும் கிளியருக்கு குறைந்தது நாலைந்து குடி மகன்கள் நாள்தோறும் வந்து கொண்டுதானிருந்தனர். கிளியரின் பெறாமகன் பெரியதம்பி கால்முறிந்து இரண்டு மாதமாக மரமேறாமல் பாயில் கிடந்தான். அவனுடைய நாலு பனைகளையும் கிளியர்தான் சீவிக்கொண்டிருந்தார்.

அன்றைக்கு மழைக்குப் பின் எறித்த பளிச்சென்ற வெயில்.

சமையலறையில் அம்மா மழையில் நனைந்த ஈர விறகை ஊதி பற்ற வைப்பதில் சலித்துப் போய் கண்டபடி என்னைத் திட்டிக் கொண்டிருந்தாள். தாழ்வாரத்தில் அடுக்கி வைத்திருந்த காய்ந்த விறகுகள் முடிந்து போனதால் பின் வளவில் பட்டுப் போய் நின்ற பூவரசைத் தறித்துக் கொத்தி தாழ்வாரத்தில் அடுக்கும்படி நீண்ட நாட்களாக கேட்டுக் கொண்டிருந்தாள். நானும் கடத்திக் கொண்டிருந்தேன்.

அடுத்த பாட்டம் மழை பெய்யத் தொடங்குமுன் என்ன செய்யலாம் என்று யோசித்து விட்டு கிளியரிடம் போவோம் என்று சத்தம் போடாமல் சைக்கிளை எடுத்தேன். சைக்கிள் முன் சில்லு டயர் தேய்ந்து வாழைப்பழம் போலக் கிடந்தது

கிளியர் வீட்டு படலையை திறந்து சைக்கிளில் ஓடியே அவர் வளவின் எல்லையிலிருக்கும் கொட்டிலுக்குப் போவோம். தூரத்தில் கொட்டிலை மறைவாக வைத்திருக்குமளவுக்கு அவரது காணி பெரியது.

கிளியருக்கு இருபத்தைந்தாவது வயதில் மூத்தவள் பிறந்து பத்தாவது மாதத்தில் தனது பனைகளைப் பெரியதம்பியிடம் ஒப்படைத்து விட்டு சவுதிக்குப் போனார். நாலு வருடங்கள் அங்கு உழைத்த பிறகு ஊருக்கு வந்து பக்கத்து வளவு மாரிமுத்துவின் காணியை வாங்கி வேலியைப் பிரித்து ஒரே வளவாக்கினார். மாரிமுத்துவின் வளவில் நின்ற உயரிப் பனையும் வேறு எட்டுப் பத்து மரங்களும் அவரது கைக்கு வந்தன. அதற்குப் பிறகு அவர் ஊரை விட்டுப் போகவில்லை.

சைக்கிளை கொட்டிலுக்கு முன்னே சைட் ஸ்ராண்டில் விட்டேன். மழை ஈரத்தில் ஸ்டாண்ட் புதைந்து சைக்கிள் சரிந்து நின்றது. விழுந்து விடுமோ என்று கொஞ்ச நேரம் நின்று பார்த்து விட்டு விழாதென்று தெரிந்ததும் போனேன்.

அப்பச்சி மாமாவின் சி-நைண்ட்டி கிளியரின் மாட்டுக் கொட்டிலில் நின்றது. மாடுகள் மேயப் போயிருந்தன.

பதினொரு மணிக்கே கள்ளுக் கொட்டிலில்

ஆட்கள் நின்றனர். அடாது மழை பெய்தாலும் ஆட்கள் வராது விடுவதில்லை. தலைவர் பாட்டுச் சத்தம் கேட்டது. எதிரே அப்பச்சி மாமாவும், சகலரும் கைதட்டி தாளம் போட்டுக் கொண்டிருந்தனர். ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் போல அவர்கள் ஒருபோதும் தனித்து வருவதில்லை. இருவரும் அக்கா தங்கையை கட்டியிருந்தார்கள். அப்பச்சி மாமாவுக்குத்தான் அவர் சகலர். உண்மைப் பெயர் தெரியாததால் எங்கள் எல்லாருக்கும் அவர் சகலர் ஆகி விட்டார்.

கொட்டிலுக்கு உள்ளே பானா வடிவில் போட்டிருந்த பனங்குற்றிகளில் ஆட்கள் இருந்தனர். தலைவர் நிலத்தில் அமர்ந்திருந்தார். அவர் எப்போதும் நிலத்தில் அம்ர்ந்து பனங்குற்றியில் முதுகைச் சாய்த்துக்கொள்வார். அவர் பெயரும் எனக்குத் தெரியாது. ஆனால் அவர்தான் அங்கே பாட்டுக்குத் தலைவர்.

'இழுத்து பாடு தலைவா! என்ன இண்டைக்கு உன்ரை குரல் கமறுது.'

நார் கட்டிய கள்ளு முட்டியுடன் கொட்டிலுக்கு வந்தபடியே கிளியர் சொன்னர். அவர் எல்லா முட்டிகளையும் கொட்டிலுக்குள் வைத்திருப்பதில்லை. பொருள் முடிய முடிய வீட்டின் அரைச்சுவரின் பின்னால் மறைத்து வைத்திருக்கும் அடுத்த முட்டியை கொண்டு வருவார்.

செம்மண் போட்டு எழுப்பி சாணி மெழுகிய அரைச் சுவர் வைத்த கொட்டில் வீட்டுக்கும் கள்ளுக் கொட்டிலுக்கும் நடுவில் உயரிப்பனை நின்றது.

கிளியர் பனையேறுவதற்கு வசதியாக சாரனை மடித்து தடித்த பெல்ட் ஒன்றை இடுப்பில் கட்டியிருந்தார். ஏறுபெட்டியும். தள நாரும் அதில் கொழுவியபடியே இருந்தன. சுருண்ட தலை முடி. கட்டையான உடல் என்றாலும் கோயிலிலுள்ள சூரனின் மரச்சிலை போல மரம் ஏறி ஏறி இறுகி திரண்ட கட்டான உடம்பு, தள நார் உராய்ஞ்சிக் காய்த்த கால்கள். அடி வயிற்றிலும் பனை உரோஞ்சித் தடித்த கண்டிப் போன தோல்.

'பொருளைக் குடும் கிளியர். அப்பவெல்லோ தலைவருக்கு குரல் திறக்கும்.' என்றார் அப்பச்சி மாமா. மாமா வெள்ளைச் சேர்ட்டும் கோடு போட்ட கிப்ஸ் சாரமும் அணிந்திருந்தார்.

இதுதான் தருணமென தலைவர் சிரட்டையை நீட்டினார்.

'வாங்கி வாங்கி குடி! காசை மட்டும் தராதை என்ன!?' முகத்திலடித்தது போலச்சொன்னார் கிளியர்.

அது தலைவருக்கு கோபத்தை மூட்டவில்லை

தலைவர் கட்டிட வேலைக்கு மேசனுக்கு முட்டாளாகப் போய் வந்தார் ஆனால் மழை காலத்தில் கட்டிட வேலைகள் ஒன்றும் இராது. பஞ்சப்பாடு தான். என்றாலும் தவறாமல் கொட்டிலுக்கு காலையிலேயே வந்து விடுவார்.பாட்டுக்கு இடையில் யாராவது கள்ளு வாங்கிக் கொடுப்பார்கள். வேலையில்லாத நாட்களில் கோயில்களில் இரவுக் கூத்துக்கு பிற்பாட்டுக்குப் போனார். அதுவும் மழைக்காலம் வந்தால் இராது.

மதியானக் கள்ளுக்கு வரும் யாராவது மீன்பிடிகாரர் கொண்டு வரும் பாரைக் கருவாட்டை பதமாகச் சுட்டுப் பகிர்ந்து கொடுப்பது அவர்தான் என்பதால் கருவாட்டுத் தலைவர் என்ற பட்டப் பெயரும் இருந்தது.

கருவாடு சுட என்று கிளியரின் கொட்டிலுக்குப் பின்னால் பத்தி இறக்கியிருந்த மறைவிடத்தில் தலைவர் அடுப்புக்கல்லு வைத்திருந்தார்.

பாறி விழுந்த பனையின் வெட்டிப் போட்ட அடிக் குற்றித் துண்டம் ஒன்றில் கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த கள்ளுச் சிரட்டையை எடுக்க வெளியே போனேன். சிரட்டைகளில் செட்டி அட்டைகள் ஏறியிருந்ததைக் கிளியரிடம் சொன்னேன்.

'சீ சனியனே மழை வந்தால் இந்தச் சவங்களும் வந்திடும்.'

பாளைக்கத்தியின் பிடியால் கிளியர் சிரட்டைகளைத் தட்டி விழுத்தினார். செட்டிகள் மண்ணில் விழுந்து சுருண்டன. நடுவில் கறுப்பும் கரையில் மஞ்சலும் கொண்ட அட்டைகள் மீண்டும் நீண்டு ஊரத் தொடங்கும் வரை அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

கிளியர் போய் கட்டை வடலியின் கைக்கெட்டின ஒலையை வெட்டி பிளா கோலி வந்தார்.

பிளாவை வாங்கிகொண்டு பாத்திரம் ஏந்திய பிச்சைக்காரன் போல நான் பனங்குற்றியில் அமர்ந்தேன். கிளியர் முட்டியிலிருந்த கள்ளை நாரை பிடித்து பிளாவில் பக்குவமாக ஊற்ற பச்சை ஓலையின் மணமும் கள்ளின் மணமும் சேர்ந்து மூக்கை நிறைத்தது. ஒரு மிடறு குடித்தேன் அது வயிறு வரை குளிர்ந்து செல்வதை உணர்ந்தேன்.

பூசா அப்போதுதான் வந்து சைக்கிளை நிறுத்தினான். அடை மழை வரப்போகுது என்று சொல்லிக் கொண்டே கொட்டிலுக்குள் வந்தவனின் சுருட்டைத் தலை மயிரில் மரத்துாள் ஒட்டியிருந்தது. பூசா சொந்தமாக மரக்காலை ஒன்றை அப்போதுதான் திறந்திருந்தான்.

அறுத்த மரங்களை மொத்த விலைக்கு வாங்கி கதவு நிலை யன்னல்கள் அடிக்கும் ஆசாரித் தொழில். ஆலடியில் இன்னொரு மரக்காலை முதலே இருந்தது. பூசா புதிதாக வேல் மரக்காலை திறந்ததில் ஏற்பட்ட தொழில் போட்டியிலேயே பூசாவை ராணுவத்துவத்திடம்

தலையாட்டி மூலம் மாட்டி விட்டதாக ஆலடியில் ஒரு கதை உலாவியது.

'என்ன பூசா மழைக்குப் பூரான் வெளிக்கிட்ட கணக்கு இண்டைக்கு வந்திட்டாய்.' என்றார் கிளியர் குத்தலாக.

நீண்ட நாட்களாக பூசா கிளியரிடம் வரவில்லை.

'புது வீட்டுக்கு அச்சாரம் வேண்டின கையோடை சாராயப் போத்திலோடை வாறன் எண்டாய். பிறகு இந்தப் பக்கம் காணேல்லை. '

என்னதான் திறமான கள்ளு வித்தாலும் கிளியர் தான் சீவின கள்ளைக் குடிப்பதில்லை. அவர் குடிப்பதெல்லாம் சாராயம்தான். அதுவும் இப்படி ஓசியில் யாராவது கொண்டு வந்தால் மட்டுமே.

'ஒண்டும் சரி வரேல்லை கிளியர்' என்றான் பூசா. உண்மையில் வீட்டுக்கு அச்சாரம் கொடுத்து விட்டார்கள்.

கடதாசிப் பையில் சுற்றி இடுப்புக்குள் மறைத்துக் கொண்டு வந்த சாராய போத்தலைக் கிளியருக்கு சொல்லவேண்டாமென்று கண்ணை காட்டி அப்பச்சி மாமாவிடம் இரகசியமாகக் கொடுத்தான் பூசா. அரைச்சுவரின் பின்னால் குனிந்து முட்டிகளை மழைத்தண்ணீரில் கழுவிக் கொண்டிருந்த கிளியருக்கு இது தெரியவில்லை.

வெளியே வந்த படி 'பொருள் முடிஞ்சுது. வீட்டை போ பூசா ' கிளியர் பூசாவிடம் முறைப்பாகச் சொன்னார்.

'பொருளாவது! முடியிறதாவது!' பூசா சிரித்தபடி சேட்டுப் பொக்கற்றில் கையை விட்டு பீடியை எடுத்தான்.

'இஞ்சொண்டா' தலைவர் பீடியைக் கேட்டார்.

'இஞ்ச பேந்தும் பார்'

' கிளாசைக் கொண்டு வாரும் கிளியர் இண்டைக்கு பூசாவின் உபயம். ' என்றவாறே ஒளித்து வைத்திருந்த கடதாசிப் பையிலிருந்து சாராயப் போத்தலை எடுத்து உயர்த்திப் பிடித்தார் அப்பச்சி மாமா.

'எடேய் பூசா எனக்குத் திறுக்கீஸ் விட்டுட்டாய் என்ன'

கிளியர் திட்டிக் கொண்டே ஆனால் உள்ளுக்குள் புழுகத்துடன் கிளாசை எடுக்கப் போனார்.

அரைவாசிக் கிளாஸ் மட்டத்துக்கு எல்லோருக்கும் சாராயம் ஊற்றப்பட்டது. கள்ளில் தொடங்கி சாராயத்தில் முடித்தவர்கள் பறக்கத்தொடங்கினர். மற்றவர்கள் மிதக்கத் தலைப்பட்டனர்.

மழை சடசடத்தது. தலைவர் பாடத்தொடங்கினார். கண்டசாலா, ஜெயராமன் காலத்துப் பாட்டுக்கள். சகலரும், அப்பச்சி மாமாவும் பீடியை பற்ற வைத்து கொண்டனர். மழை தூறி பின் பெருத்துப் பெய்தது. கொட்டிலுக்குள் மழை ஒழுக கிளியர் எதோ எடுத்து வைக்க என்று சொல்லிக் கொண்டே வீட்டுக்கு ஓடினார்.

தலைவர் கூத்துக்கு பாட்டுக்குத் தாவினார்.

தத் தாங்கிட தருகிட திமிதக தா தாகிட தாகிடதோம் தரி

ராஜா ராஜ ராஜர் போற்றும் ராஜ மகா ராஜன் வந்தான்

ராஜ தீரன் கொலுவில் வந்தானே

எனக்கு மழையைக் கண்டால் நனைந்தே ஆக வேண்டும். அப்போது அப்பிடி ஒரு விசர்க்குணம். பிளேன் போல கைகளை விரித்துக் கொண்டே மழைச் சாரல்களூடே ஓடினேன். பின்னால் பூசாவும் வந்தான். அவன் சேர்ட்டைக் கொட்டிலில் கொழுவி விட்டே வந்தான். கிளியரின் பின் வேலியில் ஒரு ஆள் குனிந்து போகக்கூடிய பொட்டுக்குள்ளால் வேலிக்குப் பின்னாலிருந்த வயல் கிணத்துக்குப் போனோம். வரம்பு மட்டுமே தெரிய வயல்களெல்லாம் வெள்ளக் காடாயிருந்தது.

பிறகுதான் மாமா சகலருடன் வந்தார். தலைவரும் மற்றவர்களும் கொட்டிலை விட்டு வரவில்லை. அப்பச்சி மாமா சாரத்தை உரிந்து விட்டு உள் களிசானுடன் வயல் வெள்ளத்துக்குள் நின்று வீசாணம் போட்டார்

தாம் த தகிட தகிடதோம் தீம் த திகிட திகிட தெய்

அன்று அவருக்கு நல்ல ஏத்தம்

எங்களை முந்திக் கொண்டு அவரே கிணத்துக்குள் குதித்தார்.

மாரி காலக் கிணறு முதல் படிக்கல்லை மூடி முட்டிப் போயிருந்தது.

பூசா காற்சட்டையைக் கழற்ற மினக்கட்டான். படிக்கல்லை ஒருவாறு தேடிப் பிடித்து அதில் காலை வைத்து கிணற்றுக் கட்டைப் பிடித்துக் கவனமாக இறங்கினான். பிறகு முகத்தை ஓணான் போல வைத்துக் கொண்டு ஒரு சுற்று நீந்தியபின் மேலே ஏறினான்.

'சிவா குதியடா குதியடா' என்று உள்ளிருந்து அப்பச்சி மாமா என்னைப் பார்த்துக் கத்தினார். நான் படிக்கக்கட்டில் நின்று காற்சட்டையை கழற்றிக் கொண்டிருக்கையில் சகலர் பின் பக்கமாக வந்து கிணற்றுக்குள் என்னைத் தள்ளி விட்டார். கீழேயிருந்து மாமா சைகை காட்டியிருக்க வேண்டும்.

மழை கொட்டிக் கொண்டிருந்தபோதும் கிணற்றுத் தண்ணீர் இதமான சூடாக இருந்தது.

அது முதலில் பாசி நிறத்தில் இருந்தது பிறகு கொஞ்சம் கொஞ்சமாக கலங்கி வெள்ளைப் பச்சையாக மாறியது. எல்லாருக்கும் குதிக்கும் ஆசை வந்து விட்டது.

வேட்டியை கொடுக்குக் கட்டியிருந்த சகலர் குத்துக் கரணம் அடித்தார். பிறகு மேலேறி வந்த அப்பச்சி மாமா தேரை குந்தியிருப்பது போல கிணற்றுக் கட்டில் இருந்து கொண்டு கையைக் கூப்பியபடி தண்ணீரைத் துளைப்பது போலச் சத்தமில்லாமல் நைசாக விழுந்தார். அவர் கீழே போய் மேலே வந்ததும் பூசா கைகளைக் கட்டிக்கொண்டு பனங்குற்றி போல கால் குத்தென நிமிர்ந்தபடி தண்ணீருக்குள் விழுந்தான். அது விசித்திரமான குதிப்பாக தெரிந்தது.

எனது முறைக்காக வந்து படிக்கட்டில் நின்றேன். குதித்தவுடன் நிலம் தெரியாத ஆழத்துக்கு கீழே போகும் பயத்தால் எனக்கு எப்போதும் குதிப்பது திகிலாகவே இருக்கும்.

ஆனால் யாரும் தள்ளிவிட முதல் குதித்து விட வேண்டும்.

தண்ணீருக்குள் மீன் கொத்துவது போல மழைத்துளிகள் உடம்பில் குத்தியபடி விழுந்து கொண்டிருந்தன. பூசா மேலே வரும் வரை பார்த்திருந்தேன்.

அரை நிமிடம் கழிந்தும் பூசா மேலே வரவில்லை. குமிழிகள் மேலெழுந்து வந்தன. பிறகு பூசாவின் கை மேலே வந்தது. விபரீதம் நிகழ்ந்து விட்டதா அல்லது விளையாட்டுக்கு பூசா நாடகமாடுகிறானா என்று முதலில் தெரியவில்லை.

கிணற்றுக்குள்ளிருந்து அப்பச்சி மாமா அவன்ரை கையை பிடி பிடி என்று என்னிடம் கத்தினார்.

அவன் மணிக்கட்டை எட்டிப் பிடித்தேன். என் பிடியிலிருந்து பூசாவின் கை வழுக்கிக் கொண்டே கீழே போனது. என்னால் முடியவில்லை

எல்லாமே மெதுவாக நிகழ்வது போல இருந்தது. மூளை எதையும் விரைவாக செய்யச் சொல்லாமல் சற்றுத் தாமதமாகவே ஆணை பிறப்பிப்பது போலிருந்தது. அப்பச்சி மாமாவும் ஏதோ சொல்கிறார். தெளிவில்லாமல் கேட்கிறது.

ஆனால் பூசாவுக்கு ஏதோ நடந்து விட்டது தெரிந்தது. அப்பச்சி மாமா தண்ணீருக்குள்ளே சுழியோடினார். நானும், சகலரும் கிளியரிடம் ஓடினோம்.

அது நீண்ட தூர ஓட்டம் போலிருந்தது ஆனால் அது ஒரு முப்பதடி தூரமும் இருக்காது. அவருக்கு சொல்லி அவர் வடக் கயிற்றைக் கொண்டு வருவதற்குள் பூசா மூச்சடங்கி கீழே போய் விட்டான்.

கயிற்றை விட்டு கிளியரும் அப்பச்சி மாமாவும் அவனைத் தூக்க நான் போய் அப்பச்சி மாமாவின் மோட்டர் சைக்கிளை ஒழுங்கை வழியாக வயற்கரைக்குக் கொண்டு வந்தேன். கொட்டிலில் இருந்தவர்களுக்கு ஒன்றுமே தெரியாத போதையிலும் மழையின் இரைச்சலிலும் இவையெல்லாம் ஐந்து நிமிடங்களில் நடந்தேறி விட்டன.

தலைவரின் பாடல் தொடர்ந்து கொண்டிருந்தது.

வீர வீர வீரர் எல்லாம்

வந்தடி பணியும் வீரன்

வீர தீரன் கொலுவில் வந்தானே

தா தாங்கிட தரிக்கிட திமிதக தா தாங்கிட தாகிடதோம் தரி

நான் மோட்டர் சைக்கிளை ஓட பின்னால் அப்பச்சி மாமா பூசாவை நடுவில் இருத்தி வைத்துக் கொண்டு வைத்துக் கொண்டு வாகை மரச் சந்தியிலிருந்த சுந்தரம் பிள்ளையின் மருந்துச்சாலைக்கு கொண்டு போனோம். உடல் சரிந்து விழுந்து கொண்டிருந்தால் பூசாவை அப்பச்சி மாமாவின் மடியில் கிடத்தி காலைத் தொங்கப் போட்டபடி கொண்டு போவதை விட வேறு வழியில்லை.

நல்ல வேளை சுந்தரம் பிள்ளையிடம் நோயாளிகள் எவரும் இல்லை.

பூசாவைத் தூக்கி கட்டிலில் கிடத்தும் போதே சுந்தரம் பிள்ளைக்கு தெரிந்து விட்டது. கடமைக்கு கையை பிடித்துப் பார்த்து விட்டு கையை விரித்தார்.

மழை நின்று ரோட்டுக் கரையெங்கும் வெள்ளம் பாய்ந்து கொண்டிருந்தது. சந்தியில் நின்ற கார்க்கார பெடியன் இந்திரனை ஓடிப்போய் கூட்டி வந்து பூசாவை ஆலடிக்கு கொண்டு போக வேண்டும் என்று சொன்னேன்.

முதலில் ஏற்றத் தயங்கி மாட்டன் அண்ணை என்றான்.

பின்னால் வந்த அப்பச்சி மாமா கையை ஓங்கியதைக் கண்டதும் பயந்து விட்டான். சுற்று முற்றும் பார்த்து விட்டு ஏத்துங்கள் என்றான். சவத்தை ஏற்றினால் பிறகு சவாரிக்கு ஆட்கள் வராது போய் விடுவார்களோ என்ற பயம்.

ஆலடியை நெருங்க நெருங்க எனக்கு இதயம்

பலமாக அறைந்து அறைந்து அடித்தது. ஒரு வேளை நான் முதலில் மழைக்குள் ஓடியிருக்கா விட்டால் இதெல்லாம் நடந்திருக்காதோ? வழியெங்கும் என்னை நானே கேள்வி கேட்டு வதைத்துக் கொண்டேன்.

பூசாவின் கொட்டிலுக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு அப்பச்சி மாமா இறங்கி மரப் படலையைத் திறந்து உள்ளே விசயத்தைச் சொல்லப் போனார். கூனிய அவர் முதுகைப் பார்க்க எனக்கு கண் கலங்கியது.

நான் நெஞ்சு நடுங்க முன் சீற்றிலெயே இருந்தேன். ஒரு பெருங் கூக்குரல் கேட்டது. நொடிப்பொழுதில் அயலிலுள்ளோர் கூடிவிட்டனர். அவர்களில் ஒருவன் கோபத்துடன் ஓடி வந்து அப்பச்சி மாமாவை கீழே தள்ளி காலால் உதைத்தான்.

தூக்கி நிறுத்தி வைத்து மாமாவுக்கு சரமாரியாக அடிகள் முகத்திலும் விழுந்தன.

இன்னொருவன் காரை நோக்கி வந்து என்னை வெளியே இழுத்தெடுத்து முகத்தில் ஓங்கி குத்தினான்.

கார்க்கார இந்திரன் எங்கோ நழுவி ஓடி விட்டான். கீழே விழுந்தபடி என் பல்லைத் தொட்டுப் பார்த்தேன். கை முழுவதும் இரத்தம்.

பாய் படுக்கை என்று வருத்தமேதுமில்லாமல் சுக தேகியாகவிருந்த பூசாவை பிணமாகக் கொண்டுபோனதை அவர்கள் நம்பத் தயாரில்லை. நாங்கள்தான் ஏதோ செய்துவிட்டோம் என்று எண்ணியிருப்பார்கள்.

இதற்கிடையில் அப்பச்சி மாமா எப்படியொ விஷயத்தை விளங்கப்படுத்தி விட்டார் போலும். அடி உதை நின்றது. இருவர் பூசாவை காரிலிருந்து தூக்கிக் கொண்டு போய் வெளித் திண்ணையில் கிடத்தினார்கள். அழுகுரல் அதிகரித்தது.

மைம்மல் பொழுதில் சைக்கிளை எடுப்பதற்காக கிளியரின் கொட்டிலுக்குப் போனேன்.

இருள் கவிந்து வண்டுகளின் இரைச்சல் கேட்கத் தொடங்கி விட்டது.

கொட்டிலில் எவருமில்லை. கிளியர் பனை ஏறப் போய் விட்டார். தலையே போனாலும் அதை தவற விடமாட்டார். பூசா கொண்டு வந்த சாராயப் போத்தல் அவனது செருப்புக்குப் பக்கத்தில் வெறுமையாக நிலத்தில் கிடந்தது.

கொழுவியிருந்த பூசாவின் சேட்டை எடுத்தேன் பொக்கட்டுக்குள் தொய்வுக்கு அடிக்கும் வென்ரோலின் பம் கிடந்தது. அவ்வளவு விரைவாக பூசா மூச்சடங்கிப் போனதுக்கு தொய்வு காரணமாகி இருக்கக் கூடும் என்று எனக்கு அப்போதும் தெரிந்திருக்கவில்லை.

அப்பச்சி மாமா பின்னால் மோட்டர் சைக்கிளில் வந்தார். கன்னம் வீங்கியிருந்தது.

‘ சேர்ட்டைத் தாடா சைக்கிளையும் கொண்டு போயி குடுத்திட்டு வாறன். வேறை என்ன விட்டிட்டுப் போனவன்?’

செருப்பையும், சேர்ட்டுடன் கொடுத்தேன்

‘அடிக்க மாட்டாங்களே மாமா?’

‘ இல்லைத் தா!. இந்த அறுவான் தொய்வுக்காரன் மாரிக் கிணத்துக்கை ஏன்ரா இறங்கினவன்?’

நான் அந்த வேலிப் பொட்டைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அதன் ஊடே வயல் வெள்ளம் மங்கிய வெளிச்சத்தில் பால் விட்ட தேநீரின் நிறத்தில் தெரிந்தது.

முன் பல்லு விண்ணென்று வலித்தது.

அன்றிரவு ஏழு மணிக்கே வீட்டுக்கு நான் வந்ததை அம்மா புதினமாகப் பார்த்தாள். சொக்கலிங்கம் கடையில் சாப்பிட்டு விட்டேன் என்று பொய் சொல்லி விட்டுப் போய்ப் படுத்து விட்டேன்.

காலை சூரிய வெளிச்சம் வரு முன்னே தோம்பன் வளவில் குடிக்கப் போய் ஒருவன் கிணற்றில் விழுந்து செத்து போனான் என்று ஊரில் இந்த விஷயம் பரவிவிட்டது. கொஞ்ச நாட்கள் வெளியில் தலை காட்ட முடியவில்லை. வீட்டிலும் அம்மா என்னோடு கோபத்தில் கதைக்காது விட்டாள்.

அம்மா ஆரிடமோவெல்லாம் கெஞ்சி மண்டாடி காசைப் புரட்டி கொழும்பு மாமாவின் உதவியுடன் இந்தியாவில் படிப்பதற்கு ஒழுங்கு செய்தாள்.

அடுத்த வருட நடுப்பகுதியில் நான் பொறியியல் படிப்புக்காக பெங்களூருக்குப் போனேன். படிப்பை முடித்து தொழில் தேடி சிங்கப்பூர் போய் பிறகு

மலேசியாவில் நிரந்தரமாகக் குடியேறினேன்.

அங்குள்ள பாம் ஒயில் தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த காலத்திலேயே திருமணமும் அங்கேயே நிகழ்ந்தது. பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பிப் படிப்பித்தேன் அவர்கள் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டனர்.

இந்த முப்பது வருடங்களில் பாம் ஒயில் சம்பந்தமான மகாநாடு ஒன்றுக்காக கொழும்புக்கு ஒரு முறை வந்து போனததைத் தவிர ஊருக்கு நான் வரவேயில்லை.

கொட்டில் வீடுகளின் நடுவே தெரிந்த ஒரு சிறிய

கல் வீடுதான் பூசாவின் வீடு. உள்ளே நாயொன்று குரைத்தபடி வரவேற்றது. நாயின் குரல் கேட்டு உள்ளிருந்து ஒரு நடுத்தர வயதுப் பெண் வெளியே வந்தாள். அது பூசாவின் மனைவிதான் என்று அறிந்து கொண்டேன்.

நான் பூசாவின் நண்பன் என்று என்னை அறிமுகப்படுத்தினேன். கொஞ்ச நேர இடைவெளியின் பின் அன்று கிளியரின் வீட்டிலிருந்து பூசாவைக் கொண்டு வந்தவர்களில் நானும் ஒருவன் என்றேன்.

பூசாவின் மனைவி தலையை குனிந்த படி மௌனமாக நின்றாள். அவள் தலையை நிமிர்ந்த போதும் முகத்தில் எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை. முப்பது வருடம் ஒரு நீண்ட காலம் என்பதை அவள் முகம் உணர்த்தியதாகப் பட்டது.

பேச்சை மாற்றுவதற்காக வீட்டை கண்டு பிடிக்க முடியவில்லை என்றேன்.

அந்த பழைய கொட்டில் வீட்டிலிருந்து இங்கு வந்து பதினைந்து வருசமாகிவிட்டது என்றாள். மகன் பிரான்சுக்கு போனதில் இந்தக் கல் வீடு கட்ட முடிந்தது என்று சொல்லிக் கொண்டே “வேணீ” என்று உள்ளே பார்த்து மருமகளைக். கூப்பிட்டாள்.

குங்குமப் பொட்டு வைத்த இளம் பெண்ணொருத்தி இடுப்பில் பிள்ளையைத் தூக்கிக் கொண்டு உள்ளிருந்து வந்து பிள்ளையை கீழே இறக்கி விட்டாள்.

அந்த மூன்று வயதுப் பெண் குழந்தை என்னிடம் நேரே ஓடி வந்தது. நான் பெயரைக் கேட்டேன். அது உடனே என் பல்லை பார்த்து விட்டு

“என்ன மாமா பவுண் பல்லு” என்றது.

அன்று அடித்து உடைந்த பல்லு பிறகு பழுப்பு நிறமாகி ஆட்டங்கண்டு கொதி வலி காண நான் அதை பிடுங்க வேண்டி வந்தது. கோறைப் பல்லின் இடத்தில் பதிலாக பொன் முலாம் பூசிய பல்லு கட்டியிருந்தேன்.

குழந்தை என்னை விடாமல்

“ஏன் மாமா பவுண் பல்லு கட்டினீங்கள்?” என்றது.

‘பல் விழுந்து விட்டது’ என்றேன்.


‘எனக்கும் இரண்டு பல்லு விழுந்து விட்டது’ என்றபடி வாயை ஆவென்று காட்டியது. பிறகு என் பவுண் பல்லை பார்த்து தலையைச் சரித்து ஓட்டைப் பல் தெரியச் சிரித்தது.

நெல்லை க.சோமசுந்தரி.

# ஒற்றை இலை...!

*நினைவுகளின்
சுழற்சியில்
நித்தமும் பயணிக்கிறது
உதிர்ந்த பூக்களின் கனவுகள்!
காலக் குறிப்புகளின்
பக்கத்தில்
எந்த 'மை' கொண்டும்
எழுத முடியாத
வரைவுகள் அவை!
உறைந்த பனிப்பாளங்களின்
உடைதலில் மெல்லிய விசும்பலொளியாய்
எவருக்கும்
கேட்காது நீரில்
கரைகிறது!
எங்கோ கேட்கும்
சங்கின் ஒலியில்
சமுத்திரத்தின்
சுவாசம் அலை அலையாய்
காதில் வந்து விழுகிறது
அடர் மௌனத்திற்குள்
எந்த சொற்களை தேடுவாய்!
அன்பின் அத்தனை ஈரத்திலும்
உலர்ந்து நிற்பது புரிப்படாத
ஒற்றை உயிர்த்துளி தானே!
மிச்சமிருக்கும் பொழுதுகளிலும்*

*மீண்டும் நழுவட்டும்
சிறு இறகாய்
பறத்தலின் கனம் அறியாது
சருகான...
பெரு மரத்தின் ஒற்றை இலை!!*



**மு.முபாரக்**

உடல்நலமில்லாத அம்மாவை ஊரில்
போய் பார்த்து வர
அனுமதி கேட்டால்,
அடிக்கடி விடுமுறை கேட்பதாக கோபம்
கொள்கிறார் மேலதிகாரி,
போராடி வாங்கிய விடுமுறையில்
தொடங்கிய
எனது பயணம்
வாகனத்தின் பழுதால்
ஒவ்வொரு இடமாய்
நின்று நின்று தொடர்கிறது..
பலத்த மழை
வரும் வழியெங்கும்
அச்சமூட்டிக் கொண்டே இருக்கிறது...
பசிக்கு உணவு தேடினால்
அனைத்து உணவு விடுதிகளிலும்
எதுவும் இல்லை என்ற பதிலே
வருகிறது...
ஒரு முறை அம்மாவை பார்க்க
வருவதற்கே
எனக்கு இத்தனை துன்பமென்றால்,
பல வருடங்களாய் எனக்காய்
சிரித்து எனக்காய் வாழும்
அம்மாவின் வாழ்க்கை எத்தனை
கடினமாய் இருந்திருக்குமென என
எண்ணிக் கொண்டிருக்கையில்
வீட்டை நெருங்கியிருந்தது...என் வாகனம்!

**சொ.கோட்டீஸ்வரன், சென்னை.**

# சில்லிட்டல்

இறப்பிற்குப் பின்னும்
கல்லறை வாசலில்
உயிர்ப்பித்த உடல்கள் பல
பறையறைந்து
சங்குதுதல் எல்லாம்
படுத்தவனை எழுப்பிட முடியாதா என்ற கடைசி
நற்பசையில்லென்றால்
உயிற்பிக்க சுவாசம் வேண்டுமல்லவா,
சிரித்தபடியே
யிருக்காரு பாருங்க என்று
கண்ணாடி வழிப்பார்த்து பெருமைப் பட.
நேற்றையிலிருந்து இறந்தவனை குளிர்ப்
பெட்டியில் அடைத்தப்பின் எங்கே எழுவது உடல்
செத்தாலும் பிழைக்க முடியாது சில்லிட்டே கிட.

ச.ஆ.பவித்ரா

# எனக்குப் பயமாக இருக்கிறது

சுவர்களின் செதில்களை
ஏக்கமுடன் எட்டிப்பார்த்து ஊளையிடுகின்றன
ஓநாய்கள்
இரும்புக்காலூன்றிய கட்டில்
தோண்டி வைத்த பள்ளத்து நீரை
வடிய வைக்கின்றது
படுக்கையறை வௌவாலொன்று
கறைபடிந்த சமையலறை சுவரில்
பிடுங்கியெறியப்பட்ட ஆணியின் சுவடு
குளவிக்கூட்டைக் கட்டி வளர்த்துள்ளது
துருவேறிய அலுமினியத் தட்டில்
காய்ந்த மீன் எலும்புக்கு
இறுதி ஊர்வலம் நடத்திக்கொண்டிருந்தன
எறும்புகள்
பட்டுப்போன வேப்பமரத்திலிருந்து
அப்போது குதித்த
கருப்புப் பூனை
பால் குடிக்க மறந்து
சரியாக நான்காண்டு
வெறுமையை அப்பி
ஓலமிட்டுக்கொண்டிருக்கும்
பூர்வீக வீட்டின் திண்ணையில்
அடிக்கடி சிரித்துக் கொண்டிருந்த
இறந்துபோன பொக்கை வாய் தாத்தா
இப்போது தடியோடு பாய்கிறார்
எனக்குப் பயமாக இருக்கிறது
அட்டையெனச் சுருண்டு படுத்துக்கொண்டுள்ளேன்
இந்நேரம் அப்பா இங்கிருந்தால்
தாத்தா வெற்றிலை குதப்பிக்
கொண்டிருப்பாரல்லவா




இரா.வெங்கடேஸ் குமார்.

# காட்டாறு

மேலும் கீழுமாய் அழகாய் மெல்லியதோர் நடை
காற்றின் போக்கில் வளைந்து நெழியும் கலை
ஆ முதல் மா வரை தாகம் தணிக்கும் உன் பிரிவு ஓடை
பாரினில் இருக்கும் இடை எல்லாம் நிரம்பி நிற்கும் கொடை
இத்துனை சிறப்பினில் இருந்த அமைதி நிலை
சட்டென கோபம் கொண்டு எழுப்பும் பேரலை
சாந்தம் எனும் மங்கை வீரெழும் கோப அலை போலே
நிலையான உன் நடையில் சீற்றங்கள் ஏன் நதியே
கடல் வரை சென்று அமைதி தேடும் முன்னே
காட்டாற்று வெள்ளம் தந்து கரையை உடைப்பது ஏனோ?.

# பாரியன்பன் நாகராஜன் கவிதைகள்



என்னைக் கண்டதும்
புதிதாய்ப் பூத்தப் பூவைப்போல்
வெட்கப்படுகிறாய்.
உன் மெல்லிய ஸ்பரிசங்களால்
காற்றின் கைகோர்த்தபடி
பூவின் வாசமாய்
என்னைத் தழுவிப் போகிறாய்.
கண்ணாடித் தொட்டியில்
அடைந்து கிடக்கும் நீரில்
கடலைக் காணும் மீன்களாய்
உன்னைக் கண்டுணர்ந்து
மெய்ச்சிலிர்க்கிறேன்
நான்.

◎

தற்போது கைவசமிருக்கும்
சுகங்களனைத்தும் ஒருநாள்
கண்ணீரைப் பரிசாகத் தரும்.

◎

குடித்தது ஆழி
போதையில் தள்ளாடுகிறது
தோணி.

◎

முத்தம் தருவதாய்ச் சொல்லி
என் உயிர்வழி அமுதத்தை
உறிஞ்சு குடிக்கிறாய்.

◎

அந்திவரை பயமில்லை
நிலவு வரும் வரை பயந்தபடி
இருட்டில் தாய்ப்பறவையும் குஞ்சுகளும்.

◎

புறக்காயங்களுக்கு
இருக்கும் களிம்பு போதும்.
அகக்காயங்களுக்குத்தான்
அவளின் கடைக்கண் பார்வை
வேண்டும்.

◎

காதலிக்கிறேன்
பார்வையில் வசப்பட்டது
பகலிலும் நட்சத்திரங்கள்.

◎

குறுஞ்செய்தியில் வந்த
என் மரணச்செய்தியை
வாசிக்காமல் அழித்து விட்டேன்.

◎

எடையைக் குறைக்கச் சொன்ன
ஆண்புறாவின் கோரிக்கைக்கு
இறகுகளைப் பிடுங்கிக் களைகிறது
காதல் விழுந்த பெண்புறா…!

◎

ஒரு மூச்சில் சொல்லி
முடிக்க வேண்டிய காதலை எதற்காக
நீட்டிக்கின்றாயோ தெரியவில்லை.


◎

அவள் மழையில்
நனைகிறாள்
நான் உருகிக் கரைகிறேன்.

◎

நரை கூடி குருதி சுண்டி
தேகம் நலிந்து
நரம்புகள் தளர்ந்த தாத்தா
கைத்தடி துணையோடு
காட்டுக்குப் போனவர்
பை நிறைய
கொண்டு வந்திருக்கிறார்
அவரைப் போலவே
தை இலைக்கென
காய்ந்தச் சருகுகள்!

ச.வாசுதேவன்



# பாரதியும் பெண்ணிய உயர்வும் – ஒரு பார்வை

**முன்னுரை :**

*ஆதியில் தமிழ்நூல் அகத்தியர்க் குணர்த்திய மாதொரு பாகனை வாழ்த்தும் வகையில் தென் பொதிகையில் தொன்றிய தமிழுக்கு வலுகூட்டிய சங்கப்புலவர்கள் தொட்டு இருபதாம் நூற்றாண்டு வாழ்ந்த மகாகவி பாரதி வரையும் இந்த தமிழ்மண் பல ஆளுமைகளின் பூங்காவாக இருந்து வருகிறது. இருபதாம் நூற்றாண்டு தமிழ் வரலாற்றிலேயே முக்கியமான காலம். ஏனெனில் ஆங்கில ஆதிக்கத்தை தனது கூர்மையான வார்த்தைகளால் குத்திக் கிழித்த உலகக்கவி பாரதியின் நூற்றாண்டு அது. பாருக்கு தீ போல் ஒளிகொடுத்தவன் பாரதி. பாரதி தொடாத பகுதி இல்லை. கவிதை, கட்டுரை, நாடகம், சிறுகதை, கதை, தொடர்கதை, கேலிச்சித்திரம் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி வாழ்ந்தவர். அந்த மகாகவியின் கவிதையில் உள்ள பெண்ணியத்தின் உயர்வையும், பெண்மையின் முக்கியத்துவத்தையும் இக்கட்டுரை தெளிவாக எடுத்துரைக்கின்றது.*

### பாரதியும் பெண்ணிய உயர்வும் :

பாரதி பெண்ணியத்தின் உயர்வுக்கு பாடிய உத்தமன். பெண்மை பேராண்மை மிக்கது. "பெண்ணே நீ உருகி வழியும் மெழுகுவர்த்தி அல்ல, உருக்கி வார்க்கப்பட்ட ஆயுதம்" என்ற நவீனக் கவிதை பெண்மையின் மேன்மையை நயம்படக் கூறுகிறது. பாரதியின் வழியில் பெண்ணியத்தை பார்க்கும் போது சமூகத்தின் ஆணிவேரே "பெண்மை" தான் என்கிற எண்ணம் மண்ணுக்கும் மலைக்கும் கூட வந்து விடும் என்பதில் எவ்வித மறுப்பும் இல்லை. பாரதி பெண்ணியச் சமுதாயத்தைக் கண்டு, பாதகச் செயல் உனக்கு நடக்கிறதென்றால் அதற்கு நீ பயம் கொள்ளக் கூடாது. உனக்கு நேரும் இன்னலைப் போக்கும் மனத்திடத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்கிறார்.

"பாதகம் செய்பவரைக் கண்டால்
நீ பயம் கொள்ளலாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா - அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா" (பாப்பா பாட்டு)

என்ற வரிகள் மகாபாரத காண்டீபனுக்குக் கண்ணன் கூறிய உபதேசம் போல் பாரதி பெண்மைக்குக் கூறுவதை எடுத்துரைக்கின்றது. "அந்நியம் சென்றாலும் கண்ணியம் மிக்கவர்கள் காரிகைகள்" எனும் முதுமொழிக்கேற்ப பெண்கள் எடுத்தகாரியம் யாவிலும் வெற்றி எங்கு நோக்கிலும் வெற்றி மற்றாங்கே என்று ஆனந்தக் களிப்பில் அறிவார்ந்த பெண்மையின் பெருமையைப் பேசுகிறான் மாகவி பாரதி.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செறுக்கும் இருப்பதால்
செம்மை மாதர் தியங்குவ தில்லையாம்" (புதுமைப் பெண்)

என்ற வரிகள் பெண்ணுக்கு உத்வேகத்தைக் கொடுப்பதோடு பயமின்மையையும் சொல்லிக்கொடுக்கின்றது. நிவேதிதையின் சீடனான பின்பு தான் பாரதிக்கே பெண்ணுக்கு சமயுரிமை கொடுக்கிற சிந்தனை விளைந்தது எனலாம்.

"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு" (திருக்குறள்,பொருள் – 382)

எனும் வள்ளுவனின் வேந்திற்குரிய இயல்பை பெண்கள் பின்பற்ற வேண்டுமென திறம்படக் கூறுகிறார். இந்த நிலம் மூன்று பக்கம் ஆழியாலும், ஒரு பக்கம் அழியாத மண்ணாலும் ஆனது எனும் தத்துவவியல் கருத்தியலை முன் வைத்து இவ்வுலகை சூழ்ந்துள்ள எழுபத்தைந்து விழுக்காடு ஆழி பெண்மையென்றும், பெண்மை பராசக்தியென்றும் உலக அரங்கில் உளப்பட எடுத்துரைக்கிறார். பெண்ணை காளிக்கு நிகராகவும், அணங்குக்கு நிகராகவும், கடவுளோடு ஒப்பிட்டுச் சொல்வதிலிருந்தே பாரதியின் பெண்ணிய உயர்வு நன்கு புலனாகிறது.

### பாரதியும் பெண்ணிய விடுதலை உள்ளீடுகளும் :

பாரதி என்றாலே பெண்ணிய விடுதலை தானென்று சொல்லுமளவிற்கு சிட்டுக்குருவியாய் பெண் விடுதலையைப் பட்டத்தில் ஏற்றியவன். ஆனால் "உள்ளீடு" என்ற சொல்லின் பொருண்மையை நோக்குங்கால், பாரதி கூறும் பெண் விடுதலைப் பின்புலத்தைப் பற்றிய வரலாற்றை ஆராய்தல் வேண்டுமென அறிவுருத்துவதாய் அமைந்துள்ளது.

"மாதர்க் குண்டு சுதந்திரம் என்றுநின்
வண்ம லர்த்திரு வாயின் மொழிந்தசொல்.........
சாதல் மூத்தல் கெடுக்கும் அமிழ்தமோ!
தையல் வாழ்கபல் லாண்டுபல் லாண்டிங்கே" (புதுமைப் பெண்)

என்ற புதுமைப்பெண் கவிதை வரிகள் பெண்ணியச் சுதந்திரம் பெசுவதாக உள்ளது. பெண்ணுக்கு நிறைந்த ஞானம் கொடுத்து படைத்துள்ளான் இறைவனென்று பீடுபெற பெண்ணினம் வாழ்கவென்று வாழ்த்துகிறார்.

"பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர் - நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்" (புதிய ஆத்திச்சூடி)

என்ற வரிகள் பெண்மையின் ஞானப் பின்னணியை விளக்குகிறது. பாரதி என்ற மானுடன் காண்பவை எல்லாவற்றிலும் பெண்ணிய விடுதலையைத் தலைமையாகக் கண்டவர். பிறந்த குழந்தையை பாரதி தாலாட்டும் பொதும் பெண்ணை உயர்த்திப் பார்க்கும் எண்ணம் பாரதி காலத்தில் வேறு யாருக்கும் வந்ததில்லை எனலாம். "என்னைக் கலி தீர்த்தே உலகில் ஏற்றம் புரிய வந்தாய்" இவ்வரிகள் பாரதியின் ஆழ்மனதில் அரிச்சுவடியாய் பதிந்துள்ளதை கவிதைகளின் வழி நம்மால் அறிய முடிகிறது. "விடுதலை இல்லா வாழ்வு வீண்" என்பதற்கினங்க பெண்மையில் விடுதலை உணர்வையும் உள்ளீட்டுப் பொருண்மையையும் நன்கு ஆராய்ந்து நாட்டின் விடுதலைக்கும், நங்கையர்களின் விடுதலைக்கும் பாடுபட்ட பாவலன் மகாகவி பாரதி. "கற்பெனப்படுவது சொற்றிரும்பாமை" என்கிறார் அவ்வை. அவ்வையின் அடியொற்றி கற்பின் நிலை பற்றி.,

"கற்பின் நிலையென்று சொல்ல வந்தார்,இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்

வற்புறுத் திப்பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்

வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்'' (விடுதலைக் கும்மி)

விடுதலைக் கும்மியில் பாடுகிறார். பெண்மையின் கருத்துச் சுதந்திரம் மட்டுமல்லாது கற்புச் சுதந்திரத்திற்காகவும் பாடுபட்ட பண்பாட்டுப் புலவன் பாரதி. பாரதியின் தேடல் பெண்மையின் விடுதலை உள்ளீடுகளை மெய்மைப் பொருளில் விளக்கி உரைக்கிறது. பாரதியாரின் பனுவல்களில் மட்டுமல்லாது அவரின் வாழ்விலும் பெண்மையை உயர்வு செய்திருப்பதைக் காணமுடிகிறது. புதிய ஆத்திச்சூடியில் ''தையலை உயர்வு செய்'' என்ற வைர வரிகளை முன்மொழிந்தவர். அது மட்டுமல்லாது அவரின் ஒவ்வொரு அசைவிலும் தனி நடை, தனி மொழி வெளிப்படுகின்றது. காதலியை வருணிக்கும் போதும் நாதம் தரும் யாழுக்கும் வீணைக்கும் ஒப்பாக்க் காட்டும் திறம் வியக்கத்தக்கது.

''வீணையடி நீ யெனக்கு ! மேவும் விரல் நானுனக்கு''

எனும் கவிதையே அதற்குச் சான்றாகும். பாரதியின் பெண்ணிய உயர்வும், வீறு கொண்ட தமிழ்ச் செறுக்கும் கவிஞனாக இருந்த ஒருவனை மாகா கவியாக்கியது என்றால் அது மிகையல்ல.

**முடிவுரை :**

காவல் தானே பாவையர்க்கு அழகு எனும் பழைய வாசகம் காற்றோடு கலந்து காலம் பலவானது. பெண் மனதால் மட்டுமல்ல உடலாலும் வலிமை படைத்தவள் என்ற பாரதியின் வாக்கு மெய்மையானது. பாரதியின் பெண்ணியச் சிந்தனையும், பெண்ணிய விடுதலை உணர்வும் போற்றுதலுக்குரியது. கவிதை மொழியாலும் கருத்துச்செறிவாலும் பெண்மைக்குக் குரல் கொடுத்த பாரதியின் பெண்ணியச் சிந்தனையை ''பாரதியும் பெண்ணிய உயர்வும் – ஒரு பார்வை'' என்ற கட்டுரை தமிழ் கூறும் நல்லுலகிற்கு எடுத்துரைக்கின்றது.


**உசாத்துணை நூல்கள்**


1. திருக்குறள்,புதிய உரை,புலியூர் கேசிகன்,பூம்புகார் பதிப்பகம்,26ம் பதிப்பு.
2. பாரதியார் கவிதைகள்,பதிப்பாளர். பா.சீனிவாசன்,விகடன் பிரசுரம்,சென்னை.
3. கவிஞர் சௌந்தரி கவிதை மேற்கோள்,திண்ணை இதழ் கட்டுரை.
4. ஔவையார் (கொன்றை வேந்தன், நல்வழி, ஆத்திச்சூடி, மூதுரை) மின் புத்தகம், மதுரைத் திட்ட நூல். இணையதளம் : htts/Madurai project, list of tamil books


**சா. கா. பாரதி ராஜா**

# அரசியல்

ஒருநாள்
அழுது விட்டுப் போக
ஒரு வாரமாக தொடர்கிறது
மக்களின் அழுகை
நீர் சூழ்ந்து
மக்கள்
வான் பார்த்து இருக்கின்றனர்
குடிநீர் வேண்டி
வான் ஊர்தியிலிருந்து
வீசியெறிந்த
பொட்டலம் ஒன்று
கிழிந்து சிதறிக் கிடக்கிறது
ஏரி யா?
ஏரியாவா?
பலர் கேள்விகள் கேட்க
இறுதி மூச்சைப்
பிடித்துக் கொண்டிருந்த
அலைபேசியில் விழுகிறது
வீட்டுக் கடனுக்கான
குறுஞ்செய்தி
வழிந்த
வியர்வையைத் துடைத்து
ஊரெங்கும் பார்க்கிறேன்
தூய மழைநீரும்
சாக்கடையாக மாறிவிட்டது.



ரகுநாத் வ, மதுரை

# கசிதல்

*உடைந்த அகல்விளக்கில்*
*ஒட்டியிருக்கும் ஒளி*
*புழக்கமில்லாத வீட்டிலொழுகும்*
*சிலந்தியின் பசை*
*வெட்டிய மரத்திலிருந்து*
*எட்டிப்பார்க்கும் முதல் துளிர்*
*கிழிந்த துணியிலிருந்து*
*பறந்தோடும் பஞ்சுப்பொனை*
*பிறமொழியில் யாசகர்*
*கூறிய நன்றியென*
*கசியவிடாமல் நீயொளித்து வைக்கும் பவித்ரப்*
*புன்னகை*
*போல இவைகளில் இருப்பதில்லை அச்சசல்!*

இரா. மதிராஜ்



# ஓதப் பழம்

“டேய் வேலு என்னடா ஒரு விசியமம்ன்னு சொன்னியே, என்ன லே அது”

“யோவ் நீரு அமைதியா வாரும்”

“....”

“இன்னைக்கிக் குளிக்கப் போறோம் அண்ணன்”

“எங்கலே?”

“வாழைத் தோட்டத்துக்கு தான் அண்ணன்”

ஆத்துப் பாசனம் இல்லாத அந்த வானம் பார்த்த பூமியில், அங்கொன்றும், இங்கொன்றுமாக கிணற்றுப் பாசன விவசாயம் கொஞ்சம் இருந்தது,

அதிலும் வாழை தான் போடுவார்கள்,

அந்த வெப்ப மண்டல தூத்துக்குடித் தேரி மண்ணில் கோடைக் காலத்தில் பம்பு செட்டில் மோட்டார் ஓடும் போது குளிப்பது தனி சுகம் தான்,

வேலு பய துடுக்கானவன், அவனுக்கு அணியாபரநல்லூர் போற வழியில வரும் புதுப்பட்டி தான் ஊர், இங்க அவங்க அம்மா வழி தாத்தா மாடசாமி கோனார் வீட்டுல தங்கி படிச்சிட்டு இருக்கான்,

ருசியானா புளியம் பழம் பறிக்க

சைக்கிள்ல போய் சிலுக்கம்பட்டி விளக்கு வந்து பத்தாம் நம்பர் புளிய மரத்தின் உச்சானிக் கொம்பேறி புளியங்காய் பறிப் பதில் கில்லாடி அவன் தான்,

“சரி மக்கா அப்போ எந்த தோட்டம்?”

“போரிங் செட் செல்வராஜ் நாடார் தோட்டமா?”

“யோவ் அதில்லையா”

“அப்போ எந்த தோட்டம்லே?”

“அகஸ்டின் நாடார் தோட்டம்ண்ணே”

“சரி,சரி,தாசன் அண்ணன் தோட்டம்ன்னு சொல்லு லே”

“யோவ் அப்படின்னு வைச்சுக் கோரும்வே”

அகஸ்டின் நாடார் மக்கள் பெயரின் கடைசியில் தாசன் என்றப் பெயரில் தான் முடியும்,அவங்க எல்லாருமே எங்களுக்கு அண்ணன்மார்கள் தான்,

தாசன் தோட்டம் பச்சைப் பச்சைரென்று இருக்கும், எப்பவும் ஆட்கள் குளிக்க வந்துக் கொண்டே தான் இருப்பாங்க, யாரையும் குளிக்க வேண்டாம் என்று சொல்ல மாட்டாங்க, எல்லாரையும் குளிக்க விடுவாங்க,

பகல் முழுவதும் பம்பு செட் ஓடும் அதனாலே எப்போ பார்த்தாலும் சட், சட் ன்னு மோட்டோர் சத்தம் கேட்டுடே தான் இருக்கும்,

அந்த குளுச்சிக்கும், மோட்டார் சத்திற்க்கும் கிட்டப் போனாலே சட்டையைக் கழட்டிட்டு உடனேக் குளிக்கன்னுப் போல இருக்கும்,

பள்ளிக்கூடத்துல முழு ஆண்டுப் பரீட்சை நடந்துட்டு இருந்துச்சி

ஒத்த ப் பட எண்கள் கொண்ட வகுப்புகளுக்கு(ஏழாம், ஒன்பதாம் வகுப்புகள் )மத்தியானமும்,

இரட்டை ப்படை எண்கள் கொண்ட (ஆறாம், எட்டாம், பத்தாம் )வகுப்புகளுக்கு காலையிலேயே பரிட்சை நடக்கிறதுனால,வேலு நானும் முறையே ஏழாம், ஒன்பதாம் படிச்சதனால

எங்க ரெண்டு பேத்துக்கும் மத்தியானம் தான் பரிச்சை,

அதனால காலையிலேயே தோட்டத்துல குளிக்கப் போயிட்டு,

சரியா படிக்காம மத்தியானம் பரீட்சிக்கு மட்டும் கரெக்டாப் போயிருவோம்

குளிக்கிற போல தோட்டத்துல எதையோ தேடிட்டு இருக்கிறான் இந்த வேலு பய

“ஏல வேலு என்ன செய்ற? “

“ யோவ் சும்மா இரும்வே கொஞ்ச நேரம்”

“....”

“ இந்தா புடியும் வே “

“ உங்களுக்கு ரெண்டு எனக்கு ரெண்டு “

“......”

“சீக்கிரமா வாயிலப் போட்டு சாப்பிம் ஒய்”

அவனுக்கு ரெண்டு வாழைப்பழம் சாப்பிட்டு எனக்கு இரண்டு வாழைப்பழம் கொடுத்தான்

இப்படியே தெனமும் குளிக்கப் போறோமோ இல்லையோ அந்த ஓத வாழைப்பழத்துக்காக தோட்டத்துக்குப் போக வேண்டியது ஆயிப்போச்சு

இதுக்கு பேரு தான் ஓதப்பழம் ன்னு சொல்லிச் சொல்லுவாங்க

வாழை மரத்தில் உள்ள வாழைக்காய்யைப் பறித்து

அதே வாழை மரத்துக்கு அடியில வாழ மட்டை, சறுகுகள் அடியில் ஒளிச்சு வச்சுருவோம்

பிறகு மூன்று நாள், நாலு நாள் கழிச்சு வந்து

நம்ம ஒளிச்சு வச்ச வாழக்காய் வந்து

நல்ல கனிச்சி சாப்பிடரதுக்கு ஏத்த மாதிரி பழுத்துதிருக்கும்,

ஊரார் வீட்டுத் தோட்டத்துல்ல களவானித்தனமா ஓதப்பழம் தின்னுட்டு இருக்கும்போது..

ஒருநாள் ரெண்டு பேரும் வாழைப்பழம் தின்னு முடிச்சு தொலிய த் தூரத் தூங்கி போட்டுட்டு வாய தொடைச்சிட்டு இருக்கோம் போது

தோட்டத்துக்கு வெளியே நடந்து வந்துட்டு

வாய்க்கால் ஓரமா அந்த தோட்டத்தோட

முதலாளி மகன் மூத்தவர் நிக்கிறாரு

எனக்கும் வேலுக்கும் அடி வரைக் கலங்கி போச்சு

களவாணி தனமா திங்கறது பெருசு இல்ல

அகப்படும்போது ரொம்ப அசிங்கமா போயிருது

பெரிய தாசன் அண்ணன் தான் பார்த்து

ஒரு மொரை, மொரைச்சாரு

ஏண்டா இப்படி பண்றீங்கன்னு கூட அவரு ஒரு வார்த்தைக் கூட கேட்கவில்லை

அவர் ஏதாவது திட்டிருந்தாலும்,அடிச்சுருந்தால் கூட நாங்க திருந்திருக்க மாட்டோம்..

இப்போதும் அந்த ஓதப் பழம் தின்ற வாழைத் தோட்டம் இருந்த இடம், தடம் தெரியாமல் ரியல் எஸ்டேட் உதவியால் கான்கீரிட் காடுகளாக காட்சியளிக்கிறது,



# தோற்றப்பிழை

“ஏண்டா ராமு வெள்ளென விடியும்போது மாடுகளை மேய்ச்சலுக்கு விட்டாத்தானேடா கொஞ்சமாச்சும் வயிறு நிறையும். ராத்திரியெல்லாம்

மடக்கிப்போட்டு படுத்துக்கிடந்ததுங்களுக்கு காலாறும்”

தொட்டிலில் தூங்கும் குழந்தைக்கு பால் கலக்கிக்கொண்டே கேட்டாள் தாமரை.

தாமரை. ஊர் பெரியவரின் பேத்தி.

ம்ம்ம்..... ராத்திரி பேஞ்ச மழைக்கு கொஞ்சம் அசந்து தூங்கிட்டேன்.. அவசர அவசரமாக மாடுகளை அவிழ்த்து மேய்ச்சலுக்கு கிளப்பிக்கொண்டே கூறினான் ராமு.

.ஏண்டா பனைஓலை வெட்டிப்போட்டு காயவெச்சு இந்தக் குடிசையை ஒழுகாம

கட்டுண்ணு போனமாசமே சொன்னேனே. இப்போ மழையும் பிடிச்சுடுச்சு என்னடா செய்வ.

“இருக்கட்டும் இருக்கட்டும்” அதுக்கும் கைல காசுபணம் வேணுமில்ல.

“அம்மாவுக்கு வைத்தியம் பார்த்ததே நிறைய கடனாகிடுச்சு. அம்மா பொழச்சா போதும்னு நினைச்சேன்”.

“நான் என்ன செய்வது. முனகிக்கொண்டே கிளம்பிவிட்டான் ராமு.

“சரி சரி உன் கஷ்டத்தைக் கேட்டு நான்தான் மனசு நொந்து போகணும். நீ கிளம்பு. வெரசா மாடுகண்ணை மேய்ச்சல்ல விடு”. எழுந்து உள்ளே போய்விட்டாள் தாமரை.

அவள் சமைச்சு முடிச்சுட்டு பக்கத்து ஊர் பள்ளிக்கூடத்துக்கு கிளம்பணும். அங்கே இருக்கும் ஒத்த டீச்சர் தாமரைதான்.

தாமரையை விட இரண்டு மூன்று வருடங்கள் சிறியவனாக இருப்பான் ராமு.

அவன் அந்த ஊருக்கு வந்த நாள் அவளுக்கு நன்றாக நினைவிருக்கிறது. அவன் அம்மாவின் புடவையைப் பிடித்துக்கொண்டு மூக்கொழுக நின்றுகொண்டிருந்தான். அவன் அம்மா அன்னம்மாள். தெற்கத்துப் பக்கம் ஊரென்று கூறினாள்.

“புருஷன் இல்லை. கைல மகனோட அனாதையாகிட்டேன் என்றாள். வயிற்றுக்கு சோரும் துணியும் கொடுங்க. எல்லா வேலையும் செய்வேன் என்றாள்”

சரி என்று கூறிய தாமரையின் தாத்தா..... ஊர் பெரியமனிதர் சுந்தரம் அவளுக்கு ஒரு குடிசையைப்போட்டுக்கொள்ள சொல்லி இங்கேயே இருந்து

வீட்டு வேலைகளைப் பாரும்மா என்று தயவு பண்ணினார். அன்றிலிருந்து அன்னம்மாள் தாமரை வீட்டு வேலைகளை தன்வீடாக நினைத்து செய்வாள்.

ராமுவையும் பள்ளிக்கூடத்தில் சேர்த்துவிட்டார். அவனும் தாமரைக்கு இரண்டு வருடம் கீழேயே படித்து முடித்து பட்டமும் பெற்றான். ஆனால் வேலைக்கு செல்லவில்லை. தாமரை மட்டும் ஆசிரியர் பயிற்சி பெற்று தேர்வு எழுதி ஆசிரியை ஆகிவிட்டாள்.

ராமு அரசாங்க வேலைதான் வேண்டுமென்று பிடிவாதமாக அரசுத் தேர்வுகள்

எழுதிக்கொண்டிருக்கின்றான். ஆனாலும் வீட்டில் சும்மா இருப்பதில்லை. ஒரு ஆண் செய்யவேண்டிய வேலைகளையெல்லாம் செய்வான். மாடுகளை அவிழ்த்து மேய்ச்சலுக்கு கூட்டிப்போவது. தண்ணி வைப்பது. மாடுகளைக் கட்டும் இடங்களை வீட்டு வேலை செய்யும் பெண்ணைவைத்து சுத்தம் செய்வது. பால் டிப்போவிற்கு பால் அளந்து ஊற்றுவது என அனைத்து வேலைகளையும் அவனே எடுத்து செய்வான்.

அன்னம்மாள் சில வருடங்களுக்கு முன் உடல்நலமில்லாமல் படுத்த பிறகு ராமுவின் வேலைகளைப் பெருக்கிக் கொண்டான். சும்மாவே உட்கார்ந்திருக்க அவன் மனம் இடம் கொடுப்பதில்லை. தன்குடும்ப செலவிற்கான பணத்தை தானே வேலை செய்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற தன்மானம். வாட்டசாட்டமான இளைஞன் ராமு. ஊரில் பல பெண்களின் கனவுகளில் வந்து தொல்லை செய்யுமளவிற்கு அழகானவன். ஆனால் அந்த எண்ணங்கள் அவனுக்கு மட்டும் இருந்ததில்லை. அவன் நிலை புரிந்து தன்னை கட்டமைத்துக்கொண்டவன்.

தன் தாய் என்ன நிலையில் இங்கே வந்தவள். தான் யார் என்று உணர்ந்து நடந்துகொள்வதில் ராமு உயர்வானவன்.

ஆனால் தாமரை மட்டும் அவனை வேலை சொல்லிக்கொண்டே யிருப்பாள்.

அவளுக்கு அவன் ஒரு நண்பனைப்போல என்பதைவிட அந்த வீட்டில் ஒருவனைப்போல நினைத்திருப்பவள்.

அதனால்தான் வாடா போடா என்றே பேசுவாள். ராமுவிற்கும் இதுவரை எந்த வித்தியாசமும் தோன்றியதில்லை. மாடுகளை மேய்ச்சலுக்கு ஓட்டிச்

செல்ல ஆரம்பித்த ராமு அங்கே சென்று அவனுக்கே அவனுக்கான இடமாக வைத்துள்ள ஆலமரத்தினடியில் படிப்பதற்காக சில புத்தகங்கள் கொண்ட தோள்பையை மாட்டிக்கொண்டு தன்வாழ்வில் திடீரென்று உருவான மாற்றங்களை நினைத்துக்கொண்டே நடக்கிறான்.......

6 மாதங்களுக்கு முன்பு நடந்த அனைத்தும் அவனால் இன்றும் நம்பமுடியாதவைகளாகவே உள்ளன.

ஊர் பெரிய மனிதரான சுந்தரம் ஆசிரியை வேலை செய்யும் தன் ஒரே பேத்தி

தாமரையை சொந்தத்திலேயே அதிகம் படித்த மாப்பிள்ளையென சொந்த அக்கா பேரன் தேவநாதனுக்கு மிகவும் விமரிசையாக திருமணம் செய்து கொடுத்து விருந்தினர்கள் புடைசூழ சீதனமாக தான் வாங்கிக் கொடுத்த புத்தம் புதிய காரில் அனுப்பிவைத்துவிட்டு கண்களைத் துடைத்துக்கொண்டே

"ஏண்டா ராமு எல்லா கணக்கு வழக்குகளையும் முடித்துவிட்டாயா? என்று

கேட்டார்,

அவர் பேத்தி கல்யாண வேலை மொத்தமும் எடுத்து செய்தவன் ராமுதான்.

பிள்ளையில்லாத வீடு என்பதே தெரியாமல் அனைத்தையும் கச்சிதமாக செய்து முடித்துவிட்டான். அது அவன் அம்மா கூறிய வார்த்தை. நமக்கு நிறைய செய்யும்

குடும்பம். நன்றியோட நடந்துக்கப்பா என்று ஈனசுரத்தில் முனகிக்கொண்டே கூறினாள்.

அவனுக்கும் அந்த எண்ணம் அதிகமுண்டு என்பதால் முழு ஈடுபாட்டோடு செய்தான். எல்லா வேலையும் முடிந்துவிட்டதுங்க அய்யா என்றான் ராமு

"சரி சரி நீயும் போய் உன் அம்மாவைப் பாரு"

"பாவம் இரண்டு நாட்களாக அவளை உன்னால் கவனிக்க முடியலையே" என்று கூறிவிட்டு துண்டை தோளில் போட்டுக்கொண்டு வெளியே செல்லக் கிளம்பிச் சென்றுவிட்டார் சுந்தரம். ராமுவும் தன் குடிசைக்குச் சென்று அம்மாவை எழுப்பி கஞ்சியும் மருந்தும் கொடுத்துவிட்டு அக்கடா என்று அரசுத் தேர்வுக்கான புத்தகத்தைக் கையில்

எடுத்துக்கொண்டு அமர்ந்துவிட்டான்.

இரண்டு வாரம் கழித்து ஒருநாள் விடியற்காலை தாமரையிடமிருந்து அவள் தாத்தாவிற்கு போன். என்னவோ ஏதோ என்று பதறிய சுந்தரம் "என்னம்மா? என்னாச்சு என்றார்.

"தாத்தா என்னை வந்து உடனே வீட்டுக்கு கூட்டிப்போங்க. இல்லையென்றால் நான் செத்துடுவேன்" என்றாள் தாமரை.

"என்னம்மா விவரமாக சொல்" என்றாலும் கூறவில்லை.

உடனே ஒரு வாடகைக்காரை அமர்த்திக்கொண்டு பேத்தி வீட்டிற்கு சென்றார் சுந்தரம்.

தன் தாத்தாவைக் கண்டவுடன் ஓஓவென்று கதறி அழுதுகொண்டே "வாங்க தாத்தா நம்ம வீட்டுக்குப்போகலாம்" என்றாள் தாமரை.

"என்னம்மா? என்ன நடந்தது என்று விசாரித்தார் சுந்தரம்.

இங்கே வந்து இரண்டு நாட்கள்தான் தாத்தா அவர் என்னோடு இருந்தார். பிறகு வேலைக்குப் போகிறேன் என்று சென்றவர்தான் திரும்ப வரவேயில்லை. அத்தையிடம் கேட்டால் எந்த பதிலுமில்லை.

"அக்கம்பக்கத்தில் ஏதேதோ பேசினாங்க. பிறகு இன்று வரை வரவில்லையென்று நேற்றிரவு அத்தையிடம் கேட்டேன். அவங்க அழுதுகொண்டே அவருக்கு ஏற்கனவே வேலைசெய்யுமிடத்தில் கல்யாணமாகி மனைவி குழந்தையிருக்காம். என்னிடம் மறைத்துவிட்டான். என் தம்பிப் பேத்தியாச்சே என்று ஆசையாகத்தான் உன்னைத் திருமணம் பண்ணிவைத்தேன் என்று சொல்லி அழுறாங்க தாத்தா என்றாள்.

உங்களுக்கு எப்படி இப்பொழுது மட்டும் தெரியவந்தது என்று கேட்டேன் தாத்தா.

அவனே சொன்னான்மா ! என்னைத் தேடாதீங்க....... நீங்க என்னிடம் கேட்டு

எனக்கு கல்யாணம் பண்ணிங்களா என்று கேட்கிறாராம் தாத்தா என்று கூறிவிட்டுகதறி அழுதாள் தாமரை.

"ஓஓ என்று அப்படியே நெஞ்சைப் பிடித்து அமர்ந்தவர்தான் சுந்தரம் மீண்டு

எழவேயில்லை.

சில மாதங்கள் கடந்த நிலையில்.....

திடீரென்று ஒருநாள் இரவு அன்னம்மாள் மகனை அழைத்தாள். "என்னம்மா?

என்றான் ராமு.

"அம்மா சொல்வதைக் கேட்பியா ராமு........"

. நீ தாமரையைக் கல்யாணம் பண்ணிக்கொள்! என்றாள். அதிர்ச்சியிலிருந்து மீளாத ராமு

எப்படிம்மா? அவங்க வேறு ஒருத்தர் மனைவி."

முழுகாம இருக்காங்க. இந்த நிலையில் நான் எப்படி கல்யாணம் பண்ணுவது என்றான்.

"ஆமாம் ராமு நீ அந்தப்பொண்ணைக் கல்யாணம் பண்ணலைன்னா அவளுக்குப்

பிறக்கும் குழந்தையும் உன்னைப்போலவே இந்த சமுதாயத்தில் அப்பா இல்லாமல் கஷ்டப்படும்பா"! என்றாள் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர்.

ஏன்மா? என்றான் ராமு.

இதுவரை என்னுள் வைத்திருந்த ரகசியத்தை இன்று உனக்கு மட்டும் சொல்லவேண்டிய நேரம் வந்துவிட்டதுப்பா. நீ வேறு யாருமில்லை.

நம்ம பெரியவர் இருந்தாரில்லையா.... அவருக்கு ஒரு மகன் இருந்து திருமணமாகாமலேயே செத்துப்போய்ட்டார் என்று கூறுவாங்களே உனக்கும் தெரியும்தானே என்றாள். ஆமாம்மா... கேள்விப்பட்டிருக்கிறேன்.

அவர் திருமணம் பண்ணிக்கொள்ளாமலேயே இறந்தது உண்மைதான். ஆனால் என்னை திருமணம் பண்ணிக்கொள்கிறேன் என்று கூறினார். எங்களோட விதி நடக்கவில்லை. வீட்டில் அப்பாவிடம் சொல்லிவிட்டு வந்து உன்னை அழைத்துப்போகிறேன் என்று கிளம்பி இங்கே வந்தார். திரும்பி வரவேயில்லை. நீயும் பிறந்துவிட்டாய். சில வருடங்கள் காத்திருந்தேன்.

என்னோட ஊரில் எல்லோரும் அப்பன் பேர் தெரியாத பிள்ளை என்று உன்னை பேச ஆரம்பிச்சாங்க. என்னையும் குத்திக் கிழித்து அழவைத்தார்கள். பிறகுதான் நான் ஒரு முடிவெடுத்து உன்னையும் அழைத்துக்கொண்டு இந்த ஊருக்கு வந்தேன்.

இங்கே வந்தபிறகுதான் தெரிந்தது. அவருக்கு சின்ன வயசுலயே இருதய நோய் இருந்ததாம். இங்கே வந்தபிறகு அதிகமாகி வைத்தியம் பார்த்தும் சரியாகாமல் இறந்துவிட்டாராம். நானும் என்னிலையை யாரிடமும் கூறவில்லை.

"நீ வளர வளர பெரியவர் எப்படியோ உன்னைப் பார்த்து சந்தேகப்பட்டு என்னிடம் ஒருநாள் கேட்டார். அவரிடம் மறைக்கத் தோன்றவில்லை. அதனால் உண்மையைக் கூறினேன். ஆனால் நான் எந்த உரிமையும் உங்களிடம் கேட்கமாட்டேன். எனக்கு ஒரு ஆதரவு மட்டும் இருந்தால் போதும் என்று கூறினேன்.

அவர் மனம் நிறைந்து என்னை வாழ்த்திவிட்டு சரிம்மா உன் விருப்பம் என்று

கூறிவிட்டார். உனக்கும் கடைசிவரை தெரியவேண்டாமென்று கேட்டுக்கொண்டேன்.

ஆனால் விதி என்னையே உன்னிடம் சொல்ல வைத்துவிட்டதுப்பா என்று மகனின் கையைப் பிடித்து கதறி அழுதாள் அன்னம்மா. அமைதியாக அனைத்தையும் கேட்டுக்கொண்ட ராமுவிற்கு என்ன சொல்வதென்று

தெரியாமல் மௌனமாக அமர்ந்துவிட்டான். இத்தனை வருடங்கள் தன் தந்தை யாரென்று தெரியாமல் வாழ்ந்துவிட்டான். தெரிந்தபோதோ அதையும் வெளியே கூறமுடியாத நிலை. இதுதான் வாழ்க்கை என்றால் என்ன செய்வது என்று மனதை ஆறுதல் படுத்திக்கொண்டு.... கண்களில் கண்ணீர் வழிய நிமிர்ந்தவன்..."அம்மா தாமரை என்னைவிட பெரியவங்க... அதுமட்டுமில்லை. வேறொருவர்

மனைவி என்றான்.

"அதெல்லாம் ஒரு விஷயமில்லைப்பா". உனக்கேதும் மனசு ஏற்கலையா என்றாள்.

"சே சே அப்படியெல்லாம் இல்லைமா! என்றான் ராமு.

" அப்படியென்றால் சரி நீ தாமரையைக் கூப்பிடு. நான் பேசுகிறேன்" என்றாள்.

அவ்வளவு பெரிய வீட்டில் யாருமில்லாமல் தனிமையில் இருக்கும் தாமரை அவன்

அழைத்ததும் வந்து அன்னம்மாள் அருகே அமர்ந்தாள்."ஏன் அன்னம்மா கூப்பிட்டிங்க........

நான் ஒன்னு சொன்னா கேட்டிபியா சின்னம்மா!

"சொல்லுங்க"

நீ என் மகன் ராமுவைக் கல்யாணம் பண்ணிக்கொள்கிறாயா?

திடுக்கென்று அதிர்ந்த தாமரை அமைதியாக ராமுவைப் பார்த்தாள்.

"அவன் என்ன சொன்னான்".

அவன் என்ன சொன்னாலும் எனக்குக் கவலையில்லை. நான் கண்ணை

மூடுவதற்கு முன் உனக்கு நல்லது பண்ணணும் என்றாள் அன்னம்மாள். அங்கே சில நிமிடங்கள் அமைதிதான் நிலவியது.மீண்டும் அன்னம்மாள் "ஏம்மா அவன் ஏழை என்று நினைக்கின்றாயா?

"சே சே அதெல்லாம் இல்லை அன்னம்மா"

"சாதி குலம் தெரியலையே என்று நினைக்கிறாயா? என்றாள் அன்னம்மாள்.

"ம்ஹும்"

வேறு என்னம்மா? என்றாள் அன்னம்மாள்.

“ராமு ஏதும் பேசலையே என்றாள்” தாமரை.

அதுவரை அனைத்தையும் கேட்டுக்கொண்டிருந்த ராமு மெதுவாக முகம் நிமிர்ந்து

எனக்கு சொல்வதற்கு ஒன்றிருக்கிறதும்மா என்றான்……

என்னப்பா? என்றாள் அன்னம்மாள் நான் இந்த வீட்டில்தான் இருப்பேன்……

“அவங்க மட்டும் வந்தால் போதும். அவங்க சொத்து பணம் நகையெல்லாம் எனக்கு வேண்டாம் என்றான்.

திடீரென்று அன்னம்மாள் முகத்தில் சிறு புன்னகை.

“நான் நினைத்ததைத்தான் நீ கூறுகிறாய் ராமு. உன்னை நினைத்து நான் பெருமைப்படுறேன்ப்பா என்றாள் அன்னம்மாள்.

“ஏன் எதுவும் வேண்டாம்? என்றாள் தாமரை.

“பிற்காலத்தில் இந்த சொத்துக்காகவும் பணம் நகைக்காகவும் உங்களை நான் திருமணம் செய்து கொண்டதாக யாரும் நினைக்கக் கூடாது.

“நான் உங்களுக்காகவும் குழந்தைக்காகவும் உங்களைத் திருமணம் செய்துகொள்கிறேன்” என்றான்.

அமைதியாக அவனையே பார்த்துக்கொண்டு சிறிது நேரம் அமர்ந்திருந்த தாமரை மெல்ல நிறைவயிற்றோடு அவன் கைகளை நோக்கித் தன் கையை நீட்டினாள். ஆறுதலாக அவள்கையைப் பிடித்த ராமு அமைதியாக தன் தாயையே பார்த்துக்கொண்டிருந்தான். அங்கே வீசிய மெல்லிய காற்றில் பல உண்மைகளும் கலந்து மறைந்துவிட்டது.

இருவரையும் பார்த்து கண்களில் நீர்வழிய மூச்சுத் திணறப் படுத்திருந்த அன்னம்மாள் அந்த நிகழ்விற்குப் பிறகு வெகு நாட்கள் உயிரோடு இல்லை.அவன் திருமணம் செய்ததைக்கூட அன்னம்மா பார்க்கவில்லை. அந்த எளிய மனுஷியுள் இருந்த உயர்ந்த இதயம் தன் நிம்மதியைத் தேடிக்கொண்டது. அனைத்து சொத்துக்களையும் பக்கத்து ஊரில் உள்ள ஒரு இலவச முதியோர் இல்லத்திற்கும் அரசு பள்ளிக்கூடத்திற்கும் எழுதிக்கொடுத்த தாமரை அந்தக் குடிசை இருந்த இடத்தை மட்டும் தனக்காக வைத்துக்கொண்டாள். அதுவே அவளின் கனவு மாளிகையாக, ஊரார் மெச்ச சந்தோஷமாக இன்றும் வாடாப் போடா என்று ராமுவை மிரட்டிக்கொண்டிருக்கும் டீச்சராகவேஇருக்கின்றாள்.

சே கார்கவி கார்த்திக்

# நீட்சியடையும் வெய்யிலில் புன்னகையுறும் புத்தன்

பாதம்படும் இடமெல்லாம்
கானல் நீரில் நான்கள் அனலாய்
முளைத்தெழுகிறேன்
பேருந்து நிலையங்களில் காத்திருக்கும்
வேளைகளில் கையில் படர்ந்த கோப்புகளுக்கும்
வயதேறிக்கொண்டே போகிறது
அருகில் அமர்ந்த பொம்மைக்காரனின் உதாரண
பொம்மையின் புன்னகை தலையாட்டலைப்
போல்……

மிடறு நிரம்பி வார்த்தைகள் உமிழத்தயாராகும்
பொழுது
ஆசன வாய்த்திறந்து
மொத்தமும் அமைதிக்குள்ளாகி
ஆத்திரங்களை முதுகின்பின் சுமந்து பறக்கிறது
காற்றிடைவெளி பறவையொன்று
எத்தனைமுறை வெண்மையாகிருப்பான்
தலைக்கவசிமிடாத புத்தன்….

நான் கடக்கின்ற வழியெல்லாம்
யாரோ ஒருவரின் முகத்தில்
சிரித்து நகர்கிறான் புத்தன்
ஏழையென குத்திக்காட்டி
ஆரன் அடித்துக் கொண்டே
தலையாட்டி நகர்கிறான் குபேரன்
இருவரும் வெய்யிலின் நீட்சியில்
உள்ளே வெளியே ஆடித்திரிகின்றனர்…

இருக்கின்ற சில்லரைகளில் சிற்றுண்டி
பருகி அமர்கிறேன்
என்னையறியாமலே
சம்மளமிட்ட வெய்யிலின் நடுவே புத்தனென
அவன் அந்த சாலையை கடந்திருக்க வேண்டும்
என்னுள் பிரதியிட்ட அவனை இங்கேயே
விட்டுவிட்டு…..

## மகிழை.சிவகார்த்தி

நேற்று
என்னிடம் சிரித்தார்
இன்று
அவனிடம் சிரிக்கிறார்
நாளை
யாரிடமோ
ரூபாயில் காந்தி!

◎

சொந்தமும் இல்லை
பந்தமும் இல்லை
ஆனாலும்
ஆசிர்வதித்து
அனுப்புகிறது...
''யானை'!

◎

பல
புத்தகங்கள்
முடங்கி போய்
கிடக்கின்றன
மூளைக்குள்!
அவளை
பார்க்காததால்...!


◎

மூடிக்கிடந்த
புத்தகங்கள்
படபடக்கின்றன...
அவளைப்
பார்த்ததும்..!

◎

வெற்றிடமாய்
இருந்த எனக்குள்
காற்றாய்
உள் புகுந்தாள்
அவள்
ஒரு இலட்சம்
கவிதைகளோடு!

◎



மறக்குமா நெஞ்சம்
மறக்கவே முடியாது என்று
அன்று நீ சொன்னதை
மறக்க முடியாமல்
தவித்துக் கொண்டிருக்கிறேன்
நான்!
மறந்துவிட்ட நீ
எங்கு இருக்கிறாயோ!

## பெ. விஜயலட்சுமி, காஞ்சிபுரம்

குழந்தை தொட்டதும்
ஆழ்ந்து உறங்குகிறது
பூனை

◎

வீடுகளை வரவேற்க
காத்துக்கிடக்கிறது
மலிவு விலையில் வாங்கப்பட்ட வீடு

◎


காற்று தாலாட்ட
கிணற்றுக்குள் உறங்குகிறது
வானம்



## ஜெ.பி. ஆதிரன்

ஓடும் நாய்
குனிந்து எதையோ
தேடும் பாவனையில்
கல் எதுவும் கிடைப்பதில்லை!
கிடைத்தாலும் எறிவதில்லை...
இருப்பினும் ஓடுகிறது நாய்!
அதன் பயத்தினை ரசித்தபடி
ஒலிக்கும் அலைபேசியை எடுத்தேன்//
மேலாளரின் அழைப்பு!
அதே யுக்தி!
இம்முறை ஓடுவது நாய் அல்ல...
நான்!

## வட்டக்கச்சி வினோத்



பேரூந்தில் ஏறினேன்....
பட்ட பெருங்கவலை ஓதினேன்
திருவிழா கூட்டத்தோடு
ஒலிக்கும் இசைப்பாட்டு
நடத்துனர் உள்ளே அழைக்க
மெல்ல அடிகழித்தேன் உள்ள

என் கையில் பொதியோடு
தள்ளாட
தன் கையில் பில்லோடு
நடத்துனர் பின்னால
பணப்பைய எடுக்க
கைப்பை கீழ விழ
சடக்கென ஓட்டுநர் பிறேக் போட
பின்னே தள்ளாடி நான் முன்னே சாய
முன்னே இருந்த ஐய்யாவின் முழங்கை மூக்கை
பதம் பார்க்க
பக்கத்து இருக்கையில்
இருந்த பிள்ளை ஆங்கிலத்தில் திட்ட
பாவம் அது என்ஜியோவில் வேலைபோல

சற்றே நகர்ந்து முன்னே போக
சமூக சேவை உத்தியோகத்தர்
இருக்கையில் இருக்க
பக்கத்தில் கிழவி நடுங்கிய படி நிற்க
கச்சான் வியாபாரி ஊடறுத்து வர
வான் வெளியில் பறக்க
பேருந்து மின்னல் போல் பாய
வாயடைத்து எல்லோரும்
பயத்தோட இருக்கைய பிடிக்க

பல நறுமணமும்
சில மதுசார வாசகமும்
கலந்து சுவாசத்தை அடைக்க
யன்னல் வழியே
மழைச் சாரல்போல
எச்சில் துளிகள் பறக்க
கேட்பார் அற்று
சாளரம் மூடித் திறக்க
உறக்கத்தில் இருந்தவர்
தலையை அது பதம் பார்க்க
புதிய வார்த்தைகள் மொழியில்
கலக்க

கிழவனை ஏற்றாத பேரூந்துகள்
குமரிகளுக்காக காத்திருந்தது
தரிப்பிடத்தில்

# மணிமேகலை சரவணன் கவிதைகள்

*1.*

## அலைபேசி அம்மாக்கள்

உறங்கும்போது கூட அவள் அருகில்
உயிர்த்திருக்கிறது அலைபேசி
நேரம் கிடைக்கையில் அம்மா என அழைக்கும்
நேரத்தில் அழைத்தவுடன்
உடன் எடுத்து பேசுவதற்காக மட்டுமல்ல.
உழைக்கும் நேரத்தில் கூட அவள் கழுத்தில்
ஊஞ்சல் ஆடிக்கொண்டு
இருக்கிறது அவளின் அலைபேசி
தன்னைக் கூப்பிடும் நேரத்தில் உடன்
எடுத்து பேசுவதற்காக மட்டுமல்ல
அவர்களுக்காக துடிக்கும் அவள்
இதயத் துடிப்புகளை ரிங்டோன் ஆக்கி
தொடர்பு எல்லைக்கு அப்பால் இருப்பவர்களை
இன்னும் தொடர்பில்
வைத்திருக்கின்றன அம்மாக்களின்
கையில் உள்ள அலைபேசிகள்

*2.*

தொலைந்த என் பால்யங்களில்
அவள் நிரம்பி இருந்தாள்..
என்னோடு உப்பு மூட்டை விளையாடி
பச்சைக் குதிரை தாண்டி
தட்டாமாலை சுற்றி
சொட்டாங்கல் விளையாடி
கிட்டிபுள் விளையாடி
பாண்டி விளையாடி
ரயில் வண்டி ஓட்டி
பம்பரம் விட்டு கோலி அடித்து
கல் கோனா மிட்டாயை
காக்காய் கடி கடித்தவள்
திடீர் என ஓர் நாள் மரணித்தும் போனாள்
என் பால்யமும் அவளோடு சேர்ந்தே
மரணித்துப் போனது

*3.*

புதைந்த கனவினில்
நெருப்புபோல் சிவந்த
நீள் கணங்களில்
துயின்றிருந்தேன்.
விரிந்த கூந்தலின்
சுகந்தம் கனவிலும்
என் நாசி தொட
ஏதோ ஒரு உலகில்
மிதந்திருந்தேன்..
ஏதுமறியாகுழந்தையாய்
என் மாயா உலகினில்
இருந்திருந்தேன்
இருந்தபோதும்
விடிகாலை எழும்போது
மறக்கமுடியாக் கனவின்
தொடர்ச்சியோடு என் உலகு
விழித்தெழுந்து என்னோடு
உடன் வந்தது.என்ன செய்ய !!!!!!!!

*4.*

பல நிறத்தொடு
சிறகசைத்தொரு
பறவை பறந்திட,
உறவெனப்படும்
உலகு சூழ்ந்திட
இரு தூண்களாய்
தாங்கிப்பிடித்திட
நட்பு இருந்திட
வாழும் நாட்களில்
பேச மறந்திடும்
வார்த்தை நமைச்
சுற்றிப் பறந்திட
நீயும் நானுமாய்
வாழும் வாழ்க்கையில்
அமைதி நிலவிட
தீதும் நன்றும் எனைத்
தொட்டுத் தொடர்ந்திட
இதுவும் கடந்து போகும்
என்ற எண்ணம் போதுமே
இந்த மண்ணில் வாழ்ந்திட.

மஞ்சு மோகன், வன்கூவர்

# பனி படர்ந்த மலையின் மேலே...



மூசிப்பெய்யும் மாசிப்பனி என்பார் அங்கே,
மூழ்குகிறோம் இந்த மூடுபனியால் இங்கே!
"பனிபடரந்த மலையின் மேலே
படுத்திருந்த காளையவன்,
பாவையொருத்தி வந்தாளாம்
பக்குவமாய்க் கதைசொன்னாளாம்."

இங்ஙனம் சிலகவி வரிகள்,
எங்கோ கேட்ட நினைவலைகள்.
சொப்பனம் தான் கண்டானா? இவன்,
சொக்கித்தான் போனானா?
கவிஞர் சொன்ன வரிகள் நன்று.
இளைஞர் இளமை கரையுது இன்று.

கொட்டும் பனியில் குளிர்காய்ந்திட
கடுகளவும் உணர்வுகள் மீதமில்லை.
கோமகன் இங்கு கனவுகண்டிட
கண்களுக்கும் கூட வரமில்லை.
கடைவாய் போட்டு செமித்திட
கால்களுக்கும் நிற்க நேரமில்லை.

நனவில் வந்த நங்கையர் கூட
நானா நீயா என நச்சரிக்கும்
நரக வாழ்க்கை தான் என்ன?
பட்ட கடனை முடிக்கவென்று
பகலிரவாய் பட்டையடித்து
பம்பரமாய் சுழரும் இந்த
பாழாய்ப்போன வாழ்வுதான் என்ன?

மனிதம் இந்த உலகத்தில்
மகத்தான உயர் பிறவியாம்!
மாடாய் உழைக்கிறான் பல
மணிக்கணக்காகத்தான்...!
புனிதமான இந்த பிறவியிலே
பெற்றிட வேண்டும் விடுதலையே!


# முந்தைய இதழ்கள்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
வைகாசி - 2022


சித்திரை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்



காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மார்கழி - 2021


மாசி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஆடி 2019


காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
ஐப்பசி 2019


தை - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ்


காற்றுவெளி
மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் - 2020


பங்குனி - 2022
காற்றுவெளி
கலை இலக்கிய இதழ்